# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 2020

www.tnpscthervupettagam.com


















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ....................8
தமிழ்நாடு செய்திகள் ....................17
A.L. சோமயாஜி ....................17
தியா மற்றும் ஈழவா சமூகம் ....................17
பாரதி உரையின் 100வது ஆண்டு ....................17
சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களை மறுபெயரிடல் ....................18
சா. கந்தசாமி ....................18
அம்மா பிளாட்டினம் பிளஸ் சுகாதாரத் திட்டம் ....................19
தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி ....................19
முதலமைச்சரின் சிறப்பு விருது ....................20
அம்மா கோவிட் – 19 ஹோம் கேர் திட்டம் ....................22
ஜல் ஜீவன் திட்ட ஆய்வு ....................22
“ஒரு மாவட்டம், ஒரு பொருள்” என்ற திட்டத்தின் கீழ் மஞ்சள் ....................22
முத்ரா கடன் திட்டத் தரவரிசை ....................23
தேசியச் செய்திகள் ....................23
தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020 ....................23
NEP-2020ன் கீழ் ஆணையங்கள் / பாடத் திட்டம் ....................25
இந்தோ இஸ்லாமிய கலாச்சார அறக்கட்டளை ....................26
AIM iCREST ....................26
முகுந்தகம் சர்மா குழு ....................27
கிராமோத்யோக் விகாஸ் யோஜனா ....................27
ஸ்காச் தங்க விருது ....................27
பாரத் காற்றிழை சேவைகள் ....................27
சீன மொழி ....................28
100வது நினைவு தினம் - திலகர் ....................28
ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் (SIH) 2020 ....................28
வித்யார்த்தி விக்யான் மன்தன் ....................29
பிரதீப் ஷா குழு ....................29
வரையறுக்கப்பட்ட (தரப்படுத்தப்பட்ட) போக்குவரத்து வாகன அளவுகள் ....................29
மின்னணுத் தடுப்பு மருந்து நுண்ணறிவு அமைப்பு (Evin) ....................29
பாதுகாப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை, 2020 ....................30
முதலாவது வியாப்பர் மாலா விரைவு இரயில் ....................30
கோவிட் – 19BWM செயலி ....................31
ராம் மந்திர் – அடிக்கல் நாட்டு விழா ....................31
SIH 2020 ....................32
இந்தியாவின் புதிய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் ....................32
இந்திய நீர் வள தகவல் அமைப்பின் புதிய பதிப்பு ....................32
உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி முதல்வர்களுக்கான நிகழ்நேர பயிற்சித் திட்டம் ....................32
என்வின்டாட்ஸ் இந்தியா 2020 அறிக்கை ....................32

கைத்தறித் திட்டத்திற்கான கைபேசிச் செயலி மற்றும் இணையதளம் ... 33
கடலுக்கு அடியில் கண்ணாடி இழை வடம் ... 33
டேபிள்டாப் விமான நிலையங்கள் மற்றும் கோழிக்கோடு நிகழ்வு ... 34
101 பாதுகாப்புத் துறை உபகரணங்கள் இறக்குமதி மீதான தடை ... 34
ஏர் சுவிதா தளம் ... 35
கண்டகி முக்த் பாரத் ... 35
தேசிய உள்கட்டமைப்புத் தொடரின் தகவல் பலகை ... 35
தேசிய யானைகள் திட்ட இணைய வாயில் ... 36
மகள்களுக்குச் சம வாரிசு உரிமை ... 36
பழங்குடியின விடுதலைப் போராட்ட வீரர்களின் அருங்காட்சியகங்கள் ... 37
கட்டிடக் கலைக் கல்வி ஒழுங்குமுறைகளின் அடிப்படைத் தரம், 2020 ... 37
புதிய இரயில்வே அருங்காட்சியகம் ... 37
ஆத்ம நிர்பர் வாரக் கொண்டாட்டம் – ஆகஸ்ட் 7 முதல் 14 வரை ... 38
இந்தியாவின் முதலாவது மின்னணு – லோக் அதாலத் ... 38
பருத்தி ஆலோசனை வாரியம் ... 38
இந்தியா @ 75வது மாநாடு – திட்டம் 2022 ... 39
இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பை நிறுவிய நாள் ... 39
ராம மந்திர் கட்டுமானத்திற்கான அடித்தளம் ... 39
காட்ரா – தில்லி விரைவுச் சாலை பெருவழிப் பாதை ... 40
தூய்மை இந்தியா இயக்க நிறுவனம் ... 40
தகவல் தொழில்நுட்பத் துறையின் புதிய தளம் ... 40
வேளாண் நிறுவனங்களுக்கான இணையவழி அங்கீகார முறை ... 40
ஆத்ம நிர்பர் செயலி புத்தாக்கப் போட்டி - வெற்றியாளர்கள் ... 41
தடுப்பூசி நிர்வாகம் குறித்த தேசிய நிபுணர் குழு ... 41
தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டம் ... 42
நீண்ட காலமாகப் பணியாற்றும் காங்கிரஸ் கட்சி அல்லாத பிரதமர் ... 42
அம்ருத் திட்டத் தரவரிசை ... 43
கடல்சார் ரோந்துக் கப்பல் - சர்தாக் ... 44
15 பாதுகாப்புப் பொருட்கள் தொடங்கி வைப்பு ... 44
சுவஸ்தியா தளம் மற்றும் மின்னணு செய்தி மடல் ... 45
எல்லைப் பகுதிகளில் NCC ஈடுபடுத்தப்படல் ... 45
அடல் சுரங்கப் பாதை ... 46
வெள்ள முன்னறிவிப்பு முன்னெடுப்பு ... 46
ATL AI Step up தொகுதி ... 47
இயற்கை விவசாயத் தரவரிசை ... 47
"SRIJAN" ஆன்லைன் தளம் ... 47
தேசியப் பொதுக் கொள்முதல் மாநாடு ... 47
பிரஞ்சு - புதிய பாடப்பிரிவு ... 48
இலட்சிய மாவட்டங்களில் ஆரக்கிள் கிளவுட் என்பதின் பங்களிப்பு ... 48
பிரதமரின் 74வது சுதந்திர தின உரை ... 48
இ பாத்ஷாலா - ஒரு வலைதளம் ... 49

மக்கும் முகக் கவசம் மற்றும் உடல் கவச உறை ..... 49
கடற்படைப் புத்தாக்கம் மற்றும் சுதேச அமைப்பு ..... 49
விலைக் கண்காணிப்பு மற்றும் வள அலகு ..... 50
கூகுள் பணிகள் ..... 50
உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப் கூட்டு கண்காணிப்புத் திட்ட அறிக்கை ..... 50
புத்தாக்கச் சாதனைகள் மீதான கல்வி நிறுவனங்கள் குறித்த அடல் தர வரிசை ..... 51
தேசியத் தேர்வு முகமை ..... 52
தேசியப் புற்றுநோய் பதிவுத் திட்ட அறிக்கை, 2020 ..... 53
அடல் பிமித் வியக்தி கல்யாண் யோஜனா ..... 54
சுவச் சர்வேக்சன் 2020 தரவரிசை ..... 54
தேசிய ஆசிரியர்கள் விருது 2020 ..... 56
ஆளில்லா குட்டி விமானத்தை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு அமைப்பு ..... 56
தேசிய மக்கள் தொகை ஆணையம் ..... 56
ட்ரைபுட் திட்டம் (Trifood Project) ..... 57
கோர்மோ பணிகள் செயலி ..... 58
விலையுயர்ந்த உலோகங்களுக்கான தரநிர்ணயக் குறியீடு ..... 58
தேசியத் திருநர் ஆணையம் ..... 58
NEP கொள்கையைச் செயல்படுத்தும் முதல் மாநிலம் ..... 59
ஐஎன்எஸ் விராட் குஜராத்தில் உடைக்கப் படுதல் ..... 59
தேசியப் புவியியல் தகவல் அமைப்பு செயல்படுத்தப்பட்ட நில வங்கி அமைப்பு ..... 59
கிரண் தொலைபேசி உதவிச் சேவை ..... 59
ஏற்றுமதி ஆயத்த குறியீட்டு அறிக்கை 2020 ..... 60
இந்திய தொல்பொருள் ஆய்வின் புதிய வட்டங்கள் ..... 61
**சர்வதேசச் செய்திகள் ..... 61**
ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆளுநர் குழுவின் ஐந்தாவது வருடாந்திரக் கூட்டம் ..... 61
நச்சு உண்மை ..... 62
காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பு (CHRI) ..... 62
ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து சிலை ..... 62
உரிமம் மீதான வரி ..... 63
கூர்க்கா படை வீரர்கள் குறித்த 1947 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ..... 63
கேலப்பாகோஸ் தீவுக் கூட்டம் மற்றும் சீனா ..... 63
பாகிஸ்தானின் புதிய அரசியல் வரைபடம் ..... 64
கோவிட் – 19 நோய்த் தொற்றின் போது கல்வி – ஐ.நாவின் கொள்கை ..... 65
இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் ..... 65
உலகளாவிய உணவு இழப்பு மற்றும் உணவுக் கழிவைக் குறைப்பதற்காக ஒரு புதிய தளம் ..... 65
75வது நாகசாகி நாள் ..... 65
லோயா ஜிர்கா கூடுகை ..... 66
இந்திய வீரர்களுக்கான போர் நினைவுச் சின்னம் ..... 66
IC-IMPACTS வருடாந்திர ஆராய்ச்சி மாநாடு ..... 67
டைம்ஸ் சதுக்கத்தில் இந்தியக் கொடி ..... 67
இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்கத் துணைக் குடியரசுத் தலைவர் வேட்பாளராக நியமனம் ..... 67

பிரிக்ஸ் போதை மருந்து எதிர்ப்பு பணிக் குழுச் சந்திப்பு ........ 67
புதிய கோவிட் – 19 திரள் ........ 67
உலக சூரியசக்தி ஒளி தொழில்நுட்ப மாநாடு ........ 68
இஸ்ரேல் – ஐக்கிய அரபு அமீரக அமைதி ஒப்பந்தம் ........ 68
நிர்மன்ஸ்ரீ திட்டம் ........ 69
19வது திருத்தத்தை நீக்குதல் ........ 70
டிஜிட்டல் வாழ்க்கைத் தரக் குறியீடு 2020 ........ 70
உலக நாடாளுமன்றச் சபாநாயகர்கள் கருத்தரங்கு ........ 71
கொள்கை வடிவமைக்கும் குழுக்களின் வலையமைப்பிற்கான ஆசியான் – இந்தியா அமைப்பின் 6வது வட்ட மேசை மாநாடு ........ 71
விநியோகச் சங்கிலி தாங்குந்தன்மை முன்னெடுப்பு ........ 71
மாலியில் இராணுவக் கிளர்ச்சி ........ 71
இயற்கையான இளம்பிள்ளை வாதத் தீநுண்மி அற்ற ஆப்பிரிக்கா ........ 72
பொருளாதாரச் செய்திகள் ........ 72
எதிர்கால நிறுவன அடையாளக் குறியீடு 2020 ........ 72
புத்தாக்க மையம் ........ 73
பணச் செயல்பாட்டு ஒழுங்குமுறைகள் – 2016 ஆம் ஆண்டு திருத்தம் ........ 73
ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கை ........ 73
நுகர்வோர் நம்பிக்கை ஆய்வு ........ 74
பாதிப்புகளுக்குள்ளான சொத்துகளுக்கான KV காமத் குழு ........ 74
முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்கலின் கீழ் ஸ்டார்ட் அப் துறை ........ 74
விவசாய உள்கட்டமைப்பு நிதி ........ 75
உபரி நிதி அரசிற்கு மாற்றம் ........ 75
சௌரியா KGC அட்டை ........ 75
2020-2025ற்கான நிதியியல் கல்விக்கான தேசிய உத்தி ........ 76
பசுமை வைப்புநிதித் திட்டம் ........ 76
ரமேஷ் சந்த் பணிக் குழு ........ 76
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 77
செவ்வாய் பெர்சிவரென்ஸ் ரோவர் (ஆய்வு வாகனம்) 2020 ........ 77
சுரக்சா ........ 77
சர்வதேச வெப்பாற்றல் சோதனை உலை (ITER/ International Thermonuclear Experimental Reactor) ........ 77
ஆதித்யா படகு ........ 78
AJO – Neo ........ 78
பெய்டோ ........ 79
நாசா விண்வெளி வீரர்கள் ........ 79
மஞ்சள் காய்ச்சல் ........ 79
ஹம்மர் ஏவுகணைகள் ........ 79
தொலைதூரத்திலிருந்த முறையிலான நோயாளிக் கண்காணிப்புத் தீர்வு ........ 80
மினிட்மேன் II ஏவுகணை ........ 80
அம்மோனியம் நைட்ரேட் ........ 81
செயற்கைப் பொருள் தொடர் ........ 81
முதலாவது பதிவு செய்யப்பட்ட கோவிட் – 19 தடுப்பு மருந்து ........ 81

சூரிய ஒளிவட்டக் காந்தப் புலம் ........ 82
சிறுத்தைப் புலி திட்டம் ........ 82
ஸ்பேஸ்எக்ஸின் எஸ்என்5 ஸ்டார்ஷிப் முன்மாதிரி ........ 82
மேல் (உயர்) நிலை ராக்கெட் என்ஜினின் சோதனை ஓட்டம் ........ 83
சூரியக் கரும்புள்ளிக் கூட்டம் - AR2770 ........ 83
ஏரோ-2 உந்துவிசை ஏவுகணை இடைமறி அமைப்பு ........ 84
TESS இன் முதன்மைப் பணி ........ 84
ஹீலியத்தினால் மேம்படுத்தப்பட்ட நட்சத்திரம் ........ 84
UVGI அடிப்படையிலான அறை நோய்க் கிருமி நீக்கச் சாதனம் ........ 85
ஆளில்லாக் குட்டி விமான எதிர்ப்பு அமைப்பு ........ 85
கோவிட் – 19 தொற்றைக் கண்டறிவதற்கான “SALIVA DIRECT” சோதனை ........ 86
சீரஸ்: ஒரு பெருங்கடல் உலகம் ........ 86
SPT0418-47 அண்டம் ........ 86
சந்திரனின் மேற்பரப்பில் செங்கற்களை உருவாக்கும் செயல்முறை ........ 87
சாராபாய் பள்ளம் ........ 88
பெட்டல்ஜியூஸ் மற்றும் ஹப்பிள் தொலைநோக்கி ........ 88
தெற்கு அட்லாண்டிக்கில் பள்ளம் (சீர்கேடு) ........ 88
பூமிக்கு நெருக்கமாக நெருங்கி வரும் குறுங்கோள் ........ 89
தனியார் துறையினால் உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது விண்வெளிக் கலன்கள் ........ 89
ஈரானின் புதிய ஏவுகணைகள் ........ 89
95 புதிய குளிர்ச்சியான பழுப்பு நிற குள்ளக் கோள்கள் ........ 90
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 90
யமுனை நீரில் அம்மோனியா ........ 90
உறுதிபடுத்தப் பட்ட பாதுகாப்பு | புலிகளின் தரநிலைகள் [CA | TS] ........ 90
வான்வழி வழியாக விதை விதைத்தல் ........ 91
செந்நாய் (Dhole) ........ 91
இந்தியச் சிறுத்தை ........ 92
சூழலியல்-ஓட்டம் (E-Flow) ........ 92
இந்தியாவின் முதலாவது பனிச் சிறுத்தை பாதுகாப்பு மையம் ........ 93
புதிய குள்ள வெட்டுக்கிளி இனங்கள் ........ 93
ஆர்க்டிக் பகுதியில் துருவக் கரடிகளின் எதிர்காலம் ........ 94
உண்ணிகளால் பரவும் SFTS தீநுண்மி ........ 94
யமுனை நதியின் சிக்கலான நோய்க் கிருமிகள் ........ 94
சினபங் மலை ........ 95
பட்டாம் பூச்சிகளின் 77 புதிய இனங்கள் ........ 95
BEEG விதைப் பந்துகள் ........ 96
அர்டிசியா வகை தாவரத்தின் புதிய இனங்கள் ........ 96
TRAFFIC அமைப்பின் சிறுத்தைகள் பற்றிய ஆய்வு ........ 96
ஆர்க்டிக் பனிப்பாறைப் பிளவு ........ 97
சிங்கப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் டால்பின் (ஓங்கில்) பாதுகாப்புத் திட்டம் ........ 97
பவளப் பாறைகள் மற்றும் இந்தியப் பருவக் காற்று ........ 98
பூமராங் நிலநடுக்கம் ........ 98

தென் ஆப்பிரிக்காவிலிருந்து 3 சிறுத்தைகள் ........ 99
கறுப்புக் கடலில் இயற்கை வாயு இருப்புகள் ........ 99
மாநிலச் செய்திகள் ........ 99
ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரம் ........ 99
வால்மீகி சமூகம் ........ 100
இந்திரா ரசோய் யோஜனா ........ 100
"ஏக் மாஸ்க் – அனேக் ஜிண்டாகி" என்ற விழிப்புணர்வுப் பிரச்சாரம் ........ 100
ஆந்திரப் பிரதேசத்திற்கான 3 தலைநகரங்கள் ........ 100
பாரிவர் பெஹ்சான் பத்ரா – PPP ........ 101
"பணிகள் மேலாண்மை அமைப்பு" இணைய வாயில் ........ 101
ஜம்மு காஷ்மீரின் துணை நிலை ஆளுநர் ........ 101
பள்ளிகளுக்கான கற்றல் கூறுகளுக்காக கூகுள் நிறுவனத்துடன் இணைதல் ........ 102
ஒய்.எஸ்.ஆர் சேயுதா திட்டம் ........ 102
தெண்டு இலைகள் திட்டம் ........ 102
சிறுமியர் மற்றும் மகளிர்களுக்கான திட்டங்கள் ........ 102
குஜராத் தொழிற்துறைக் கொள்கை, 2020 ........ 102
தில்லி மின்சார வாகனக் கொள்கை ........ 103
கிராம வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பெண்களுக்கான இடங்களில் இட ஒதுக்கீடு ........ 103
முக்கிய மந்திரி கிசான் சகாய் யோஜனா – குஜராத் ........ 104
இந்திரா வன மித்தன் யோஜனா - சத்தீஸ்கர் ........ 104
மாணவர்களுக்குத் திறன்பேசிகள் – பஞ்சாப் ........ 104
முதலாவது பட்டுப் பயிற்சி மற்றும் உற்பத்தி மையம் ........ 104
கோவாவிற்குப் புதிய புவிசார் குறியீடுகள் ........ 105
கர்ம சதி பிரகல்பா திட்டம் ........ 105
YSR சேயுதா திட்டம் ........ 105
தண்டனை அதிகரிப்பதற்கான அவசரச் சட்டம் ........ 105
தேசபக்தர்கள் தினம் - மணிப்பூர் ........ 106
ஜெர்மன் தொழில் பயிற்சி ........ 106
விவசாய புத்தாக்கத் திட்டத்திற்கான செயற்கை நுண்ணறிவு ........ 106
ஒருனோடோய் திட்டம் ........ 106
குவஹாத்தியில் முன்னறிவிப்பு அமைப்பு ........ 106
மைசூரு மற்றும் பீடாருக்கு இடையிலான தொழிற்துறை பெருவழிப் பாதை ........ 107
உலகின் உயரமான கப்பல் துறைப் பாலம் - மணிப்பூர் ........ 107
நாகா சுதந்திர தினம் ........ 108
தன்னாட்சிப் பகுதிக்கான குழு ........ 108
'பதாய் துஹார் பரா' திட்டம் ........ 108
மஞ்சள் சங்கிலி இ - வணிகத் தளம் ........ 109
மறுதொடக்கம் மேகாலயா திட்டம் ........ 109
மேகாலயாவில் ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் ........ 109
இருப்பிடத்தை (வாழும் இடம்) அடிப்படையாகக் கொண்டு பணி இட ஒதுக்கீடு ........ 110
தும்பி மகா உட்சவம் 2020 ........ 110
ஜார்க்கண்ட் அரசின் புதிய சின்னம் ........ 110

தன்வந்திரி ரதம் ..... 111
லிங்கராஜா ஆலயத்தைப் புதுப்பித்தல் ..... 111
இந்தியாவின் நீளமான நதி இழுவை வண்டி ..... 112
முதல் கடற்சார் மருத்துவ ஊர்தி ..... 112
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ..... 112
பர்ன்ட் சுகர் - புத்தகம் ..... 112
பாடி பவஜலாலு - புத்தகம் ..... 113
புவி அமைப்பு அறிவியலில் சிறந்து விளங்குவதற்கான தேசிய விருதுகள் ..... 113
திருவாளர் மக்களாட்சி ..... 114
உணவு சார்ந்த தொலைநோக்குப் பார்வை 2050 ..... 114
நிகழ்நேர நாட்டுப்பற்று கொண்ட திரைப்படத் திருவிழா ..... 114
அஜய் தியாகி ..... 114
ஜான் ஹியூம் ..... 115
பிரேம் பாட்டியா விருது 2020 ..... 115
GYTI விருதுகள் 2020 ..... 115
அபநிந்திரநாத் தாகூரின் 150வது பிறந்த தினம் ..... 115
எம் எஸ் சுவாமிநாதன் விருது ..... 116
பத்திரிக்கைத் துறையில் ஆசியக் கல்லூரி விருது 2019 ..... 116
வீரதீர செயல் மற்றும் காவல் துறை விருதுகள் ..... 117
தேசிய விளையாட்டு விருதுகள் 2020 ..... 117
மில்லேனியம் (பழமையான) கூட்டிணைவு சுற்று 6 & கோவிட் – 19 புத்தாக்க சவால் – விருது ..... 118
சுவச்சதா ஹை சேவா 2019 விருது ..... 118
உலகின் அதிவேக மனித கால்குலேட்டர் பட்டம் ..... 119
விளையாட்டுச் செய்திகள் ..... 119
லீவிஸ் ஹாமில்டன் ..... 119
எம் எஸ் தோனி மற்றும் சுரேஷ் ரெய்னா ஓய்வு ..... 119
600 டெஸ்ட் விக்கெட்டுகளை எடுத்த முதலாவது வேகப் பந்து வீச்சாளர் ..... 120
முக்கிய தினங்கள் ..... 121
முஸ்லீம் பெண் உரிமைகள் தினம் – ஜூலை 31 ..... 121
உலகத் தாய்ப்பால் ஊட்டல் வாரம் ..... 121
உலக சமஸ்கிருத தினம் – ஆகஸ்ட் 03 ..... 122
ஹிரோஷிமா தினம் – ஆகஸ்ட் 06 ..... 122
உலக நுரையீரல் புற்றுநோய் தினம் – ஆகஸ்ட் 01 ..... 122
தேசிய எலும்பு மற்றும் கூட்டு தினம் – ஆகஸ்ட் 04 ..... 123
வெள்ளையனே வெளியேறு தினம் – ஆகஸ்ட் 09 ..... 123
தேசிய கைத்தறி நாள் - ஆகஸ்ட் 7 ..... 124
உலகின் பழங்குடி மக்களுக்கான சர்வதேச நாள் - ஆகஸ்ட் 9 ..... 125
உலக உயிரி எரிபொருள் தினம் – ஆகஸ்ட் 10 ..... 125
தேசியக் குடற்புழு நீக்க தினம் – ஆகஸ்ட் 10 ..... 126
உலக சிங்கங்கள் தினம் – ஆகஸ்ட் 10 ..... 126
உலக யானைகள் தினம் – ஆகஸ்ட் 12 ..... 126
தேசிய நூலகர்கள் தினம் – ஆகஸ்ட் 12 ..... 126

சர்வதேச இளைஞர்கள் தினம் – ஆகஸ்ட் 12 ..... 127
சர்வதேச இடது கைப் பழக்கம் உடையவர்கள் தினம்- ஆகஸ்ட் 13 ..... 127
உலக உடல் உறுப்பு தான நாள் - ஆகஸ்ட் 13 ..... 128
வங்க தேசத்தில் தேசிய துக்க தினம் – ஆகஸ்ட் 15 ..... 128
உலக புகைப்பட தினம் – ஆகஸ்ட் 19 ..... 128
உலக மனிதநேய தினம் – ஆகஸ்ட் 19 ..... 129
சத்பவனம் திவாஸ் – ஆகஸ்ட் 20 ..... 129
உலக கொசுக்கள் தினம் – ஆகஸ்ட் 20 ..... 130
இந்திய அக்சய உர்ஜா தினம் – ஆகஸ்ட் 20 ..... 130
உலக மூத்த குடிமக்கள் தினம் – ஆகஸ்ட் 21 ..... 130
தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி தினம் – ஆகஸ்ட் 21 ..... 131
மதம் அல்லது மத நம்பிக்கைகளின் அடிப்படையில் ஏற்பட்ட வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 22 ..... 131
மதராஸ் தினம் – ஆகஸ்ட் 22 ..... 131
அடிமை வர்த்தகம் மற்றும் அதன் ஒழித்தலை நினைவு கூறுவதற்கான அனுசரிப்பு தினம் – ஆகஸ்ட் 23 ..... 132
ஸ்டாலினியவாதம் மற்றும் நாசிசம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறுவதற்கான ஐரோப்பிய தினம் – ஆகஸ்ட் 23 ..... 132
தேசிய விளையாட்டுகள் தினம் – ஆகஸ்ட் 29 ..... 132
தெலுங்கு மொழி தினம் – ஆகஸ்ட் 29 ..... 133
சர்வதேச அணு ஆயுதச் சோதனைகளுக்கு எதிரான தினம் – ஆகஸ்ட் 29 ..... 133
சிறு தொழிற்துறை தினம் – ஆகஸ்ட் 30 ..... 134
ஆள்கடத்தலுக்கு உள்ளானவர்கள் மீதான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 30 ..... 134
இதரச் செய்திகள் ..... 135
மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் மரபணு வளங்கள் ..... 135
டேனர்-ஒயிட்ஹவுஸ் 3 (TW3) சோதனை ..... 135
2 கடலோரக் கிராமங்களுக்கான யுனெஸ்கோ அங்கீகாரம் ..... 135
தூய்மை வாரம் - ஆகஸ்ட் 10 முதல் 15 வரை ..... 136
ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு ..... 136
அடல் பிகாரி வாஜ்பாயின் நினைவு (இறப்பு) தினம் ..... 136
“யானைகள், பொருட்கள் அல்ல” அறிக்கை ..... 137
5 நினைவு அஞ்சல் தலைகள் ..... 137
ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களில் கோவிட் – 19 காரணமாக ஏற்படும் இளைஞர் வேலைவாய்ப்புப் பிரச்சினைகளைக் கையாளுதல் ..... 137
உலக நீர் வாரம் 2020 : ஆகஸ்ட் 24 – 28 ..... 138
நுவாகாய் ஜுஹார் ..... 138
அன்னை தெரசாவின் 110வது பிறந்த நாள் ..... 139

# TNPSC துளிகள்

- 2019-20 ஆம் ஆண்டில் அதிக அளவில் ஆஸ்திரேலியக் குடியுரிமையைப் பெரும்பான்மையான அளவில் பெறும் புலம்பெயர்ந்தோர் இந்தியர்கள் ஆவர்.

- இந்திய நிதி உதவியுடன், மொரீஷியஸ் நாட்டில் போர்ட் லூயிஸில் கட்டப்பட்ட புதி ய உச்ச நீதிம ன்றத்தை பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜுக்னாத் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.
- ஏர் இந்தியாவில் 100% அந்நிய நேரடி முதலீட்டை மேற்கொள்ள வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு நிதி அமைச்சகம் அனுமதித்துள்ளது.
- ஸ்பெயினில் உள்ள சபிக் பன்னாட்டு ரசாயன உற்பத்தி நிறுவனத்தின் பாலிகார்பனேட் பிரிவானது, புதுப்பிக்கத்தக்க சக்தியில் முழுமையாக இயங்கும் உலகின் முதல் பெரிய அளவிலான தொழிலகமாக உருவெடுத்து உள்ளது.
- நோயாளியால் வெளியிடப்படும் நோய்த் தொற்றுகள் பரவுதலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கோவிட்-19 தொற்றுநோய்க்கு எதிராகப் போராடுவதற்காக வேண்டி மருத்துவ ரீதியில் தனிமைப்படுத்தும் அமைப்பான 'ஆஷ்ரே' எ கடற்படைப் புத்தாக்கம் மற்றும் சுதேச அமைப்பு ன்ற அமைப்பை ராணுவத்தின் மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனமானது உருவாக்கியுள்ளது.
- ஈரானின் புரட்சிகர இஸ்லாமிய பாதுகாப்புக் காவல்படை 'சிறந்த நபி 14' என்ற இராணுவப் பயிற்சியின் போது நிலத்தடியில் கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் வகை (உந்துவிசைக்குரிய) ஏவுகணைகளை ஏவி சோதனை செய்துள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகமானது அரபுக் கடற்கரையோரத்தில் உள்ள அபுதாபியில் "பாரக்" என்ற தனது முதலாவது அணுக்கரு உலையைத் தொடங்கியுள்ளது.
- மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சரான ராம் விலாஸ் பஸ்வான் "ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை" என்ற திட்டத்தை மேலும் 4 மாநிலங்கள், மணிப்பூர், நாகாலாந்து, உத்தரகாண்ட் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றிற்கு விரிவுபடுத்தியுள்ளார்.
- ஆப்பிள் நிறுவனமானது உலகின் மிகவும் மதிப்புமிக்க பங்குச் சந்தையில் பட்டியலிடப் பட்டுள்ள நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
  - இது சவுதியின் ஆரம்கோ நிறுவனத்தை இரண்டாம் இடத்திற்குத் தள்ளி உள்ளது.
- இந்தியா ஆகஸ்ட் 02 ஆம் தேதியன்று சர்வதேசத் தோழமை தினத்தைக் கொண்டாடியது.
- ஆந்திரப் பிரதேச மாநில முதல்வரான Y.S. ஜெகன் மோகன் ரெட்டி அவர்கள் ரக்சா பந்தன் கொண்டாட்டத்தின் போது இணையவழிப் பாதுகாப்பு குறித்த ஒரு நிகழ்நேரப் பயிற்சித் திட்டமான "இ-ரக்சா பந்தன்" என்ற ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்.
- மறைமுக வழியில் பரவும் கோவிட் – 19 நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு வேண்டி பயணிகளின் பயண உடைமைகளை கிருமி நீக்கம் செய்வதற்காக பெங்களூரு இரயில் நிலையத்தில் "UV உடைமை முழுக்கு" என்ற வசதியானது தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
- டாமன் நிர்வாகத்தின் கல்வித் துறையானது இணையக் கல்வியின் மூலம் டிஎன்எச் மற்றும் டிடி (Dadra and Nagar Haveli and Daman and Diu ) ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்காக வேண்டி இ-கியான் மித்ரா (E-Gyan Mitra) என்ற செயலியைத் தொடங்கியுள்ளது.

- இந்தியாவிற்கான பிரிட்டனின் உயர் ஆணையரான பிலிப் பார்ட்டன் என்பவர் புதிதாக இணைக்கப்பட்ட அயல்நாடு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் நிரந்தர கீழ்நிலைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் ஸ்குவாஷ் கூட்டமைப்பானது மலேசியாவின் கோலாலம்பூரில் நடத்தப்பட இருக்கும் 2020 ஆம் ஆண்டின் மகளிர் உலக அணி ஸ்குவாஷ்

சாம்பியன்ஷிப்பிலிருந்து வெளியேறியுள்ளது.

- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 அன்று, லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசங்கள் புதிய ஒன்றியப் பிரதேசங்களாக உருவாக்கப்பட்டதின் முதலாவது ஆண்டு தினத்தைக் கொண்டாடின.
- மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் "சஹாக் கோப்டியூப் என்சிடிசி இந்தியா" எனப்படும் தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் யூடியூப் (வலையொலி) அலைவரிசையைத் தொடங்கி வைத்துள்ளார்.
- மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சரான கஜேந்திர சிங் ஷெகாவத் மற்றும் மத்திய ஜவுளி & பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சரான ஸ்மிரிதி இராணி ஆகியோர் புது தில்லியில் "சுவச் பாரத் கிராந்தி" (இந்தி) என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளனர்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது சசிதர் ஜகதீசன் என்பவரை எச்டிஎப்சி வங்கியின் அடுத்த தலைமை செயல் அதிகாரியாக நியமிப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை இணையமைச்சரான பிரகலாத் சிங் படேல் "தென்சாவல் கோல்ப் தங்குமிடத் திட்டம்" எனப்படும் மிசோரமின் முதலாவது கோல்ப் பகுதியைக் காணொலி முறையில் திறந்து வைத்துள்ளார்.
    - இது மத்திய சுற்றுலாத் துறையின் சுவதேஷ் தர்ஷன் என்ற திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படுகின்றது.
- லெபனானின் தலைநகரான பெய்ருட்டில் அம்மோனியம் நைட்ரேட் என்ற அதீத ஆபத்தான வெடிபொருட்கள் சேமித்து வைக்கப் பட்டிருந்த துறைமுகக் கிடங்கில் மிகப்பெரிய வெடி விபத்தானது ஏற்பட்டது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பானது கல்வி மீதான தொற்று நோயின் தாக்கம் குறித்த தனது கொள்கைசார் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- SS மோட்டிவேஷன் என்ற அமைப்பின் நிறுவனரான சுனில் யாதவ் SS என்பவருக்கு ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனக் கூட்டமைப்பு ஆகியவற்றினால் ஏற்படுத்தப்பட்ட "கரம்வீர் சக்ரா விருது" வழங்கி கௌரவிக்கப் பட்டது.
- நவீன இந்தியத் திரையரங்கின் தந்தையான இப்ராகிம் அல்காசி அவர்கள் சமீபத்தில் காலமானார்.
    - இவர் 2010 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் விருதையும் 1991 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருதையும் 1996ல் பத்ம ஸ்ரீ விருதையும் பெற்றுள்ளார்.
- கணினி சுட்டியின் இணைக் கண்டுபிடிப்பாளரான வில்லியம் இங்கிலீஷ் அவர்கள் சமீபத்தில் காலமானார்.
    - இவர் ஆரம்ப கால கணினிச் செயல்பாடுகளில் பணியாற்றியவரான டோக் எங்கள்பெர்ட் அவர்களால் உருவாக்கப்பட்ட மாதிரிப் படங்களின் உதவியுடன் 1963 ஆம் ஆண்டில் முதலாவது கணினிச் சுட்டியை உருவாக்கினார்.
- இந்தியாவின் முதலாவது நடமாடும் ஆர்டி-பிசிஆர் சோதனை ஆய்வகமானது பெங்களூருவில் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
    - இது இந்திய அறிவியல் நிறுவனத்தினால் மேம்படுத்தப் பட்டுள்ளது. இது ஒரு நாளைக்கு 9000 சோதனைகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது.
- கர்நாடகாவின் முதலாவது பெண் இந்தியக் காவல் பணி அதிகாரியான D. ரூபா முட்கில் அவர்கள் அம்மாநிலத்தின் உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்தப் பதவியை வகிக்கும் முதலாவது பெண் அதிகாரியும் இவராவார்.
- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 அன்று ஜப்பான் உலகின் முதலாவது அணு குண்டு

தாக்குதலின் 75வது நினைவு தினத்தை அனுசரித்தது.

- 1945 ஆம் ஆண்டில் அமெரிக்கப் போர் விமானமான எனோலா கே, "லிட்டில் பாய்" என்ற பெயர் கொண்ட ஒரு அணு குண்டை ஹிரோசிமா நகரின் மீது வீசியது.

❖ ஆந்திரப் பிரதேசத்திற்குப் பிறகு காவல் துறைக்காக சமீபத்தில் ஒரு கையேட்டை வெளியிட்டுள்ள 2வது மாநிலம் குஜராத் ஆகும்.

❖ அந்நிய நேரடி முதலீட்டில் இந்தியாவின் நான்காவது மிகப்பெரிய பங்களிப்பு நாடு ஜப்பான் ஆகும்.

❖ மத்தியக் கல்வித் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் "நிஷாங்க்" இமாச்சலப் பிரதேசத்தின் சிர்மூர் மாவட்டத்தில் உள்ள தௌலா கானில் அமைய இருக்கும் இந்திய மேலாண்மை நிறுவனம் – சீர்மூர் என்ற கல்வி நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

❖ மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையமானது பேராசிரியர் பிரதீப் குமார் ஜோஷி என்பவரை தனது புதிய தலைவராக நியமித்துள்ளது.

- அரவிந்த் சக்சேனா என்பவருக்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ உத்தரகண்ட் மாநில வனத் துறையானது பசுமை ராமாயணப் பூங்கா என்ற ஒரு பூங்காவை மேம்படுத்தியுள்ளது.

- இந்தப் பூங்காவானது ராமரின் பயணத்துடன் தொடர்புடைய நாட்டில் உள்ள முக்கியமான 4 வகை வனத்திலிருக்கும் மரவகை இனங்களைக் கொண்டு இருக்கும்.

❖ இந்திய அரசின் சார்பாக ஏற்றுமதி-இறக்குமதி வங்கியானது மொசாம்பிக் நாட்டின் மின் விநியோகத் தரத்தை மேம்படுத்துவதற்காக 250 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.1870 கோடி) அளவிற்கு கடனை வழங்கியுள்ளது.

❖ கேலோ இந்தியா திட்டத்தின் முதல் பொதுக்குழு கூட்டத்திற்கு விளையாட்டு அமைச்சரான கிரண் ரிஜிஜு தலைமை தாங்கினார்.

❖ நியூயார்க் இந்தியத் திரைப்பட விழாவின் 20வது பதிப்பில் மலையாளத் திரைப்படமான 'மூதொன்' (Moothon) மற்றும் தேசிய விருது பெற்ற ஆவணப்படமான 'சன் ரைஸ்' (Son Rise) ஆகியவை விருதுகளை வென்றது.

❖ பிரபலப் பத்திரிகையாளரும் ஆசிரியருமான யதிஷ் யாதவ் என்பவர் "ரா ((Research and Analysis Wing/ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு) இந்தியாவின் இரகசிய நடவடிக்கைகளின் வரலாறு ("RAW: A History of India's Covert Operations) என்ற ஒரு புதிய புத்தகத்தை எழுதியுள்ளார்.

❖ காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையமானது அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் தன்னளவில் முதலாவது இதே வகையைச் சேர்ந்த பட்டுப் பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தைத் தொடங்கவுள்ளது.

❖ மொரீஷியஸ் தீவானது ஜப்பானுக்குச் சொந்தமான கப்பலினால் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவின் காரணமாக சுற்றுச்சூழல் அவசர நிலையை அறிவித்துள்ளது.

❖ இந்திய அரசானது ஏற்றுமதி செய்யப்பட்டப் பொருட்கள் குறித்த கட்டணங்கள் மற்றும் வரிகளின் நீக்குதலின் கீழ் உச்ச வரம்பு விகிதங்களை நிர்ணயிப்பதற்காக முன்னாள் உள்துறைச் செயலாளர் GK பிள்ளை என்பவரின் தலைமையில் 3 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.

❖ இந்தியாவின் சீரம் தனியார் நிறுவனமானது இந்தியாவிற்காக 100 மில்லியன் கோவிட் – 19 நோய்த் தொற்று தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்து, விநியோகிக்கும் செயல்முறையைத் துரிதப்படுத்துவதற்காக சர்வதேச நோய்த் தடுப்பு மருந்துக் கூட்டிணைவான கேவி (Gavi), மற்றும் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.

- புனேவில் உள்ள மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் பாதுகாப்புத் துறை நிறுவனமானது ஒரு தேசிய அளவிலான டிஜிட்டல் பொருள் கட்டமைப்புப் போட்டியான 2020 ஆம் ஆண்டின் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தானில் முதல் பரிசினை வென்றுள்ளது.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் அவர்கள் "இணைத்தல், தொடர்பு கொள்ளுதல், மாற்றம் ஏற்படுத்துதல்" (Connecting, Communicating, Changing) என்ற தலைப்பு கொண்ட ஒரு புத்தகத்தை புது தில்லியில் வெளியிட்டுள்ளார்.
- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர், ஹைதராபாத்தில் உள்ள பாரத் டயனமிக்ஸ் நிறுவனத்தில் ஏவுகணை இருப்பு வசதி மற்றும் போர் ஆயுத உற்பத்தி அலகு ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்.
- லெபனானின் பிரதமரான ஹாசன் டயப் அவர்கள் அந்நாட்டின் தலைநகரான பெய்ரூட்டில் ஏற்பட்ட மிகப்பெரிய அம்மோனியம் நைட்ரேட் வெடிப்பைத் தொடர்ந்து தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.
- இந்தியாவானது 20 ஓவர் உலகக் கோப்பையின் 2021 ஆம் ஆண்டுப் பதிப்பை நடத்த உள்ளது. அதே நேரம் ஒத்தி வைக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டுப் பதிப்பானது 2022 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ளது.
  - மேலும் இந்தியாவானது 50 ஓவர் உலகக் கோப்பைப் போட்டியையும் இந்தியாவில் 2023 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.
- தேசிய அனல் மின் கழகமானது நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்த மின் உற்பத்தியின் அளவாக 100 பில்லியன் அலகுகளை எட்டியுள்ளது.
- தலாய் லாமா அவர்கள் ஜெர்மனைச் சேர்ந்த சுற்றுச்சூழல் பத்திரிக்கையாளரான பிரான்ஸ் அல்ட் என்பவருடன் சேர்ந்து எழுதிய தனது புதிய புத்தகமான "நமது ஒரே இல்லம் : உலகிற்கான ஒரு காலநிலை முறையீடு" (Our Only Home: A climate Appeal to the world) என்ற புத்தகத்தை வெளியிட உள்ளார்.
- போக்குவரத்து சமிக்ஞைகள் மற்றும் குறிமுறைகள் மீது பெண் குறியீடுகளைக் கொண்ட இந்தியாவின் முதலாவது நகரம் மும்பையின் தாதர் ஆகும்.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற் துறையின் மீது கவனம் செலுத்தும் வகையில் தனது புதிய தொழிற் துறைக் கொள்கையை அறிவித்துள்ளது.
  - இந்தக் கொள்கையானது அம்மாநிலத்தில் தனது வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக வேண்டி சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற் துறைக்கு வெளிப்படையாக ஆதரவளிக்கின்றது.
- நகர்ப்புற மக்களுக்கு வன நில உரிமைச் சான்றிதழ்களை வழங்கிய நாட்டின் முதல் மாநகராட்சி மன்றமாக சத்தீஸ்கரின் ஜகதல்பூர் மாறியுள்ளது.
- அகில இந்திய கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி வாரியங்களுக்குப் பிறகு ஜவுளித் துறை அமைச்சகம் அகில இந்திய விசைத்தறி வாரியத்தைக் கலைத்து உள்ளது.
- பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இருக்கும் 50 மீட்டருக்குள் ஆரோக்கியமற்ற உணவு விற்பனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையமானது சமீபத்தில் அறிவித்து உள்ளது.
- தற்பொழுது நிகழ்ந்து வரும் கோவிட்-19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கான இஸ்ரேல்-இந்திய ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, இஸ்ரேல் ஆனது செயற்கை நுண்ணறிவை அடிப்படையாக கொண்ட தொழில்நுட்பம் மற்றும் உயர் தர உபகரணம் ஆகியவற்றை இந்தியாவின் தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்துடன் பகிர்ந்துள்ளது.

- மத்திய அமைச்சரான நிதின் கட்கரி கோவிட் – 19 வைரஸைச் சிதைவுறச் செய்யும் திறன் கொண்ட, 30 வினாடிகளில் எந்தவொரு இடத்திலும் நோய்த் தொற்றை நீக்கக் கூடிய "அதுல்யா" என்ற பெயர் கொண்ட ஒரு நுண்ணலைச் சாதனத்தை வெளியிட்டுள்ளார்.
- டெல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து நிதி ஆயோக் ஆனது அடல் புத்தாக்கத் திட்டத்தைக் கொண்டு அடல் சீர்படுத்து ஆய்வகங்களின் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்காக வேண்டி மாணவத் தொழில்முனைவோர் திட்டத்தின் இரண்டாவது பதிப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- பெலாரஸின் நீண்டகால அதிகாரமிக்க தலைவரான அலெக்சாண்டர் கிரிகோரிவிச் லுகாஷென்கோ தொடர்ச்சியாக தனது ஆறாவது ஜனாதிபதி பதவியை வென்றுள்ளார் (1994ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை).
- மேற்கு வங்க மாநில முதல்வரான மம்தா பானர்ஜி அவர்கள், நோய்த் தொற்றின் போது சீருடையில் இருந்த பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை அங்கீகரிப்பதற்காக செப்டம்பர் 1 ஆம் தேதியானது அம்மாநிலத்தில் காவல் துறை தினமாக அனுசரிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.
- கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையமானது ஒரு தரநிர்ணயக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தை குஜராத்தின் போர்பந்தரில் திறந்துள்ளது.
  - இந்த ஆய்வகமானது கடல் உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை ஆய்வு செய்ய உள்ளது.
- சரக்கு மற்றும் சேவைகள் வரி ஆணையத்தின் அமைச்சகங்களுக்கிடையேயான ஒரு உயர்மட்டக் குழுவானது தங்கத்தின் மீது மாநிலத்திற்குள்ளே மேற்கொள்ளப் படும் சரக்குப் பரிமாற்றத்திற்கு விதிப்பதற்காக மின்னணு-வழிக் கட்டணத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது.
  - இது வரி ஏய்ப்பு மற்றும் கடத்தலின் கீழ் தங்கத்தின் பரிமாற்றத்தைக் கண்காணிக்க உதவ இருக்கின்றது.
- மாநில அரசாங்கங்கள் மற்றும் 272 மாநில ஆட்சியர்கள் இணைந்து மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப்படும் 7 மாத கால அளவுள்ள "நாஷா முக்த் பாரத்" அல்லது "போதைப் பொருளற்ற இந்தியா" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளனர்.
- மத்திய அமைச்சர் புது தில்லியில் உள்ள துவாரகாவில் தேசிய சமூகப் பாதுகாப்பு மையக் கட்டிடத்தைத் திறந்து வைத்துள்ளார்.
- ஐக்கிய இராஜ்ஜிய அரசாங்கமானது இந்தியாவில் 3 மில்லியன் பவுண்ட் மதிப்பு கொண்ட "புத்தாக்க சவால் நிதி 2020" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது. இது கோவிட் – 19 நோய்த் தொற்று மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றைக் கையாளுவதற்கு வேண்டி கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்துறையில் உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு உதவ இருக்கின்றது.
- விமான விபத்து விசாரணை ஆணையமானது கோழிக்கோடு விமான நிலையத்தில் நிகழ்ந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் துபாய்-கோழிக்கோடு விமானம் IX 1344 என்பதின் விமான விபத்து குறித்து விசாரிப்பதற்காக கேப்டன் S.S. சஹர் தலைமையில் 5 நபர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
- விமானப் படையின் ஓய்வு பெற்ற துணைத் தளபதியான அர்ஜுன் சுப்பிரமணியம் அவர்கள் "முழுக் கண்ணோட்டம் : இந்தியப் போர்கள் 1972-2020" என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
  - 'இந்தியாவின் போர்கள் : இராணுவ வரலாறு 1947-1971' என்ற அவருடைய முதல் புத்தகத்திற்கு பிறகு வெளியான புத்தகம் இதுவாகும்.

- சென்னையின் வியாசர்பாடியில் 'ரூ 5 மருத்துவர்' என்று பிரபலமாக அறியப்படும் டாக்டர் வி திருவேங்கடம் சமீபத்தில் காலமானார்.
- உறுப்பு தானத்தில் தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக தமிழகம் முதலிடத்தில் உள்ளது. மேலும் இது மத்திய அரசின் விருதையும் பெற்றுள்ளது.
  - இங்கு 1,382 நன்கொடையாளர்களிடமிருந்து இதுவரை 8,163 உறுப்புகள் பெறப் பட்டு உள்ளன.
- இந்தியப் பாரம்பரிய இசைப் பாடகரான பண்டிட் ஜஸ்ராஜ் அவர்கள் சமீபத்தில் காலமானார்.
  - அவருக்கு பத்மஸ்ரீ, பத்ம பூஷண் மற்றும் பத்ம விபூஷண் போன்ற விருதுகள் அளிக்கப் பட்டுள்ளன.
- நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய மலிவான மற்றும் எளிதான நடைமுறைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை வளர்ப்பதற்கு வேண்டி ஆயுஷ் அமைச்சகமானது "நோய் எதிர்ப்புச் சக்திக்கான ஆயுஷ்" என்ற ஒரு மூன்று மாத காலப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- பாடகர் ஷாஜான் முஜீப் அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில், ஸ்வச் பாரத் அபியான் பிரச்சாரத்திற்காக வேண்டி அலிகார் மாநகராட்சியின் முதல் தேசிய நிறுவன அடையாளத் தூதரானார் (National Brand Ambassador).
- இந்தியாவின் தேசியப் பங்குச் சந்தை முதலீட்டாளர் பாதுகாப்பு நிதி அறக்கட்டளை மற்றும் பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஆகியவை இணைந்து "முதலீட்டாளர் கல்விக்கான தளம்" என்ற பெயரில் ஒரு இணையதள முதலீட்டாளர் கல்வி வள மையத்தைத் தொடங்கியுள்ளனர்.
- இந்திய ஒலிம்பிக் மன்றமானது (Indian Olympic Association - IOA) ஆனது தனது புதிய அடையாளம் மற்றும் குறியீடு ஆகியவை ஏற்றுக் கொள்ளப் பட்டதின் ஒரு பகுதியாக "ஏக் இந்தியா அணி இந்தியா" என்ற ஒரு டிஜிட்டல் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்துள்ளது. இது ஒலிம்பிக் விளையாட்டுகளில் அதன் பங்கேற்பின் 100வது ஆண்டின் அனுசரிப்பைக் குறிக்கின்றது.
- உலகம் முழுவதும் ஆடை அலங்காரத்தின் மகிமை, மனநிலை மற்றும் கலை ஆகியவற்றை அனுசரித்து, அதைக் கொண்டாடுவதற்காக உலக ஆடை அலங்கார தினமானது ஆகஸ்ட் 21 அன்று அனுசரிக்கப்பட்டது.
- கேரள மாநில சட்ட சபையானது மக்களுக்குச் சட்டசபை செயல்பாடுகளைக் கொண்டு சேர்ப்பதற்காக வேண்டி "சபா தொலைக்காட்சி" என்ற ஒரு தொலைக்காட்சி அலைவரிசையைத் தொடங்கியுள்ளது.
- மத்தியப் புலனாய்வுத் துறையின் முன்னாள் சிறப்பு இயக்குநரான ராகேஷ் அஸ்தானா அவர்கள் எல்லைப் பாதுகாப்புப் படையின் பொது இயக்குநராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகமானது தாய்மையடைவதற்கான வயது தொடர்பான விவகாரங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காகவும் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது குறித்து மறு ஆய்வு செய்வதற்காகவும் ஜெயா ஜேட்லி என்பவரின் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- தமிழ்நாடு சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது மருத்துவக் கல்வியில் ஒபிசி (இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர்) சமூகத்தினருக்கான இட ஒதுக்கீடுகளைச் செயல்படுத்தலுக்கான மத்திய அரசின் குழுவிற்கு தமிழ்நாடு மருத்துவச் சேவைகள் கழகத்தின் மேலாண் இயக்குநரான டாக்டர் P. உமாநாத் என்பவரை நியமித்துள்ளது.

- ❖ தவில் கலைஞரான G. சிலம்பரசன் என்பவருக்கு இந்திய உலக சாதனைகள் அமைப்பால் உலக சாதனை விருதானது வழங்கப் பட்டுள்ளது. இது கர்நாடக இசையின் ஒரு பகுதியான 108 தாளங்களை எவ்வாறு கையாளுவது குறித்த காணொலியை ஆவணப் படுத்தியதற்காக அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான ராஜிவ் குமார் அவர்கள் தேர்தல் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார். இவர் சமீபத்தில் பதவி விலகிய அசோக் லவாசா என்பவரது பதவியின் இடத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ 'பூமியின் சுற்றுச்சூழல் எல்லை மீறிய தினமானது' (EOD - Earth Overshoot Day) ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கான மனித இனத்தின் வள நுகர்வானது அந்த ஆண்டிற்கான இயற்கை வளங்களை மீண்டும் உருவாக்கக் கூடிய பூமியின் திறனை மீறும் வகையில் கணிக்கப்பட்ட ஒரு விளக்க நாட்காட்டியாகும்.
  - ○ 2020 ஆம் ஆண்டில் EOD ஆனது உலகம் முழுவதும் கொரானா நோய்த் தொற்று பொது முடக்கத்தின் காரணமாக 2019 ஆம் ஆண்டில் கடைபிடிக்கப் பட்ட தினத்தை விட மூன்று வாரங்கள் தாமதமாக அதாவது ஆகஸ்ட் 22 அன்று நிகழ்ந்தது.
- ❖ மத்திய அமைச்சரவையானது இந்திய விமான நிலைய ஆணையத்தின் ஜெய்ப்பூர், குவஹாத்தி மற்றும் திருவனந்தபுரம் ஆகிய விமான நிலையங்களைப் பொது-தனியார் பங்களிப்பின் மூலம் குத்தகைக்கு விடுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ போர்ப்ஸ் கணிப்பின் படி, "2020 ஆம் ஆண்டில் அதிக ஊதியம் பெறும் நடிகர்களின்" பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்த ஒரே இந்திய நடிகர் பாலிவுட் நடிகர் அக்சய் குமார் (6வது இடம்) ஆவார்.
  - ○ இந்தப் பட்டியலில் மல்யுத்த வீரராகி, அதன் பின் நடிகரான டுவைன் ஜான்சன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- ❖ மத்திய உள்துறை அமைச்சகமானது உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் உள்ள மான்டுவாடிக் இரயில் நிலையத்தை பனாரஸ் என்று மறுபெயரிடுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ பஞ்சாப் மாநில அரசானது மத்திய அரசினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட தரவரிசையின்படி, அம்மாநிலம் சுகாதார மற்றும் நல மையச் செயல்பாடுகளில் முதலிடத்தைப் பிடித்துள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ விளையாட்டுத் தளமான டிரீம் 11 ஆனது வரவிருக்கும் இந்தியன் பீரிமியர் லீகிற்கான அதிகாரப்பூர்வ விளம்பரதாரர் ஏலத்தில் வெற்றி பெற்றுள்ளது.
- ❖ மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 முதல் 21 வரை "சுகாதார சூழலியலை மறுவரையறை செய்தல்" என்ற ஒரு கருத்துருவுடன் "இந்திய சுகாதார நல வாரத்தை" தொடங்கி வைத்துள்ளார்.
- ❖ சந்திரயான் – 2 ஆனது ஜிஎஸ்எல்வி எம்கேIII – எம்1 என்ற செயற்கைக் கோளினால் விண்ணிற்கு ஏவப்பட்டதின் 1 ஆண்டு காலத்தை நிறைவு செய்துள்ளது.
  - ○ இது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 அன்று நிலவின் சுற்று வட்டப் பாதைக்குள் ஏவப்பட்டது.
- ❖ மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகமானது "2030 ஆம் ஆண்டு வாக்கில் சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்பை பூஜ்ஜியமாக்குதல்" என்ற ஒரு உயர்லட்சிய நோக்கத்தை வெளியிட்டுள்ளது.
- ❖ மத்திய அரசானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கும் சந்தை ஆண்டிற்காக கரும்பின் விலையை 1 குவின்டாலுக்கு 10 ரூபாய் அதிகரித்து, ஆதார மற்றும் இலாபகரமான விலையை ரூ.285 ஆக அதிகரிக்க முடிவு செய்துள்ளது.
- ❖ பெண்களின் சமத்துவ தினமானது அமெரிக்காவில் பெண்களுக்கு ஓட்டுரிமை

வழங்கிய 19வது திருத்தத்தைக் குறிப்பதற்காக ஆகஸ்ட் 26 அன்று அனுசரிக்கப் பட்டது.

- மாலத் தீவில் உள்ள தீவுச் சங்கிலித் தொடரானது கடலுக்கு அருகில் உள்ள அதன் கடற்கரைப் பகுதி மற்றும் அதன் நீர்ப் பகுதியில் அதிக அளவிலான நுண் நெகிழிகளைப் பதிவு செய்துள்ளது.
- எழுத்தாளரான சேத்தன் பகத் "திட்டமிடப்பட்ட கொலை" என்ற பெயர் கொண்ட தனது புதிய புத்தகத்தின் அறிமுகப் பகுதி ஒன்றை வெளியிட்டுள்ளார்.
- விமானப் படை (விங்) தளபதியான கஜானந்த் யாதவ் என்பவருக்கு வான்வெளி சாகசப் பிரிவில் டென்சிங் நோர்கே தேசிய சாகச விருது 2019 ஆனது வழங்கப் பட்டுள்ளது.
- அஸ்வானி பாட்டியா என்பவர் பாரத ஸ்டேட் வங்கியின் மேலாண் இயக்குநராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ரோனி ஓ சல்லீவன் என்பவர் கெய்ரென் வில்சன் என்பவரை வீழ்த்தி 2020 ஆம் ஆண்டின் உலக ஸ்நூக்கர் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.
- மகிந்திரா குழுமத்தின் தலைவரான ஆனந்த் மஹிந்திரா மற்றும் அடோப் நிறுவனத் தலைவரான சாந்தனு நாராயணன் ஆகியோருக்கு 2020 ஆம் ஆண்டின் தலைமைத்துவ விருதுகளானது வழங்கப்பட உள்ளது.
- டாக்டர் G. சதீஷ் ரெட்டிக்குப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் தலைவராக மேலும் 2 ஆண்டு கால பதவி நீட்டிப்பு வழங்கப் பட்டுள்ளது.
- தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஆல் ரவுண்டரான ஜேக்கஸ் காலீஸ், பாகிஸ்தானைச் சேர்ந்த ஜாஹீர் அப்பாஸ் மற்றும் புனேவில் பிறந்த ஆஸ்திரேலியாவின் முன்னாள் அணித் தலைவரான லிசா ஸ்தலேகர் ஆகியோர் சர்வதேசக் கிரிக்கெட் ஆணையத்தின் புகழ்மிக்க வாழ்த்தரங்கில் (ஹால் ஆப் பேம்) இணைக்கப் பட்டுள்ளனர்.
- ஆகஸ்ட் 24 ஆம் தேதியானது கவிஞர் நர்மத்தின் பிறந்த தினமாகும். இத்தினமானது குஜராத்தி மொழி மற்றும் அதன் இலக்கியத்திற்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- நிலம், நீர்ப்பாசனம் மற்றும் பயிர் முறைகள் தொடர்பான அளவுருக்களின் தொகுப்பை அளவிடுவதற்கும், அதை மக்கள்தொகை மற்றும் நிதி அளவுருக்களுடன் இணைத்து விவசாயிகளுக்கு விரைவாக கடன் வழங்கும் முடிவுகளை எடுப்பதற்கும் செயற்கைக்கோள் தரவைப் பயன்படுத்தும் முதல் வங்கியாக ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி திகழ்கிறது.
- டச்சு எழுத்தாளரான, மரிகே லூகாஸ் ரிஜ்னெவெல்ட் தனது "தி டிஸ்கம்போர்ட் ஆஃப் ஈவினிங்" (The Discomfort of Evening) என்ற புத்தகத்திற்காக சர்வதேச புக்கர் பரிசை வென்ற இளைய எழுத்தாளர் ஆனார்.
- ஐ.ஐ.டி முன்னாள் மாணவர் பேரவையானது ரஷ்யாவின் லோமோனோசோவ் மாஸ்கோ அரசு பல்கலைக்கழகம் மற்றும் ருசாஃப்ட் ஆகியவற்றுடன் இணைந்து இந்தியாவில் உலகின் மிகப்பெரிய மற்றும் வேகமான கலப்பின குவாண்டம் கணினியை (Hybrid quantum computer) உருவாக்க ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுள்ளது.
- மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆல்ரவுண்டரான டுவைன் பிராவோ, டி 20 கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுகளை எட்டிய முதல் பந்து வீச்சாளர் ஆனார்.
- அமேசான் தலைமை நிர்வாக அதிகாரியான ஜெஃப் பெசோஸ் 200 பில்லியன் டாலர் நிகர மதிப்பை எட்டிய உலகின் முதல் மனிதர் என்ற பெருமையை அடைந்துள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## A.L. சோமயாஜி

- மாநில அரசிற்கான சிறப்பு மூத்த ஆலோசகர் என்ற ஒரு தற்காலிகப் பதவியை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.
- சிறப்பு முக்கியத்துவம் பெற்ற மற்றும் சிக்கல் தன்மையுள்ள வழக்குகளைக் கையாளுவதற்காக வேண்டி இந்தப் பதவிக்கு முன்னாள் மாநிலத் தலைமை வழக்குரைஞரான A.L. சோமயாஜியை மாநில அரசு நியமித்துள்ளது.

## தியா மற்றும் ஈழவா சமூகம்

- தமிழ்நாடு மாநில அரசானது தியா மற்றும் ஈழவா சமூகத்தினர்களுக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC - Backward Class) என்ற அங்கீகாரத்தை வழங்கி உள்ளது.
- இவர்கள் கேரளாவின் எல்லைப் பகுதியிலும் நீலகிரி மாவட்டத்திலும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.
- அப்போதைய திருவாங்கூர் - கொச்சின் மாநிலத்தில் ஈழவா சமூகத்தினர் BC சமூகத்தினருக்கான அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர்.
- அப்போதைய திருநெல்வேலி மாவட்டத்தின் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை தாலுக்கா ஆகியவை மதராஸ் மாநிலத்துடன் இணைக்கப்பட்ட பின்பும் கூட இவர்கள் அப்போதைய திருநெல்வேலி மாவட்டத்தில் BC என்ற சமூக அந்தஸ்திலேயே இருந்தனர்.

## பாரதி உரையின் 100வது ஆண்டு




Mahakavi Bharathi Memorial Library

- 1921 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி, மகாகவி பாரதி ஈரோடு கருங்கல்பாளையம் வாசிப்பு அறைக்கு வந்து 'மனிதன் அழிவற்றவன்' என்ற தலைப்பில் பொதுமக்களுக்கு உரை நிகழ்த்தினார்.
- கருங்கல்பாளையத்தில் அவர் ஆற்றிய உரை தான் பொதுமக்கள் மத்தியில் அவர் ஆற்றிய கடைசி உரையாகும்.
- பின்னர் அந்த வாசிப்பு அறையானது மகாகவி பாரதி நினைவு நூலகம் என மறுபெயரிடப் பட்டது.
- இது ஈரோட்டின் கருங்கல்பாளையத்தில் அமைந்துள்ள ஒரு பொது நூலகமாகும்.

## சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களை மறுபெயரிடல்

- ❖ சென்னையில் உள்ள 3 மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு மாநிலத்தின் மறைந்த 3 முன்னாள் முதல்வர்களின் பெயர்களை இடுவதற்காக தமிழ்நாடு அரசு ஒரு ஆணையைப் பிறப்பித்துள்ளது.
- ❖ அந்த அரசாணையின் படி, ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையமானது "அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ" என்றும் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையமானது "புரட்சித் தலைவர் டாக்டர் எம் ஜி இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ" என்றும் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையமானது "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா சி.ம்.பி.டி மெட்ரோ" என்றும் அழைக்கப்படும்.
- ❖ தில்லி மெட்ரோ மற்றும் ஹைதராபாத் மெட்ரோ ஆகியவற்றிற்குப் பிறகு இந்தியாவில் உள்ள மூன்றாவது மிகப்பெரிய மெட்ரோ அமைப்பு சென்னை மெட்ரோ ஆகும்.




## சா. கந்தசாமி

- ❖ புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் மற்றும் ஆவணப்படத் தயாரிப்பாளரான சா. கந்தசாமி சமீபத்தில் காலமானார்.
- ❖ கந்தசாமி 1968 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தனது "சாயாவனம்" என்ற புதினத்தின் மூலம் தமிழ் இலக்கிய உலகத்திற்குள் நுழைந்தார்.
- ❖ இவருடைய நாவலான "விசாரணை ஆணையமானது" சிறந்த தமிழ் புதினத்திற்கான 1998 ஆம் ஆண்டின் சாகித்ய அகாதமி விருதினை வென்றுள்ளது.



## அம்மா பிளாட்டினம் பிளஸ் சுகாதாரத் திட்டம்

- ❖ தமிழ்நாடு மாநில அரசானது அம்மா முழு சுகாதார பரிசோதனைத் திட்டத்தின் முதலாவது ஆண்டுக் கொண்டாட்டத்தின் போது அத்திட்டத்தின் கீழ் அம்மா பிளாட்டினம் பிளஸ் என்ற சுகாதாரத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ அம்மா முழு சுகாதார பரிசோதனைத் திட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.
    - ○ அம்மா தங்கம் – ரூ.1000
    - ○ அம்மா வைரம் – ரூ. 2000
    - ○ அம்மா பிளாட்டினம் – ரூ. 3000
- ❖ தற்பொழுது புதிய தொகுப்பானது ரூ.4000 மதிப்பிலான பரிசோதனையை அனுமதிக்கின்றது.

## தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி



**Positive signs**

How Tamil Nadu's economy has fared over the years

| Year | Value of GSDP (₹ in cr.) | Growth rate (%) | National average growth rate (%) |
|---|---|---|---|
| 2012-13 | 7,91,824 | 5.37 | 5.5 |
| 2013-14 | 8,51,976 | 7.6 | 6.4 |
| 2014-15 | 8,93,915 | 4.92 | 7.4 |
| 2015-16 | 9,67,562 | 8.24 | 8 |
| 2016-17 | 10,36,762 | 7.15 | 8.3 |
| 2017-18 | 11,25,793 | 8.59 | 7 |
| 2018-19 | 12,15,307 | 7.95 | 6.1 |
| 2019-20 | 13,12,929 | 8.03 | 4.2 |

▪ Against the all-India average figure of 4.2% last year, the State's performance – 8.03% – was almost double the former

*Note: All the figures have been calculated at constant prices, keeping 2011-12 as the base year*

Source: Central Statistics Organisation, RBI and Tamil Nadu government

- ❖ தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக தேசிய சராசரியை விட அதிகப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை தமிழகம் அடைந்து வருகிறது.
- ❖ கடந்த ஆண்டின் அகில இந்திய சராசரி விகிதமான 4.2% என்ற விகிதத்திற்கு எதிராக, நமது மாநிலத்தின் செயல்திறன் (8.03%) கிட்டத்தட்ட இரு மடங்காக உள்ளது.
- ❖ 2011-12 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக வைத்து, நிலையான விலையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தித் தரவுகளின் கணக்கீடானது செய்யப் பட்டு உள்ளது.
- ❖ 2019-20 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானத்தைப் பொருத்தவரை (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு), தமிழ்நாட்டில் இது ரூபாய் 1,53,853 ஆகும். அகில இந்திய அளவில் இது ஆறாவது இடமாகும்.

- 2018-19 ஆம் ஆண்டில், இது ரூபாய் 1,42,941 ஆக இருந்தது. அதாவது இந்திய அளவில் இது 12வது இடத்தில் இருந்தது.
- மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பைப் பொருத்தவரை, மாநிலத்தின் தரவரிசையில் மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில், இது முதல் இடத்திற்குச் சென்றது, இதற்குக் காரணம் மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவின் தரவுகள் கிட்டாததாக இருக்கலாம்.
- 2019-20 ஆண்டிற்கான முன்கூட்டியே மதிப்பீடுகளின்படி, முதன்மைத் துறையின் வளர்ச்சி விகிதம் 6.08% ஆகவும், சேவைத் துறையின் வளர்ச்சி விகிதம் 6.63% ஆகவும் உள்ளது.
- இரண்டாம் நிலைத் துறையானது இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது (10.02%).
- இரண்டாம் நிலைத் துறையில், உற்பத்தி மற்றும் கட்டுமானத் துறைகள் முறையே 10.27% மற்றும் 10.49% என்ற இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தைக் கொண்டு உள்ளன.
- முதன்மைத் துறையினுள் கூட, விவசாயப் பிரிவு 2018-19 ஆம் ஆண்டில் 5.8% ஆக இருந்த வளர்ச்சியை விட இந்த முறை அதிக வளர்ச்சி விகிதத்தை (7.43%) பதிவு செய்து உள்ளது.
- முதன்மை நிலை, இரண்டாம் நிலை மற்றும் சேவைத் துறைகளுக்கான முந்தைய ஆண்டின் புள்ளி விவரங்கள் முறையே 8.49%, 6.49% மற்றும் 7.83% ஆகும்.

## முதலமைச்சரின் சிறப்பு விருது

- தமிழ்நாடு அரசானது கோவிட் – 19 நோய்த் தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் 27 முன்களப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் சிறப்பு விருதினை வழங்கி உள்ளது.
- பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த செந்தமிழ்ச் செல்வி, முத்தம்மாள் மற்றும் ஆனந்த வள்ளி ஆகிய 3 பெண்மணிகள் இந்த ஆண்டிற்கான கல்பனா சாவ்லா விருதினைப் பகிர்ந்துள்ளனர்.

| விருதுகள் | வெற்றியாளர்கள் |
|---|---|
| **அப்துல் கலாம் விருது** | S. செல்வகுமார், ஆனந்தம் இளைஞர் அமைப்பின் நிறுவனர் |
| **கோவிட்-19 நோய்த் தொற்றுக்கான சிறப்பு விருது** | டாக்டர் சௌமியா சுவாமிநாதன், தலைமை விஞ்ஞானி, உலக சுகாதார நிறுவனம், ஜெனீவா |
| **முதலமைச்சரின் சிறந்த செயல்முறைகளுக்கான விருதுகள்** | 1) கருவூலம் மற்றும் கணக்குகள் துறை<br>2) சென்னைப் பெருநகர மாநகராட்சி<br>3) வேளாண், தோட்டக்கலை மற்றும் பயிர்கள் பயிரிடுதல் & வேளாண் பொறியியல் துறை<br>4) தமிழ்நாடு மருத்துவச் சேவைகள் கழகத்திற்கு ஊக்குவிப்புச் சான்றிதழ்<br>5) தமிழ்நாடு காவல் துறையின் இணையப் பாதுகாப்புப் பிரிவிற்கு ஊக்குவிப்புச் சான்றிதழ் |

| மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான உயரிய சேவைகளுக்கான விருது | |
|---|---|
| சிறந்த நிறுவனம் | காது கேளாதவர்களுக்கான சிஎஸ்ஐ உயர் நிலைப் பள்ளி, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர் |
| சிறந்த மருத்துவர் | டாக்டர் G. ஷியாமளா (63), ஜாஹிர் அம்மா பாளையம், சேலம் |
| சிறந்த தனியார் நிறுவன முதலாளி | சக்தி மசாலா தனியார் நிறுவனம் |
| சிறந்த சமூக சேவகர் | சி. சாந்தகுமார் |
| சிறந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி நிறுவனம், சேலம் |
| **பெண்களின் நலன்களை நோக்கிய சிறப்புமிகு சேவைகளுக்கான விருது** | |
| சிறந்த சமூக சேவகர் | கோயம்புத்தூரைச் சேர்ந்த கோதண்டவள்ளி என்ற குடும்ப நல ஆலோசகர் |
| சிறந்த நிறுவனம் (பெண்களின் நலனுக்குப் பணியாற்றும்) | ஊரகக் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டு மையம் |
| **சிறப்பாக செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள்** | |
| சிறந்த மாநகராட்சி | வேலூர் |
| சிறந்த நகராட்சி | விழுப்புரம் (முதலாவது), கரூர் (இரண்டாவது), கூத்தநல்லூர் (மூன்றாவது) |
| சிறந்த நகரப் பஞ்சாயத்து | வனவாசி, சேலம் மாவட்டம் (முதலாவது), வீரபாண்டி, தேனி (இரண்டாவது), மதுக்கரை, கோயம்புத்தூர் (மூன்றாவது) |
| முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது | S. அருண்குமார், மதுரை மாவட்டம், R. ராம்குமார், கடலூர் மாவட்டம், S. புவனேஸ்வரி, கடலூர் மாவட்டம் |



## அம்மா கோவிட் – 19 ஹோம் கேர் திட்டம்

- தமிழ்நாடு மாநில அரசானது வீட்டுத் தனிமைப்படுத்துதலில் உள்ள மக்கள் நோய் கண்டறிதல், மருந்துகள் மற்றும் ஆலோசக வசதிகள் என அனைத்தையும் பெறும் வகையில் அம்மா கோவிட் – 19 ஹோம் கேர் என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளது. இவர்கள் மருத்துவமனைகளில் இருந்தாலும் இந்த வசதியினைப் பெறலாம்.
- இந்த நல உதவித் தொகுப்பானது ரூ.2500 செலவு என்ற அளவில் 14 நாட்கள் கால அளவிற்கு வழங்கப் படுகின்றது.

## ஜல் ஜீவன் திட்ட ஆய்வு

- ஜல் சக்தித் துறை அமைச்சரான கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சருடன் ஒரு ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்.
- இந்தத் திட்டமானது நாட்டின் அனைத்து கிராமப்புறக் குடும்பத்தாரர்களுக்கும் குடிநீரை வழங்குவதற்காக மாநிலங்களுடன் இணைந்து செயல்படுத்துதலின் கீழ் உள்ளது.
- தமிழ்நாடானது மாநிலத்தின் அனைத்து கிராமப்புற குடும்பத்தாரர்களுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்பை வழங்குவதின் இலக்கை அடையும் நோக்கில் 2024 ஆம் ஆண்டில் 100% மக்களையும் உள்ளடக்கத் திட்டமிட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள 1 கோடி 26 இலட்சம் கிராமப்புற குடும்பத்தாரர்களில், ஏறத்தாழ 26% குடும்பத் தாரர்களுக்கு குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்கப் பட்டு உள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது 2020-21 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 34 இலட்சம் குடும்பங்களுக்கு குடிநீர்க் குழாய் இணைப்பை வழங்க முடிவு செய்துள்ளது.




## "ஒரு மாவட்டம், ஒரு பொருள்" என்ற திட்டத்தின் கீழ் மஞ்சள்

- ஈரோடு மஞ்சளானது மத்திய அரசினால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டமான "ஒரு மாவட்டம், ஒரு பொருள்" என்ற அணுகுமுறையின் (ODOP - one district one product) கீழ் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- அதே போல நீலகிரி மாவட்டத்திற்காக வேண்டி கேரட் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

- ஆத்ம நிர்பர் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் உணவுப் பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகமானது பிரதம மந்திரி நுண் உணவு பதப்படுத்துதல் நிறுவனங்களை முறைப்படுத்துதல் என்ற ஒரு திட்டத்தை ஆரம்பித்து உள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு பொருள் தேர்ந்தெடுக்கப் படுகின்றது.
- ODOP ஆனது ஒரு மாவட்டத்தில் இருக்கும் நுண் உணவு பதப்படுத்தல் தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக நிதி, தொழில்நுட்பம் மற்றும் வணிகம் ஆகியவற்றுக்கு வேண்டிய ஆதரவை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நடவடிக்கைகளுக்காக மத்திய அரசானது 60% நிதியையும் மாநில அரசானது 40% நிதியையும் அளிக்கின்றது.

## முத்ரா கடன் திட்டத் தரவரிசை

- பெண்களுக்குக் கடன் வழங்குதலில் பிரதான் மந்திரி முத்ரா யோஜனாவின் தரவரிசைப் பட்டியலில் (PMMY - Pradhan Mantri Mudra Yojana) தமிழ்நாடு முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தத் தரவரிசையில் அதனையடுத்து மேற்கு வங்காளம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

### *PMMY*

- PMMY ஆனது பெருநிறுவனம் அல்லாத சிறு மற்றும் நுண் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதற்காக வேண்டி 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ரூ.10 லட்சம் வரையில் கடன்கள் வழங்கப் படுகின்றன.
- இந்தக் கடன்கள் ஊரக வட்டார வங்கிகள், வணிக வங்கிகள், சிறு நிதியியல் வங்கிகள், வங்கிச் சேவை அல்லாத நிதியியல் நிறுவனங்கள், நுண் நிதியியல் நிறுவனங்கள் ஆகியவற்றினால் வழங்கப் படுகின்றன.

# தேசியச் செய்திகள்

## தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020

- மத்திய அமைச்சரவையானது உயர் கல்வித் துறையைச் சீரமைப்பதற்காக வேண்டி 2020 ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### *பின்னணி*

- 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் முன்னாள் அமைச்சரவைச் செயலாளரான TSR சுப்பிரமணியன் என்பவரின் தலைமையின் கீழ் புதிய கல்விக் கொள்கையின் (NEP - New Education Policy) மேம்படுத்து வளர்ச்சிக்கான குழுவானது தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வரைவு தேசிய கல்விக் கொள்கைக்கான குழுவானது இஸ்ரோவின் முன்னாள் தலைவரான கஸ்தூரிரங்கன் என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்தது.
- கடைசியாக கல்வி கொள்கையானது 34 ஆண்டுகளுக்கு முன்பாக 1986 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டிருந்தது.

- முதலாவது NEP ஆனது 1968 ஆம் ஆண்டில் இந்திரா காந்தி தலைமையிலான அரசால் பிரகடனப் படுத்தப்பட்டது. இரண்டாவது NEP ஆனது 1986 ஆம் ஆண்டில் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான அரசால் பிரகடனப் படுத்தப்பட்டது. மூன்றாவது NEP ஆனது பிரதமர் நரேந்திர மோடியால் பிரகடனப் படுத்தப்பட்டு உள்ளது.

### *சிறப்பம்சங்கள்*

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது மத்திய அமைச்சரவையினால் மத்தியக் கல்வித்துறை அமைச்சகமாக பெயர் மாற்றப் பட்டு உள்ளது.
- மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் கல்விக்கான பொதுச் செலவினமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6% ஆக அதிகரிக்கப்பட உள்ளது. இது இதற்கு முன்பு 1.7% ஆக இருந்தது.

### *பள்ளிக் கல்வி*

- இது தற்பொழுதுள்ள 10+2 பாடத் திட்ட முறையை மாற்றி 3-18 வயதுடைய குழந்தைகளை உள்ளடக்கக் கூடிய வகையில் 5+3+3+4 என்ற வழிகாட்டு அமைப்பை ஏற்படுத்த பரிந்துரைத்துள்ளது.
- 5 ஆண்டு கால அடிப்படை நிலை : 3 ஆண்டு கால பாலர் வகுப்புப் பள்ளி மற்றும் படித்தரம் (கிரேடுகள்) 1, 2;
- 3 ஆண்டு கால ஆயத்தப் பள்ளி நிலை: (ஆரம்ப நிலைக்குப் பிந்தைய) படித்தரங்கள் 3, 4, 5;
- 3 ஆண்டு கால நடுநிலை: (ஆரம்பநிலைக்கு மேல் நிலை) படித்தரங்கள் 6, 7, 8;
- 4 ஆண்டு கால உயர் நிலை: (உயர்நிலை) படித்தரங்கள் 9, 10, 11, 12;
- 2025 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்குமான பாலர் வகுப்புக் கல்வியை (3-6 ஆண்டுகள்) உறுதி செய்தல்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பள்ளிக் கல்வியில் 100% மொத்தச் சேர்க்கை விகிதத்துடன் (GER - Gross Enrolment Ratio) பாலர் பள்ளியிலிருந்து உயர்நிலைக் கல்வி வரை அனைவருக்கும் கல்வியைக் கிடைக்கச் செய்தல்
- 5 ஆம் வகுப்பு வரை தாய்மொழி வழிக் கல்வியை உறுதி செய்ய வேண்டும்.
- 6 ஆம் வகுப்பிலிருந்து குறியாக்கல் மற்றும் தொழில்முறைக் கல்வியுடன் ஒரு புதிய பள்ளிப் பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.
- தேசிய அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணறிவுத் திட்டமானது 2025 ஆம் ஆண்டிற்குள் 3 ஆம் வகுப்பு நிலையில் அடிப்படைத் திறன்கள் கற்பிப்பதை உறுதி செய்யும்.
- ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் நடத்தப்படும் இறுதித் தேர்வுகளுக்கு மாற்றாக, பள்ளி மாணவர்கள் 3 தேர்வுகளை மட்டும் அதாவது 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் மட்டுமே தேர்வுகளை எழுதுவர்.

### *உயர்கல்வி*

- அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு ஆகியவற்றை இணைத்தல்.
- பல்வேறு நுழைவு (சேர்க்கை) மற்றும் வெளியேறல் வாய்ப்புகளுடன் 4 ஆண்டுகால இளநிலைப் பட்டப்படிப்புகள் அறிமுகப் படுத்தப்படும்.
- 2030 ஆம் ஆண்டில், கற்பித்தலுக்கான குறைந்தபட்ச பட்டப்படிப்புத் தகுதியானது 4 ஆண்டு கால ஒருங்கிணைந்த இளங்கலை கல்வியியல் படிப்பாக இருக்கும்.

- ❖ ஆய்வியல் நிறைஞர் படிப்பானது நிறுத்தப்படும்.
- ❖ இது தொழில்துறைக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதத்தை இரட்டிப்பாக்குவதை, அதாவது 2018 ஆம் ஆண்டில் 26.3%லிருந்து 2035 ஆம் ஆண்டில் 50% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஜேஇஇ முதன்மைத் தேர்வு மற்றும் நீட் ஆகியவற்றுடன் கூடுதலாக நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களுக்கான மாணவர்களின் சேர்க்கைக்காக நுழைவுத் தேர்வை நடத்தும் கூடுதல் பொறுப்பும் தேசியத் தேர்வு முகமையிடம் (NTA - National Testing Agency) வழங்கப் படும்.
- ❖ உயர்கல்வியை ஒழுங்குபடுத்துவதற்காக இந்திய உயர் கல்வி ஆணையமானது அமைக்கப் படும்.
- ❖ இது மருத்துவம் மற்றும் சட்டப் படிப்புகளைத் தவிர அனைத்து உயர் கல்விக்கான ஒற்றை ஒழுங்குமுறை அமைப்பாகும்.




## NEP-2020ன் கீழ் ஆணையங்கள் / பாடத் திட்டம்

- ❖ NEP-2020ன் கீழ் பின்வரும் அமைப்புகள் அமைக்கப்படும்.
- ❖ தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகமானது (NCERT - National Council of Educational Research and Training) 8 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக வேண்டி ஆரம்ப கால குழந்தைகள் நலம் மற்றும் கல்விக்கான தேசியக் கல்விசார் மற்றும் வழிகாட்டுக் கட்டமைப்பை உருவாக்க உள்ளது.
- ❖ பள்ளி கல்விக்கான ஒரு விரிவான தேசியக் கல்விசார் கட்டமைப்பானது NCERTயினால் மேம்படுத்தப்படும்.
- ❖ தேசிய ஆய்வு மையமான "பராக்" (முழுமையான வளர்ச்சிக்கான செயல்பாட்டு ஆய்வு, மறு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு) ஒரு தர நிர்ணய அமைப்பாக அமைக்கப் படும்.

- தேசிய ஆராய்ச்சி அமைப்பானது (NRF - National Research Foundation) ஒரு வலுவான ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக ஒரு தலைமை அமைப்பாக உருவாக்கப்படும்.
- ஆசிரியர் கல்விக்கான ஒரு விரிவான தேசிய கல்விசார் கட்டமைப்பானது NCERT உடன் இணைந்து ஆசிரியர் கல்விக்கான தேசியக் கழகத்தினால் (NCTE - National Council for Teacher Education) உருவாக்கப்படும்.
- ஆசிரியர்களைப் பணியில் சேர்ப்பதற்காக, ஆசிரியர்களுக்கான ஒரு பொது தேசியத் தொழில்சார் தரங்களானது (NPST - National Professional Standards for Teachers) 2022 ஆம் ஆண்டில் NCTEயினால் மேம்படுத்தப்படும்.
- உயர் கல்விக்கான தரத்தை நிர்ணயித்தல் மற்றும் அங்கீகாரம் அளித்தலுக்காக மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் ஒரு தனிச் சுதந்திர மாநிலப் பள்ளித் தரங்கள் ஆணையத்தினை (SSSA - State School Standards Authority) ஏற்படுத்த உள்ளன.
- ஒரு தன்னாட்சி அமைப்பான, தேசியக் கல்விசார் தொழில்நுட்ப மன்றமானது தொழில்நுட்பப் பயன்பாடு மீதான கருத்துகளின் தடையற்றப் பரிமாற்றலுக்கான ஒரு தளத்தை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்படும்.
- இந்திய மொழி பெயர்ப்பு மற்றும் பொருள்விளக்க நிறுவனம், பாலி, பாரசீகம் மற்றும் பிராகிருதம் ஆகிய மொழிகளுக்கான தேசிய மையம் ஆகியவற்றை அமைத்தல், உயர்கல்வி நிறுவனங்களில் சமஸ்கிருதத்தை வலுப்படுத்தல் & அனைத்து மொழித் துறைகளையும் வலுப்படுத்துதல்.
- இந்திய உயர் கல்வி ஆணையமானது மருத்துவம் மற்றும் சட்டக் கல்வியைத் தவிர மற்ற அனைத்து உயர் கல்விக்கான ஒரு முழுமையான மற்றும் ஒற்றை உயர் தலைமை அமைப்பாக அமைக்கப்படும்.

## இந்தோ இஸ்லாமிய கலாச்சார அறக்கட்டளை

- அயோத்தியில் ஒரு மசூதியைக் கட்ட இந்த அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது.
- இது ராம் ஜன்மபூமி-பாப்ரி மஸ்ஜித் தகராறு வழக்கில் உச்சநீதிமன்றத்தின் 2019 ஆண்டின் நவம்பர் மாத உத்தரவுக்கு இணங்கிய படி அமைக்கப்பட்டு உள்ளது.
- உத்தரப்பிரதேசத்தின் மத்திய சன்னி வக்ஃப் வாரியமானது இதற்கு அறங்காவலராக இருக்கும்.

## AIM iCREST

- நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டமானது (AIM - Atal Innovation Mission) AIM iCREST என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்திற்காக AIM ஆனது பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவனம் & வத்வா நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- இது உயர் செயல்திறன் கொண்ட புத்தாக்க நிறுவனங்களை உருவாக்குவதின் மீது கவனம் செலுத்தும் வலுவான சூழலியலுக்கான ஒரு புத்தாக்க நிறுவங்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டமாகும்.
- இது நாடு முழுவதும் புத்தாக்கச் சூழலியலில் விரிவான (முழுமையான) செயல்பாடுகளை ஏற்படுத்தி அவற்றை ஊக்கப்படுத்துவதற்காக இந்தியாவில் தொடங்கப் பட்ட இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது முன்னெடுப்பாகும்.

## முகுந்தகம் சர்மா குழு

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டிற்கான பல்வேறு விளையாட்டுப் போட்டி விருதுகளின் வெற்றியாளர்களைத் தேர்வு செய்வதற்காக தேர்வுக் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியான முகுந்தகம் சர்மா என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

## கிராமோத்யோக் விகாஸ் யோஜனா

- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகமானது "கிராமோத்யோக் விகாஸ் யோஜனா" என்ற திட்டத்தின் கீழ் அகர்பத்தியை உற்பத்தி செய்வதில் ஈடுபடும் கைவினைஞர்களுக்குப் பயன்படுவதற்காக வேண்டி ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையமானது இந்தத் துறையில் பணியாற்றும் கைவினைஞர்களுக்குப் பயிற்சி மற்றும் உதவியை அளிக்க உள்ளது.

## ஸ்காச் தங்க விருது

- மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகமானது தனது "தகவல் தொழில்நுட்பத்தினால் செயல்படுத்தப்படும் நிதியுதவித் தட்டங்களின் மூலம் பழங்குடியினருக்கு அதிகாரமளித்தல்" என்ற திட்டத்திற்காக ஸ்காச் தங்க விருதினைப் பெற்றுள்ளது.
- இது ஸ்காச் என்ற ஒரு சுயாதீன அமைப்பால் வழங்கப்படும் நாட்டின் ஒரு உயரிய குடிமை விருதாகும்.
- இது இந்தியாவை ஒரு சிறந்த தேசமாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட மக்கள், திட்டங்கள் மற்றும் நிறுவனங்களை அங்கீகரிக்கின்றது.
- இது நிறுவனங்கள்/அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் ஆகியோர்களுக்கு வழங்கப் படுகின்றது.




## பாரத் காற்றிழை சேவைகள்

- இது இந்திய அரசினால் தொடங்கப்பட்ட டிஜிட்டல் இந்தியா முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக பிஎஸ்என்எல் நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது.
- இது பிஎஸ்என்எல் அமைவிட மையத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவு வரம்பில் கம்பியில்லாத் தந்தி வழியிலான இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சீன மொழி

- தேசியக் கல்விக் கொள்கையானது பள்ளிகளில் நடத்தப்பட இருக்கும் தனது அயல்நாட்டு மொழிகளின் உதாரணப் பட்டியலில் இருந்து மாண்ட்ரீன் அல்லது சீன மொழியை விலக்கியுள்ளது.
- உயர் தரத்திலான இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்துடன் சேர்த்து கொரிய மொழி, ஜப்பானிய மொழி, தாய், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், போர்ச்சுக்கல் மொழி, ரஷ்ய மொழி ஆகிய அயல்நாட்டு மொழிகள் இடைநிலைக் கல்வி நிலையில் கற்பிக்கப்பட உள்ளன.

## 100வது நினைவு தினம் - திலகர்

- லோக்மான்ய பால கங்காதர திலகரின் 100வது நினைவு தினம் ஆகஸ்ட் 01 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இவர் லால்-பால்-பால் (லாலா லஜ்பத் ராய், பாலகங்காதர திலகர், பிபின் சந்திர பால்) என்ற மூன்று நபர்களில் ஒருவராவார்.
- இவர் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் "இந்திய அமைதியின்மையின் தந்தை" என்றழைக்கப் படுகின்றார்.
- ஜவஹர்லால் நேரு இவரை "இந்தியப் புரட்சியின் தந்தை" என்று அழைக்கின்றார்.
- மகாத்மா காந்தி இவரை "நவீன இந்தியாவை உருவாக்குபவர்" என்று கூறியுள்ளார்.
- இவர் "பூர்ண சுயராஜ்ஜியம்" அல்லது "முழுமையான தன்னாட்சி" என்ற கருத்தின் வலுவான ஆதரவாளராக விளங்கினார்.
- இவரது புகழ்பெற்ற முழக்கம் "சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை, அதை நான் அடைந்தே தீருவேன்" என்பதாகும்.

## ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் (SIH) 2020

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 2020 ஆம் ஆண்டின் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தானின் (SIH - Smart India Hackathon) இறுதிச் சுற்றில் பங்கு பெற்ற பங்கேற்பாளர்களுடன் காணொளி வாயிலாக உரையாற்றினார்.
- இந்த SIH ஆனது இந்திய அரசின் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், பெர்சிஸ்டன்ட் அமைப்பு மற்றும் i4C ஆகியவற்றினால் இணைந்து நடத்தப்பட்டது.
- SIH ஆனது நமது அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சில சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வேண்டி மாணவர்களுக்கு ஒரு தளத்தை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட தேசிய அளவிலான ஒரு முன்னெடுப்பாகும்.



- இது ஒரு கருத்துரு குறித்த புத்தாக்கக் கலாச்சாரம் குறித்து கற்பிப்பதையும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மனநிலையை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SIHன் முதலாவது பதிப்பானது 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது-

## வித்யார்த்தி விக்யான் மன்தன்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ வர்தன் வித்யார்த்தி விக்யான் மன்தன் என்ற ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது ஆறாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களிடையே உண்மையான அறிவியலைப் பிரபலப்படுத்துவதற்காக வேண்டித் தொடங்கப்பட்ட தேசிய அளவிலான ஒரு திட்டமாகும்.
- இது டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்தும் வகையில் புது தில்லிக்கான இந்தியாவின் ஒரு மிகப்பெரிய அறிவியல் திறன்சார் ஆராய்ச்சித் தேர்வாகும்.
- இது இந்திய அரசின் விக்யான் பிரசார் மற்றும் தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகத்துடன் இணைந்து விஜ்னானா பாரதி (VIBHA - Vijnana Bharathi) என்பதின் ஒரு முன்னெடுப்பாகும்.
- VIBHA என்பது பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புவதற்காகவும் பிரபலப்படுத்துவதற்காகவும் வேண்டி தொடங்கப்பட்ட ஒரு தேசிய இயக்கமாகும்.

## பிரதீப் ஷா குழு

- மத்திய சர்வதேச நிதியியல் சேவைகள் ஆணையமானது பிரதீப் ஷா தலைமையிலான ஒரு வல்லுநர் குழுவை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.
- இது சர்வதேச நிதியியல் சேவைகள் மையத்தில் சர்வதேச சில்லறை வணிகத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து பரிந்துரைப்பதற்காகப் பணியாற்றுகின்றது.

## வரையறுக்கப்பட்ட (தரப்படுத்தப்பட்ட) போக்குவரத்து வாகன அளவுகள்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989ன் கீழ் மோட்டார் வாகனங்களின் அளவுகள் தொடர்பான விதி – 93 ஐத் திருத்துவதற்கான ஒரு அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தத் திருத்தங்களானவை ஐரோப்பாவிற்கான சர்வதேச ஐக்கிய நாடுகள் பொருளாதார ஆணையமானது (UNECE - United Nations Economic Commission for Europe) தரங்களின் வரிசையில் மோட்டார் வாகனங்களின் அளவுத் தரங்களை அளிக்க இருக்கின்றது.
- இது நாட்டில் தளவாடத் திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும். இந்த மேம்படுத்தப்பட்ட அளவுகள் குறிப்பிட்ட எடைக்குள் கூடுதல் பயணிகள் அல்லது கூடுதலாக ஏற்றிச் செல்லக் கூடிய திறன்களை அளிக்க இருக்கின்றது.

## மின்னணுத் தடுப்பு மருந்து நுண்ணறிவு அமைப்பு (Evin)

- இந்தியாவில் உள்ள 8 மாநிலங்கள், 81 அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவச் சாதனங்களின் பற்றாக்குறை காலத்தில் எச்சரிக்கை செய்தல், இருப்புத் தன்மையை

உறுதி செய்தல், மாநிலத்திற்குப் பொருத்தமான கோவிட் – 19 உபகரணங்களுடன் 100% பொருந்தி வரும் வகையில் உபயோகப்படுத்துதல் ஆகியவற்றுக்காக eVIN பயன்பாட்டை (Electronic Vaccine Intelligence Network application) பயன்படுத்துகின்றது.

- E-vin என்பது நாட்டில் நோய் எதிர்ப்பு விநியோகச் சங்கிலி அமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கூடிய ஒரு புத்தாக்கத் தொழில்நுட்பத் தீர்வாகும்.




## பாதுகாப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை, 2020

- மத்திய பாதுகாப்புத் துறை, அமைச்சகமானது வரைவு பாதுகாப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை, 2020 என்பதனை வெளியிட்டுள்ளது.
- தற்சார்பு மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்காக நாட்டின் பாதுகாப்பு உற்பத்தித் திறன்கள் சார்ந்தவற்றிற்கு ஊக்கமளிப்பதற்காக மத்திய பாதுகாப்புத் துறையின் விரிவான வழிகாட்டு ஆவணமாக இந்தக் கொள்கை விளங்குகின்றது.

## முதலாவது வியாப்பர் மாலா விரைவு இரயில்

- வடக்கு இரயில்வேயானது தில்லியில் உள்ள கிஷான்கஞ்சிலிருந்து திரிபுராவில் உள்ள ஜிரானியாவை இணைக்கும் வகையில் தனது முதலாவது வியாப்பர் மாலா விரைவு இரயிலை இயக்கியுள்ளது.
- இது சிறு வியாபாரிகள் தங்களது பொருட்களை குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், எளிதாக, சுற்றுச்சூழலுக்கு உகந்தப் போக்குவரத்து முறையில் கொண்டு செல்ல அவர்களுக்கு உதவ இருக்கின்றது.



## கோவிட் – 19BWM செயலி



**REAL-TIME MONITORING**

- Bio-medical waste includes masks, wipes, gloves or anything that may have body fluid. This waste needs to be segregated in identifiable yellow bags and collected while maintaining all infection-control protocols
- This app, also functional in web-based applications, will enable real-time monitoring of bio-medical waste from collection to disposal

- இந்த செயலியானது மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் மேம்படுத்தப் பட்டுள்ளது.
- தற்பொழுது இந்திய உச்ச நீதிமன்றமானது தினசரி அடிப்படையில் உயிரி மருத்துவக் கழிவுகளைக் கண்காணிப்பதற்காக "கோவிட் – 19 BWM செயலியை" பயன்படுத்துமாறு அனைத்து நகராட்சிக் கழகங்கள் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களைக் கட்டாயப் படுத்தியுள்ளது.
- இது கழிவுகள் உரிய முறையில் சேகரிக்கப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்டு, பதிவு செய்யப்பட்ட பொது உயிரி மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்குச் சென்றடைவதை உறுதி செய்கின்றது.

## ராம் மந்திர் – அடிக்கல் நாட்டு விழா

- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 அன்று இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி அயோத்தியா நகரின் வடக்குப் பகுதியில் அமைய இருக்கும் இந்துக் கோயிலுக்கு அடிக்கல் நாட்டினார்.
- கடந்த ஆண்டுகளாக இந்து மற்றும் முஸ்லீம்கள் இந்த இடத்திற்கு உரிமை கோரி வந்தனர்.
- கடந்த ஆண்டு (நவம்பர் 9), இந்திய உச்ச நீதிமன்றம் இந்த இடத்தை இந்துக்களுக்கு வழங்கியது.



## SIH 2020

- பாதுகாப்புத் துறையின் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2020ல் (SIH - Smart India Hackathon) முதல் பரிசை வென்று உள்ளது.
- SIH இறுதிப் போட்டியானது உத்தரப் பிரதேசத்தில் உள்ள நொய்டா பொறியியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனத்தில் நடத்தப்பட்டது.

## இந்தியாவின் புதிய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்

- ஜம்மு காஷ்மீரின் முன்னாள் ஆளுநரான கிரிஷ் சந்திர முர்மு அவர்கள் இந்தியாவின் 14வது தலைமைக் கணக்குத் தணிக்கையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தனது பதவிக் காலத்தை நிறைவு செய்த ராஜிவ் மெகரிஷி என்பவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இந்திய நீர் வள தகவல் அமைப்பின் புதிய பதிப்பு

- மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகமானது (MoJS - Ministry of Jal Shakti) புதிய செயல்பாடுகள் மற்றும் புதிய அம்சங்களுடன் இந்திய நீர் வளத் தகவல் அமைப்பின் (India -WRIS - India Water Resources Information System) ஒரு புதிய பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இது www.india-wris.gov.in என்ற இணைய தளத்தின் மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் அணுகக் கூடியதாகவும் உள்ளது.
- மேலும், MoJS ஆனது India-WRIS தளத்தைப் பராமரித்து மற்றும் மேம்படுத்துவதற்காக தேசிய நீர்த் தகவல் மையம் என்ற பிரத்தியேக அமைப்பைத் தொடங்கியுள்ளது.

## உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி முதல்வர்களுக்கான நிகழ்நேர பயிற்சித் திட்டம்

- இந்திய விளையாட்டு ஆணையமானது "பள்ளி செல்லும் குழந்தைகளின் கேலோ இந்தியா உடற்பயிற்சி ஆய்வு" குறித்த ஒரு நிகழ்நேரப் பயிற்சித் திட்டத்தை நடத்த இருப்பதாக அறிவித்துள்ளது.
- இந்தப் பயிற்சியானது சிஐஎஸ்சிஇ (Council for The Indian School Certificate Examinations) பள்ளிகளைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு கேலோ இந்தியா கைபேசி செயலியின் மூலம் அளிக்கப்பட உள்ளது.
- இந்தப் பயிற்சிக்காக இது இந்தியப் பள்ளி சான்றளிப்புத் தேர்வுகளுக்கான கல்வி வாரிய ஆணையம் மற்றும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.

## என்வின்டாட்ஸ் இந்தியா 2020 அறிக்கை

- சமீபத்தில் தேசியப் புள்ளியியல் அலுவலகமானது என்விஸ்டாட்ஸ் இந்தியா – 2020 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது 2019 ஆம் ஆண்டில் அனல் காற்று நாட்களின் எண்ணிக்கையானது 80%ற்கும் மேல் அதிகரித்துள்ளதாக கூறுகின்றது.
- இந்த அறிக்கையானது மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்டச் செயல்படுத்துதல் துறை அமைச்சகத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.

### *சில முக்கியமான அம்சங்கள்*

- அதிக எண்ணிக்கையிலான அனல் காற்று நாட்கள் இராஜஸ்தானில் பதிவாகி உள்ளன. இதற்கு அடுத்து உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான அனல் காற்று நாட்கள் பதிவாகியுள்ளன.
- 2018 ஆம் ஆண்டில் கடுமையான ஏற்பட்ட சுவாச நோய்த் தொற்றினால் நிகழ்ந்த இறப்பானது கடந்த 6 ஆறு ஆண்டுகளில் அதிகமாக உள்ளது.
- சுவாச நோய்த் தொற்றினால் ஏற்பட்ட அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் மேற்கு வங்கத்தில் பதிவாகியுள்ளன.
- தில்லியானது நாட்டில் அதிக எண்ணிக்கையிலான பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து பெங்களூரு அதிக எண்ணிக்கையிலான இவ்வகை வாகனங்களைக் கொண்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநிலமானது அதிக எண்ணிக்கையிலான குடிசை வாழ் மக்களைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை அதிக எண்ணிக்கையிலான குடிசை வாழ் மக்களைக் கொண்டுள்ளன.

## கைத்தறித் திட்டத்திற்கான கைபேசிச் செயலி மற்றும் இணையதளம்

- மத்திய ஜவுளித் துறை அமைச்சர் 6வது தேசியக் கைத்தறித் தினக் கொண்டாட்டத்தன்று நெசவாளர்களுக்கான கைத்தறிக் குறியீட்டுத் திட்டத்திற்காக வேண்டி கைபேசிச் செயலி மற்றும் பின்நிலை இணையதளத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- தனிப்பட்ட நெசவாளர்கள் மற்றும் அமைப்புகளுக்காக "My Handloom" என்ற ஒரு இணைய வாயிலும் அமைச்சரால் தொடங்கப் பட்டுள்ளது.

## கடலுக்கு அடியில் கண்ணாடி இழை வடம்

- இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி சென்னை மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவில் உள்ள போர்ட் பிளேயர் ஆகிய இடங்களை இணைக்கும் வகையில் கடலுக்கு அடியிலான ஒரு கண்ணாடி இழை வடத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த கடலுக்கடியிலான கண்ணாடி இழை வடமானது போர்ட் பிளேயரிலிருந்து அத்தீவின் சுவராஜ் டிவீப் (ஹாவ்லாக்), லிட்டில் அந்தமான், கார் நிக்கோபர், கம்மோர்டா, கிரேட் நிக்கோபர், பெரும் தீவு மற்றும் ரங்காட் ஆகியவற்றையும் இணைக்க உள்ளது.



## டேபிள்டாப் விமான நிலையங்கள் மற்றும் கோழிக்கோடு நிகழ்வு

- சிறப்பு "வந்தே பாரத்" திட்டத்தின் போது இயக்கப்பட்ட ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானமானது கோழிக்கோடு ஓடு தளத்தைத் தாண்டி, ஒரு பள்ளத்திற்குள் விழுந்தது.
- 2010 ஆம் ஆண்டில், இதே போன்ற ஒரு விபத்தானது மங்களூரு விமான நிலையத்தில் நிகழ்ந்தது.
- டேபிள்டாப் விமானநிலையம் என்பது மலையின் மேற்பரப்பு அல்லது பீடபூமியின் உச்சியில் கட்டப்பட்டுள்ள ஒரு விமான நிலையமாகும்.
- இந்த விமான நிலையங்களின் ஓடுபாதையானது ஒரு முனை அல்லது அதன் இரு முனை ஆகியவற்றில் ஒரு பள்ளத்தைக் கொண்டுள்ளதாக இருக்கும்.
- சிம்லா மற்றும் குலு (இமாச்சலப் பிரதேசம்), லெங்புய் (மிசோரம்), பாக்யாங் (சிக்கிம்), கோழிக்கோடு மற்றும் கண்ணூர் (கேரளா), மங்களூரு (கர்நாடகா) ஆகியவை இந்தியாவில் உள்ள டேபிள்டாப் விமான நிலையங்களாகும்.
- நேபாளத்தில் உள்ள காத்மண்டு மற்றும் பூடானில் உள்ள பாரோ ஆகியவை இந்தியாவிற்கு வெளியே அமைந்த இதர டேபிள்டாப் விமான நிலையங்களாகும்.



## 101 பாதுகாப்புத் துறை உபகரணங்கள் இறக்குமதி மீதான தடை

- 101 உபகரணங்களைக் கொண்ட பட்டியலானது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது ஆத்ம நிர்பர் பாரத் அபியானின் கீழ் இந்தியாவைச் சுயசார்பு கொண்ட ஒரு நாடாக உருவாக்குவதற்காக மேற்கொள்ளப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளியிடப்பட்ட பாதுகாப்பு கொள்முதல் நடைமுறையானது பாதுகாப்பு உபகரணத்தில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற முன்னெடுப்பிற்கு ஆதரவளிக்கின்றது.
- வாங்குதல் என்ற (உலகளவில் இந்தியாவில் தயாரிப்போம்) ஒரு புதிய வகையானது குறைந்த பட்சம் 50% உள்நாட்டுப் பொருட்களுடன் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.

**SOME ON BAN LIST**

- 7.62x51 Sniper Rifle
- Shipborne Cruise Missiles, Short-Range Surface-to-Air Missiles
- Light Combat Aircraft (LCA) MK I A and Light Combat Helicopter
- Fixed Wing Mini UAVs
- Wheeled Armoured Fighting Vehicle
- Light Machine Gun and Assault Rifle 7.62 x 39mm

## ஏர் சுவிதா தளம்

- தில்லி சர்வதேச விமான நிலைய நிறுவனமானது ஏர் சுவிதா தளத்தை மேம்படுத்தியுள்ளது.
- இது வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகளைப் பின்வருவனவற்றை மேற்கொள்ள அனுமதிக்கும் வகையில் தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது தளமாகும்.
    - சுய உறுதி ஆவணத்தைக் கட்டாயமாகப் பூர்த்தி செய்தல்
    - கொரானா வைரஸ் தொற்றிற்காக வேண்டி கட்டாய நிறுவன தனிமைப்படுத்துதல் முறையிலிருந்து விலக்கு பெறுவதற்காக தகுதியுள்ள பயணிகள் விண்ணப்பித்தல்.
- இது பயணிகளின் பயணத்தை நேரடித் தொடர்பு அற்ற வகையில் எளிமையாகவும் வசதியாகவும் மாற்றி அமைக்க இருக்கின்றது. இவர்கள் பயணத்தின் போது நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை.

## கண்டகி முக்த் பாரத்

- இந்தியப் பிரதமர் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது சுவச்சதா அல்லது தூய்மைக்காக வேண்டி "கண்டகி முக்த் பாரத்" என்ற ஒரு வார காலப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளார்.
- இந்த வாரத்தின் போது, சுவச்சதாவிற்காக வேண்டி ஜன் அந்தோலனை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காக ஒவ்வொரு நாளும் நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் சிறப்பு சுவச்சதா முன்னெடுப்புகளைக் கொண்டிருக்கும்.

## தேசிய உள்கட்டமைப்புத் தொடரின் தகவல் பலகை

- மத்திய நிதித் துறை அமைச்சர் தேசிய உள்கட்டமைப்புத் தொடரின் முகப்புப் பலகையைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது உள்கட்டமைப்புத் திட்டங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் நிர்வகித்து, ஒருங்கிணைக்க உள்ளது.

- இந்த நிகழ்நேர இணைய வாயிலானது நாட்டில் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் 6800 நிகழ்நேரத் திட்டங்கள் குறித்த தகவல்களைக் காட்டுகின்றது.

## தேசிய யானைகள் திட்ட இணைய வாயில்

- "சுரக்சியா" என்ற பெயர் கொண்ட ஒரு தேசிய இணைய வாயிலானது உலக யானைகள் தினமான ஆகஸ்ட் 12 அன்று தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வின்போது "இந்தியாவில் மனித – யானை மோதல் மேலாண்மைக்கான சிறந்த நடைமுறைகள்" (Best practices of Human-Elephant Conflict Management in India) என்ற ஒரு சிறு புத்தகமும் வெளியிடப் பட்டது.
- இந்த இணைய வாயிலானது ஆய்விற்கான தரவுகளின் சேகரிப்பிற்கு உதவ உள்ளது. மேலும் அத்தரவுகளின் அடிப்படையில் முக்கியமான முடிவுகளை கண்டறியவும் இது உதவ இருக்கின்றது.
- யானைகள் திட்டமானது 1992 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இந்திய யானைகள் பின்வருவனவற்றின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன.
  - வலசை போகும் இனங்களுக்கான ஒப்பந்தத்தின் பட்டியல் I
  - வன விலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972ன் அட்டவணை I




## மகள்களுக்குச் சம வாரிசு உரிமை

- இந்து குடும்பத்தில் உள்ள மகள்கள் இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டம், 2005 என்ற சட்டத்தின் அமலாக்கத்திற்கு முன்பாக அவரது தந்தை இறந்து போனாலும் கூட கூட்டு இந்துக் குடும்பச் சொத்தில் அவர்கள் சம வாரிசுரிமையைப் பெறுகின்றனர் என்று இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.
- இந்தத் தீர்ப்பானது மூதாதையர்களின் மரபுரிமைச் சொத்தினைப் பெற்றிட மகள்களுக்குச் சம உரிமையை வழங்கும் இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 என்ற சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அப்பொழுதிலிருந்தேப் பொருந்தக் கூடியதாக இருக்கும் என்று தெளிவுபடுத்தியுள்ளது.

## பழங்குடியின விடுதலைப் போராட்ட வீரர்களின் அருங்காட்சியகங்கள்

- பழங்குடியின விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள அனைத்து 9 அருங்காட்சியகங்களும் 2022 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும் என்று மத்தியப் பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகம் கூறியுள்ளது.
- புதிய அருங்காட்சியகங்களுக்கு வரும் காலத்தில் மாநிலங்களுடன் இணைந்து நிதி ஒதுக்கப்படும்.
- இந்த அருங்காட்சியகங்களில் மிகப்பெரியது குஜராத்தில் உள்ள ராஜ்பிப்லாவில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.


TRIBUTE TO TRIBAL HISTORY

THE MUSEUM: Ramesh Chand Meena, secretary, tribal development department said, "The museum will be equipped with latest technologies for solar energy harnessing, Rain water harvesting, green building, smart parking etc. The museum will also include a cultural centre, souvenir centre, tribal food court, open-air amphitheatre and other facilities." Sources said the museum will also have an eco village, tribal huts of different states (25 of Gujarat and 25 of other states), 3D and 7D technology, augmented reality etc

MAIN GALLERIES: The main galleries will display the Munda Revolts, Ho Uprising Revolts, Santhal Revolts, Muriya Revolts, Ekki Revolts, Mangardh Revolts, Dang Revolts, Nayaka Revolts, Rampa Revolts, Andamanese Revolts, Kurchiya Revolts, Khasi Revolts, Heraka Revolts, Kuki Revolts, Revolt of Bhil, Warli Revolt

## கட்டிடக் கலைக் கல்வி ஒழுங்குமுறைகளின் அடிப்படைத் தரம், 2020

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் “கட்டிடக் கலை கல்வி ஒழுங்குமுறைகளின் அடிப்படைத் தரம், 2020” என்ற ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இதற்கு முந்தைய ஒழுங்குமுறைகள் 1983 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.
- இந்த ஒழுங்குமுறைகள் கட்டிடக் கலை ஆணையத்தின் வல்லுநர்களால் தயாரிக்கப் பட்டுள்ளன.
- இது கட்டிடக் கலைஞர்கள் சட்டம், 1972 என்ற சட்டத்தின் விதிகளின் கீழ் அரசினால் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகும்.

## புதிய இரயில்வே அருங்காட்சியகம்

- மத்திய இரயில்வே அமைச்சகமானது கர்நாடகாவின் ஹுப்ளியில் இரயில்வேயிற்கான ஒரு பிரத்தியேக அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்து உள்ளது.
- இது இரயில்வேயின் பல்வேறு பிரிவுகளின் சிறப்புமிக்க பாரம்பரியத்தைப் பாதுகாப்பதையும் சித்தரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இரயில்வேயின் அனைத்துப் பிரிவுகளிலும் மேம்படுத்தப்பட்ட அமைப்புகளின் படிப்படியான பரிணாம வளர்ச்சியைக் காட்சிப் படுத்துகின்றது.
- வட கர்நாடகாவில் அமைந்துள்ள இதே வகையைச் சேர்ந்த முதலாவது அருங்காட்சியகம் இதுவாகும். கர்நாடகாவின் மைசூரில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இரயில்வே அருங்காட்சியகத்திற்குப் பிறகு தென்மேற்கு இரயில்வே மண்டலத்தில் அமைந்த 2வது அருங்காட்சியகம் இதுவாகும்.

## ஆத்ம நிர்பர் வாரக் கொண்டாட்டம் – ஆகஸ்ட் 7 முதல் 14 வரை

- இந்தியாவின் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் உள்நாட்டு உற்பத்தி மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் என்பதிற்கு மாறும் அரசின் தொலைநோக்குப் பார்வையின் மீது கவனம் செலுத்துவதற்காக "ஆத்மநிர்பர் பாரத் சப்தாஹ்" (ஆத்ம நிர்பர் வாரக் கொண்டாட்டம்) என்ற ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இதன் பின்னணியில் இருக்கும் முக்கிய நோக்கம் நாட்டில் உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியின் மீதான முக்கியத்துவதை வலுப்பெறச் செய்வதாகும்.




## இந்தியாவின் முதலாவது மின்னணு – லோக் அதாலத்

- கோவிட் - 19 நோய்த் தொற்றிற்கு மத்தியில் இந்தியாவின் முதலாவது மின்னணு – லோக் அதாலத்தை சத்தீஸ்கர் மாநிலம் நடத்தி உள்ளது.
- இ-லோக் அதாலத் ஆனது அம்மாநில உயர்நீதிமன்றம் மற்றும் அம்மாநில சட்ட சேவைகள் ஆணையம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப் பட்டுள்ளது.




## பருத்தி ஆலோசனை வாரியம்

- மத்திய ஜவுளித் துறை அமைச்சகமானது அதன் ஆலோசனை அமைப்பான பருத்தி ஆலோசனை வாரியத்தை (CAB - Cotton Advisory Board) கலைத்துள்ளது.
- மேலும் அனைத்து 8 ஜவுளி ஆராய்ச்சிக் கழகங்களும் (TRAs - Textiles Research Associations) இந்த அமைச்சகத்தின் கீழிருந்து கலைக்கப் படுவதாகவும் அறிவித்து உள்ளது.
- இனிமேல், TRAsகள் ஜவுளித் துறை தொடர்பான ஆராய்ச்சி, பரிசோதனை மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட அமைப்புகளாகச் செயல்படும்,.
- மத்திய அரசின் நிதியினால் உருவாக்கப்பட்ட எந்தவொரு சொத்துகளின் அகற்றம்/ விற்பனை/பரிமாற்றம் ஆகியவற்றிற்கு இந்த அமைச்சகத்தின் முன்கூட்டியே குறிப்பிட்ட ஒப்புதலானது தேவைப்படும்.

## இந்தியா @ 75வது மாநாடு – திட்டம் 2022

- ❖ இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்பானது "இந்தியா @ 75வது மாநாடு - திட்டம் 2022" என்ற ஒரு மாநாட்டை நடத்தியது.
- ❖ இது "இந்தியாவில் தொழில்நுட்பத்தை மீண்டும் புதிதாக உருவாக்கல்" என்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.

## இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பை நிறுவிய நாள்

- ❖ இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பின் 33வது நிறுவிய நாளானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது.
- ❖ இது பழங்குடியினரால் உற்பத்தி செய்யப்படும் சிறு வன உற்பத்திப் பொருள் மற்றும் உபரி வேளாண் உற்பத்தி ஆகியவற்றின் வர்த்தகத்தை நிறுவனமயமாக்குவதன் மூலம் நாட்டில் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலைமையில் வளர்ச்சியைக் கொண்டு வர ஏற்படுத்தப்பட்ட ஒரு தேசிய அளவிலான கூட்டுறவு அமைப்பாகும்.
- ❖ இது 1987 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ❖ இது பழங்குடி விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

## ராம மந்திர் கட்டுமானத்திற்கான அடித்தளம்

- ❖ 5 ஆகஸ்ட் 2020 அன்று ஒரு மிகப்பெரிய விழாவாக இக்கோயில் கட்டுமானம் அதிகாரப் பூர்வமாக மீண்டும் தொடங்கியது.
- ❖ அயோத்தியில் கட்டப்படும் ராமர் கோயிலுக்கு மோடி அவர்கள் அடித்தளம் அமைத்தார்.
- ❖ அயோத்தியாவில் ராம ஜன்ம பூமியைப் பார்வையிட்ட முதல் பிரதமர் இவரே ஆவார்.
- ❖ அனுமான் சன்னதியான ஹனுமான் கர்ஹியைப் பார்வையிட்ட முதல் பிரதமரும் இவரே ஆவார்.
- ❖ அயோத்தியில் உள்ள ராம ஜன்ம பூமியில் அமைக்கப்படவுள்ள இந்த பிரம்மாண்டமான கோயிலானது நகரா பாணியிலான கோயில் கட்டிடக் கலையினைப் பின்பற்றும்.
- ❖ நகரா பாணி கோயில் கட்டிடக் கலையானது வட இந்தியாவில் காணப்படுகிறது.



Nagar style of architecture
Dravida style of architecture

## காட்ரா – தில்லி விரைவுச் சாலை பெருவழிப் பாதை

- தன்னாளவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவதான காட்ரா (ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம்) – தில்லி விரைவுச் சாலை பெருவழிப்பாதை பணியானது 2023 ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்த விரைவுப் பெருவழிப் பாதையானது காட்ரா மற்றும் தில்லி ஆகியவற்றிற்கிடையேயான பயண நேரத்தை ஆறரை மணி நேரமாகக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்த விரைவுப் பெருவழிப் பாதையானது இந்திய அரசினால் நிதியளிக்கப்படும் மற்றும் ஆதரவளிக்கப்படும் சாலை மற்றும் நெடுஞ்சாலைகள் திட்டமான "பாரத்மாலா பரியோஜனா" என்பதின் கீழ் கட்டப்பட்டு வருகின்றது.
- காட்ரா என்பது ஸ்ரீ மாதா வைஷ்ணவி தேவி என்ற ஒரு புனிதத் தளம் அமைந்துள்ள ஜம்மு காஷ்மீரில் இருக்கும் ஒரு நகரமாகும்.
- இந்தச் சாலைப் பெருவழிப் பாதையானது பஞ்சாபில் உள்ள அமிர்தசரஸ் மற்றும் ஜம்மு காஷ்மீரில் உள்ள காட்ரா வைஷ்ணவி தேவி ஆகிய புனிதத் தளங்களை இணைக்கவுள்ளது.

## தூய்மை இந்தியா இயக்க நிறுவனம்

- மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் தூய்மை இந்தியா இயக்க நிறுவனத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது திறந்தவெளிக் கழிப்பிடமற்ற பிளஸ் என்ற திட்டத்தின் (Open Defecation Free Plus programme) மீதான தொகுதிகளுடன் ஊடாடும் குரல்வழி பதிலெதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட இலவச கைபேசிசார் நிகழ்நேர பயிற்சிப் பாடப் பிரிவு ஆகும்.
- இது தற்பொழுது நடைபெற்று வரும் 1 வார கால நடத்தை மாற்றப் பிரச்சாரமான "கண்டகி முக்த் பாரத்" என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகத் தொடங்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பத் துறையின் புதிய தளம்

- "வெளிப்படையான வரிவிதிப்பு - நேர்மையானவருக்கு மதிப்பளித்தல்" என்பதற்கான ஒரு தளத்தைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்.
- இது நேரடி வரிச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக முகமற்ற மதிப்பீடு (faceless assessment), முறையீடு மற்றும் வரி செலுத்துவோரின் சாசனத்தை வழங்குகிறது.
- இந்தத் தளமானது வரி இணக்கத்தை எளிதாக்குவதும், பணத்தைத் திரும்பப் பெறுவதை விரைவாக்குவதையும், நேர்மையாக வரி செலுத்துவோருக்கு பயனளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வேளாண் நிறுவனங்களுக்கான இணையவழி அங்கீகார முறை

- மத்திய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் அவர்கள் இணையத்தின் மூலம்,
    - கிருஷி மேக் உடன் KVC ALUNET (Krishi Vishwavidyalaya Chhatr Alumni Network)
    - டிஜிட்டல் இந்தியாவின் முன்முயற்சியின் அடிப்படையில் உயர் வேளாண் கல்வி நிறுவனங்களுக்கான இணையவழி அங்கீகார முறை

  ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.

- தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி அமைப்பு – மேகக் கணினி உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் என்று அழைக்கப்படும் கிருஷி மேக் ஆனது அரசாங்கத்தின் முதன்மை ஆராய்ச்சி அமைப்பான இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுவின் தரவைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 74 வேளாண் பல்கலைக்கழகங்களின் பழைய மாணவர்களிடையே தகவல் அல்லது சமூக வலைப் பின்னலைப் பகிர்ந்து கொள்வதற்கான ஓர் ஊடகமாக "கே.வி.சி முன்னாள் மாணவர் வலையமைப்பு" (KVC ALUNET) செயல்படுகிறது.

## ஆத்ம நிர்பர் செயலி புத்தாக்கப் போட்டி - வெற்றியாளர்கள்

- ஆத்ம நிர்பர் செயலி புத்தாக்கப் போட்டியில் எட்டுப் பிரிவுகளில் 24 வெற்றியாளர்களை மத்திய அரசானது அறிவித்துள்ளது.

| Category | App Name |
|---|---|
| Entertainment | CaptionPlus, Meme Chat, FTC Talent. |
| News | Logically, IsEuqalTo. |
| Games | Bitwicket Superstars – 3D Cricket Strategy Game, ScarFall – The Royal Combat, World Cricket Championship-2 |
| Business | Zoho Invoice, Books & Expense, Mall91, GimBooks. |
| Office | Zoho Workplace & Cliq, SureMDM. |
| Health | StepSetGo, iMumz. |
| eLearning | Disprz, Kutiki Kids Learning App , Hello English. |
| Social | Chingari, YourQuote, Koo |
| Others | MapmyIndia Move – Maps, Navigation & Tracking, AskSarkar, Myitreturn. |

## தடுப்பூசி நிர்வாகம் குறித்த தேசிய நிபுணர் குழு

- டாக்டர் வி.கே. பால் அவர்களின் தலைமையில் "தடுப்பூசி நிர்வாகம் குறித்த தேசிய நிபுணர் குழு" என்ற ஒரு நிபுணர் குழுவை மத்திய அரசானது உருவாக்கி உள்ளது.
- இந்தக் குழுவானது அனைத்து மாநில அரசுகள் மற்றும் தடுப்பூசி உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடலில் கோவிட்-19 தடுப்பூசி குறித்த திட்டத்தைச் செயல்படுத்தல், கொள்முதல் மீதான நெறிமுறை அம்சங்கள் மற்றும் அதன் நிர்வாகம் ஆகியவை குறித்து பரிசீலிக்கும்.

## தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டம்

- ❖ பிரதமர் மோடி அவர்கள் 74வது சுதந்திர தினத்தன்று நிகழ்த்திய தனது உரையின் போது தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு இந்தியரும் ஒரு சுகாதார அடையாள அட்டையினைப் பெற உள்ளனர்.
- ❖ இந்த அடையாள அட்டையானது அந்த நபரின் முந்தைய மருத்துவ நிலைமை, சிகிச்சை, நோய் கண்டறிதல் உள்ளிட்ட அனைத்து விதமான தகவல்களையும் கொண்டிருக்கும்.
- ❖ இந்தத் திட்டமானது முழுவதும் தொழில்நுட்ப அடிப்படையிலானதாகும்.
- ❖ இந்தத் திட்டமானது இந்தியாவில் சுகாதார நலத்தின் செயல்திறன், செயலாக்கம் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ இது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா அல்லது ஆயுஷ்மான் பாரத் என்பதின் கீழ் செயல்படவுள்ளது.




## நீண்ட காலமாகப் பணியாற்றும் காங்கிரஸ் கட்சி அல்லாத பிரதமர்

- ❖ நாட்டில் நீண்ட காலமாக பிரதமராகப் பணியாற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேராத ஒரு ஆளுமை நரேந்திர மோடி ஆவார் (2014 ஆம் ஆண்டு மே 26 ஆம் தேதியிலிருந்து ஆகஸ்டு 13 ஆம் தேதி வரை).
- ❖ மேலும் இவர் 18 ஆண்டுகளாக ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் தலைவராக உள்ளார். அரசாங்கத்தின் தலைவரால் வகித்து வரும் ஒரு நீண்ட பதவிக் காலம் இதுவாகும்.
- ❖ இது 2014 ஆம் ஆண்டில் இந்தியாவின் பிரதமராகப் பதவி ஏற்பதற்கு முன்பு குஜராத்தின் முதல்வராகப் பதவி வகித்ததையும் (2001 ஆம் ஆண்டு அக்டோபர் 7 முதல் 2014 ஆம் ஆண்டு மே 22 வரை) உள்ளடக்கியுள்ளது.
- ❖ இவர் முதலமைச்சராகவும் இந்தியாவின் பிரமராகவும் 18 ஆண்டுகள் 306 நாட்களை நிறைவு செய்துள்ளார்.
- ❖ இதற்கு முன்பு, இந்தியாவின் முதலாவது பிரதமரான நேரு இந்தியாவின் பிரதமராக 16 ஆண்டுகள் 286 நாட்கள் இருந்தார்.

- நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் தலைவராக மூன்றாவது மிக நீண்ட பதவிக் காலத்தைக் கொண்டவர் இந்திரா காந்தி ஆவார். இவர் 15 ஆண்டுகள் 350 நாட்கள் இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றினார்.
- காங்கிரசைச் சார்ந்த ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி மற்றும் மன்மோகன் சிங் ஆகியோர் இந்த வரிசையில் நீண்ட காலம் பிரதமர் பதவி வகித்த மூன்று நபர்கள் ஆவார்.




## அம்ருத் திட்டத் தரவரிசை

- ஒடிசா மாநிலமானது புத்தெழுச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் திட்டத்தின் செயல்படுத்துதலில் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது.
- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட இந்த தரவரிசையின்படி, ஒடிசா மாநிலமானது தனது முதலிடத்தை மீண்டும் பிடித்துள்ளது. இதற்குப் பிறகு சண்டிகர் ஒன்றியப் பிரதேசமும் தெலுங்கானா மாநிலமும் இடம் பிடித்துள்ளன.

### *அம்ருத் (AMRUT) திட்டம்*

- அம்ருத் திட்டமானது 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இது நகர்ப்புற மீட்டெடுப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதலின் மூலம் நகர்ப்புற மாற்றத்திற்கான வலுவான கழிவுநீர் அமைப்புகள் மற்றும் நீர் விநியோகத்தை உறுதி செய்துள்ளது.

## கடல்சார் ரோந்துக் கப்பல் - சர்தாக்

- இந்தியக் கடலோரக் காவல் படைக்காக வேண்டி கடல்சார் ரோந்துக் கப்பலானது வெளியிடப்பட்டு, "சர்தாக்" என்ற இந்தியக் கடலோரக் காவல் படைக் கப்பலாக (ICGS - Indian Coast Guard Ship) அது மீண்டும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- 5 OPV-களைக் கொண்ட தொடரில் 4வதாக "சர்தாக்" ஆனது ICGயினால் பணியில் சேர்க்கப் பட்டுள்ளது.
- இது "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற திட்டத்தின் வரிசையில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, கட்டமைக்கப் பட்டதாகும். இதில் 70% உபகரணங்கள் உள்நாட்டைச் சார்ந்தவையாகும்.

## 15 பாதுகாப்புப் பொருட்கள் தொடங்கி வைப்பு

- ஆத்ம நிர்பர் வாரக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் பாதுகாப்புத் துறை, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஆயுதத் தொழிற்சாலை வாரியம் ஆகியவற்றின் 15 உற்பத்திப் பொருட்களை வெளியிட்டு உள்ளார்.
- நாக் ஏவுகணையை எடுத்துச் செல்லும் வாகனம் (Nag Missile Carrier) : ஏறத்தாழ ரூ.260 கோடி மதிப்புள்ள இறக்குமதி செய்யப்படும் பொருளுக்கு மாற்றாக இது செயல்பட இருக்கின்றது.
- 14.5 மி.மீ அளவு கொண்ட பொருள் எதிர்ப்பு ரைபிள் (14.5 mm Anti Material Rifle) : இது திருச்சிராப்பள்ளியில் உள்ள ஆயுதத் தொழிற்சாலையால் தயாரிக்கப்பட்ட முழுவதும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஒரு ரைபிள் ஆகும்.
- வெப்பப் பிம்ப மற்றும் பகல் நேரப் பார்வை கொண்ட டி90 முக்கியப் போர் பீரங்கிகள் (Thermal Imager Cum Day Sight for T90 Main Battle Tank) : இது மேற்கு வங்கத்தின் இஷாபூரில் உள்ள ரைபிள் தொழிற்சாலையினால் தயாரிக்கப்பட்ட ஒரு மேம்படுத்தப்பட்ட பதிப்பாகும்.
- 8.6 x 70 மி.மீ. துப்பாக்கியின் முன்மாதிரி (Prototype of 8.6×70 mm Sniper) : இது தொலைதூர இலக்குகளைக் குறி வைத்துத் தாக்குவதற்காக இஷாபூரில் உள்ள ரைபிள் தொழிற்சாலையினால் வடிவமைக்கப்பட்டதாகும்.
- 150 டன் எடை கொண்ட பாரா வண்டி வாகனம் (150 Ton payload capacity Dump Truck) : இது மிகப்பெரிய மின் சுரங்கச் சரக்கு வண்டிகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- 180 டன் எடை கொண்ட மிகப்பெரிய சுரங்க அகழ் எந்திரம் (Super Giant Mining Excavator of 180 Ton Capacity) : இதன் மூலம் அந்நியச் செலாவணி ரூ.220 கோடி மிச்சமாகும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- GAUR : இது 85% உள்நாட்டுப் பொருட்களுடனும் உயர்பாதுகாப்பு நிலையின் வழக்கமான அம்சங்களுடனும் உயர் இயக்க அடிப்பீடத்தின் மீது கட்டப்பட்ட ஒரு நடுத்தர குண்டு துளைக்காத வாகனமாகும்.
- ஹெலிபோர்ட்டபிள் 100 எச்பி டோசர் (Heliportable 100 HP Dozer) : இது அதிக அளவிலான 94% உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டுள்ளது.
- 150வது DO – 228 விமானம் (150th Do-228 aircraft) : ஐஎன்-259 என்று அழைக்கப்படும் இது கடல்சார் உளவு மற்றும் போர்ப் பணியில் பணியாற்றும் இந்தியக் கடற்படைக்கான ஒரு பிரத்தியேகத் தளமாகும்.
- 1 கிலோ வாட் மாற்றிக் கொடுக்கும் வான்வழி மாற்ற உலோகச் சட்டம் (1kW Transmitter Aerial Switching Rack) : இது போலியற்ற உள்நாட்டுப் பொருட்களைக் கொண்ட இந்தியக் கடற்படைக்காக ஒரு நீண்ட கால உதவி அளிப்பதாகும்.

- நேரியல் மாறுபடுகிற தனிப்பட்ட ஆற்றல் மாற்றி (Linear Variable Differential Transducer) : இது இலக்கை அடைவதில் மற்றும் வழிகாட்டுவதில் துல்லியத் தன்மை மற்றும் விரைவுத் தன்மையை அடைவதற்குப் பயன்படுத்தப் படுகின்றது.
- கொன்கூர்ஸ் ஏவிகணைச் சோதனை உபகரணம் மற்றும் கொன்கூர்ஸ் ஏவுகணை ஏவு அமைப்புச் சோதனை உபகரணங்கள் (Konkurs Missile Test Equipment & Konkurs Launchers Test Equipment): இது இதற்கு முன்பு இரஷ்யாவிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அமைப்பிற்கு மாற்றாக மேம்படுத்தப்பட்டுள்ளது.
- சிறிய ரக பாதசாரி (தாக்குதல்) பாலம் (Portable Pedestrian (Assault) Bridge) : இது இந்திய இராணுவத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இதே வகையைச் சேர்ந்த அளவில் முதலாவது வகையாக கார்பன் இழை பாலிமர் கலப்புப் பொருட்களினால் உருவாக்கப் பட்டதாகும்.
- பல்லிணைப் பெட்டி (கியர் பாக்ஸ்) : இது ICGயின் OPV திட்டத்திற்காக மேம்படுத்தப் பட்டுள்ளது.
- நீருக்கடியில் தொலைதூரத்திலிருந்து செயல்படுத்தப்படும் வாகனம் (Underwater Remote Operated Vehicle) : இது சென்னையில் தனது வெளிப்புற மதிப்பீட்டுச் சோதனையைத் தொடங்கியுள்ளது.

## சுவஸ்தியா தளம் மற்றும் மின்னணு செய்தி மடல்

- மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகமானது "சுவஸ்தியா" என்ற பழங்குடியின சுகாதார மற்றும் ஊட்டச்சத்துத் தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இதே வகையைச் சேர்ந்த முதலாவது தளம் இதுவாகும்.
- இது இந்தியாவில் உள்ள பழங்குடியினரின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவை தொடர்பான தகவல்களை அளிக்கின்றது.
- மேலும், இந்த அமைச்சகமானது சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துத் தொடர்பான "அலேக்" என்ற ஒரு மின்னணு-செய்தி மடலையும் தொடங்கியுள்ளது.
- இது காலாண்டு அடிப்படையில் வெளியிடப்பட உள்ளது. மேலும் இது பழங்குடியினரின் சுகாதாரம் மற்றும் அவர்களின் ஊட்டச்சத்தில் பங்கு கொள்ளும் பல்வேறு பங்குதார்களின் பணிகளை எடுத்துக் காட்டுகின்றது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, இந்தியாவில் உள்ள பழங்குடியினரின் எண்ணிக்கை 104 மில்லியன் ஆகும்.

## எல்லைப் பகுதிகளில் NCC ஈடுபடுத்தப்படல்

- தேசிய மாணவர் படையானது (NCC - National Cadet Corps) 173 எல்லைப் பகுதிகள் மற்றும் கடலோர மாவட்டங்களில் ஈடுபடுத்தப்பட உள்ளது.
- NCC ஈடுபடுத்தப்படுவதன் மூலம் எல்லைப் பகுதியானது பேரிடர் மேலாண்மைக்காக வேண்டி பயிற்சி பெற்ற மனித சக்தியைப் பெற இருக்கின்றது.
- மேலும், அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் ஆயுதப் படையில் தங்களது வாழ்நாழ் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக திறன் பயிற்சிகளைப் பெற உள்ளனர்.
- மேலும் NCC படையினர் போரிலும் ஈடுபடுவர்.
- 1971 ஆம் ஆண்டில் வங்கதேச-பாகிஸ்தான் போரின் போதும் 1965 ஆம் ஆண்டில் இந்தியா-பாகிஸ்தான் போரின் போதும் இவர்கள் அதில் ஈடுபட்டனர்.

- 74வது சுதந்திர தினக் கொண்டாட்ட உரையின் போது பிரதமர் அவர்கள் எல்லைப் பகுதிகளைச் சேர்ந்த 1 இலட்சம் NCC வீரர்கள் அப்பகுதியில் உள்ள இளைஞர்களுடன் இணைந்து பணியாற்றுவர் என்று அறிவித்து இருந்தார்.

## அடல் சுரங்கப் பாதை

- இமாச்சலப் பிரதேச மாநில முதல்வரான ஜெய் ராம் தாக்கூர் அவர்கள் "அடல் சுரங்கப் பாதையானது" 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் திறக்கப் படும் என்று அறிவித்துள்ளார்.
- இந்த சுரங்கப் பாதையானது லேஹ்-மணாலி நெடுஞ்சாலையில் இருக்கும் பீர்பாஞ்சல் மலை வரம்பில் உள்ள ரோஹ்டாங் கணவாயின் கீழ் கட்டப்பட்டு வருகின்றது.
- இது கடல் மட்டத்திலிருந்து 3100 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- இந்த சுரங்கப் பாதையின் நீளம் 8.8 கிலோ மீட்டராகும்.
- இந்த வழித்தடமானது சியாச்சின் பனிப் பாறை மற்றும் அக்சய் சின் ஆகியவற்றில் அமைந்துள்ள துணை இராணுவப் படைப் பிரிவுகளுக்கு இராணுவத் தளவாடங்களை எடுத்துச் செல்வதற்கான ஒரு முக்கியமான பாதையாக விளங்குகின்றது.
- இந்த சுரங்கப் பாதைக்கான பரிந்துரையானது 1860 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இது முதன்முறையாக மொராவியன் திட்டத்தினால் பரிந்துரைக்கப் பட்டது.



## வெள்ள முன்னறிவிப்பு முன்னெடுப்பு

- மத்திய நீர் ஆணையமானது கூகுள் நிறுவனத்துடன் இணைந்து வெள்ள முன்னறிவிப்பு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் கீழ், ஒரு பகுதியில் வெள்ள நிலைமை குறித்த பல்வேறு விதமான எச்சரிக்கைகளைப் பொது மக்களுக்கு அளிக்க முடியும்.
- கூகுள் நிறுவனமானது வெள்ள அபாயப் பகுதிகளைக் குறிக்கும் வண்ணக் குறியிடப் பட்ட வரைபடங்களை வழங்குகின்றது.
- இந்த வரைபடத்தைப் பெரிதாக்கும் போது அந்தப் பகுதியில் தற்பொழுது உள்ள நீர் நிலைமைகள் குறித்த தகவல்களை அது அளிக்கும் திறன் கொண்டது.
- இந்த முன்னெடுப்பைப் பெறுவதற்காக, பயனாளர்கள் கூகுள் வரைபடங்களில் வெள்ளம் என்பதைக் குறிப்பிட்டு, அதன்பின் பாதிக்கப்பட்ட பகுதியின் பெயரைக் குறிப்பிட்டுத் தேட வேண்டும்.

## ATL AI Step up தொகுதி

- நிதி ஆயோக், அடல் புத்தாக்கத் திட்டம் ஆகியவை நாஸ்காம் நிறுவனத்துடன் இணைந்து சுதந்திர தினத்தன்று "ATL AI Step up தொகுதியை" தொடங்கியுள்ளது.
- இந்தத் தொகுதியானது இந்தியா முழுவதும் உள்ள பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவுக் கல்வி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல இருக்கின்றது.
- AI ஸ்டெப் அப் தொகுதியானது செயற்கை நுண்ணறிவின் அடிப்படையைக் கற்ற பிறகு தங்களுடைய அறிவுத் தளத்தை விரிவுபடுத்த விரும்புபவர்களுக்கு "நீங்களாகவே அதைக் கற்றுக் கொள்ளுங்கள்" என்ற ஒரு தொகுதியை அளிக்கின்றது.
- மேலும், இந்தத் தொகுதியைக் கற்பதற்கு எந்தவொரு தகுதி நிலையும் (பின் புலமும்) தேவையில்லை.

## இயற்கை விவசாயத் தரவரிசை

- சமீபத்தில் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகமானது இயற்கை விவசாயத்தில் இந்தியா உலக அளவில் முதலிடத்தில் உள்ளதாக அறிவித்துள்ளது.
- மேலும், இயற்கை வேளாண்மையில் நிலப்பரப்பின் அடிப்படையில் இந்தியா 9வது இடத்தில் உள்ளது.
- முழுவதும் இயற்கை முறையில் வேளாண்மையைப் பெற்ற உலகின் முதலாவது மாநிலம் சிக்கிம் ஆகும்.
- இந்தியாவானது இயற்கை விவசாயத்தை ஏற்றுக் கொள்வதற்கு விவசாயிகளுக்கு உதவுவதற்காக பின்வரும் 2 திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
    - வடகிழக்குப் பகுதிக்கான இயற்கை மதிப்புக் கூட்டுச் சங்கிலி மேம்பாட்டுத் திட்டம்
    - பரம்பரகத் கிரிஷி விகாஸ் யோஜனா

## "SRIJAN" ஆன்லைன் தளம்

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் அவர்கள் உள்நாட்டுப் பாதுகாப்புப் பொருட்களின் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்காக "SRIJAN" என்ற ஒரு நிகழ்நேர இணையத் தளத்தைத் தொடங்கியுள்ளார்.
- இந்தத் தளமானது இந்தியப் பாதுகாப்புத் துறை தொழிற்சாலையினால் தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் பொருட்களைக் காண்பிக்க இருக்கின்றது.
- பாதுகாப்புசார் பொதுத் துறை அலகுகள் மற்றும் ஆயுதத் தொழிற்சாலை வாரியம் ஆகியவை இறக்குமதி செய்யப்படும் பொருட்களை இந்தத் தளத்தில் காண்பிக்கும்.

## தேசியப் பொதுக் கொள்முதல் மாநாடு

- மத்திய வணிக மற்றும் தொழிற்துறை அமைச்சரான பியுஷ் கோயல் அவர்கள் 'தேசியப் பொதுக் கொள்முதல் மாநாடு 2020 : டிஜிட்டல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு' என்ற ஒரு கருத்தரங்கின் 4வது பதிப்பைக் காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.
- இந்தப் பதிப்பின் கருத்துரு, "திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் அனைத்தையும் உள்ளடக்குதலை நோக்கிய – தொழில்நுட்பத்தால் செயல்படுத்தப்படும் அரசுக்

கொள்முதல்" என்பதாகும்.

- இது ஹைவ்ஸ் என்ற ஒரு டிஜிட்டல் தளத்தின் மூலம் இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்புடன் (Confederation of Indian Industry) இணைந்து அரசு மின்னணுச் சந்தையினால் நடத்தப் பட்டது.

## பிரஞ்சு - புதிய பாடப்பிரிவு

- மக்களவையானது அதன் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்காக பிரஞ்சு மொழியில் ஆரம்ப நிலையிலான ஒரு புதிய பாடப்பிரிவைத் தொடங்கியுள்ளது.
- இது ஒன்றிணைக்கப்பட்ட உலகில் பிரஞ்சு மொழியின் அறிவைப் பெறும் முக்கியத்துவத்தைக் கருதி தொடங்கப்பட்டுள்ளது.
- இது மக்களாட்சிக்கான நாடாளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தினால் (PRIDE - Parliamentary Research and Training Institute for Democracy) செயல்படுத்தப்பட உள்ளது.
- PRIDE என்பது நாடாளுமன்ற நிறுவனங்களின் பல்வேறு பிரிவுகளில் உள்ள நாடாளுமன்றப் பணியாளர்கள், நாடாளுமன்றவாதிகள் மற்றும் பல்வேறு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 1976 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டு உள்ளது.

## இலட்சிய மாவட்டங்களில் ஆரக்கிள் கிளவுட் என்பதின் பங்களிப்பு

- நிதி ஆயோக்கானது தனது இலட்சிய மாவட்டங்கள் திட்டத்தின் கீழ் மிகவும் பின்தங்கிய 112 மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை நவீனப்படுத்துவதற்காக வேண்டி ஆரக்கிள் நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த 112 மாவட்டங்கள் 28% இந்திய மக்கள் தொகையைக் கொண்டுள்ளன.
- ஆரக்கிள் நிறுவனமானது புதிய கிளவுட் தீர்வை வழங்க இருக்கின்றது. இது இந்த இலட்சிய மாவட்டங்களில் வாழும் மக்களின் வாழ்வை மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு உதவ இருக்கின்றது. இது அதன் ஒட்டுமொத்தச் செயல்பாட்டையும் மேம்படுத்த உள்ளது.
- இலட்சிய மாவட்டங்கள் திட்டமானது நிதி ஆயோக்கினால் செயல்படுத்தப் படுகின்றது.
- இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் இலட்சிய மாவட்டங்களின் நிகழ்நேரச் செயல்பாடுகளைக் கண்காணிப்பதாகும். இது முக்கியமான 5 கருத்துரு பகுதிகளிலிருந்து 49 குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

## பிரதமரின் 74வது சுதந்திர தின உரை

- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று, இந்தியப் பிரதமர் புது தில்லியில் உள்ள செங்கோட்டையிலிருந்து 74வது சுதந்திர தினத்தின் போது புதிய திட்டங்களை அறிவித்தார்.
- இது அவரது தொடர்ச்சியான 7வது சுதந்திர தின உரையாகும். இவரது உரையானது ஆத்ம நிர்பர் பாரத் (தற்சார்பு இந்தியா), உள்ளூர் மக்களுக்கான குரல் மற்றும் உலகிற்கு தயாரிப்பதற்காக வேண்டி இந்தியாவில் தயாரிப்போம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியது.

## *அறிவிப்புகள்*

- தனிநபர்களின் மருத்துவப் பதிவுகளைப் பதிவு செய்யும் வகையில் ஒவ்வொரு இந்தியரும் சுகாதார அடையாள அட்டையைப் பெறுவதற்கான தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டத்தைத் தொடங்குதல்.
- லட்சத் தீவுகள் மற்றும் இந்திய நிலப்பகுதியை இணைக்கக் கூடிய ஒளியிழை இணைப்பு.
- மேலும் இவர் புலிகள் பாதுகாப்புத் திட்டம் மற்றும் யானைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற வரிசையில் "ஓங்கில் பாதுகாப்புத் திட்டத்தை" அறிவித்தார்.
- மத்திய அரசானது பெண்களின் திருமணத்திற்கான குறைந்த பட்ச வயதை மறு ஆய்வு செய்வதற்காக குழு ஒன்றை அமைத்தார்.
- லடாக், லேஹ் மற்றும் கார்கில் பகுதி ஆகியவை மேம்படுத்தப்பட்டு, கரிம சமநிலைப் பகுதியாக அவை அறிவிக்கப்படும்.

## இ பாத்ஷாலா - ஒரு வலைதளம்

- அகில இந்திய கால்பந்துக் கழகமும், இந்திய விளையாட்டு ஆணையமும் இணைந்து இ-பாத்ஷாலா என்ற ஒரு தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளன.
- இது குழந்தைகளின் படைப்பாற்றலை அங்கீகரிப்பதற்கும் மற்றும் கால்பந்தில் அவர்களின் ஆர்வத்தை வளர்ப்பதற்கும் உதவும் ஒரு வலை தளமாகும்.
- இந்தத் தளமானது ஓவியம், திறன்கள், கட்டுமானத் தொகுதிகள் போன்ற அறிவாற்றல் அணுகுமுறைகள் மூலம் குழந்தைகளின் ஆர்வத்தை மேம்படுத்துகிறது.

## மக்கும் முகக் கவசம் மற்றும் உடல் கவச உறை

- புனேவைச் சேர்ந்த மேம்பட்ட தொழில்நுட்பத்திற்கான பாதுகாப்பு நிறுவனமானது ஆயுர்வேத அடிப்படையிலான மக்கும் நானோ இழைகளாலான "பவித்ரபதி" எனும் முகக் கவசத்தை உருவாக்கியுள்ளது.
- பவித்ரபதி பாக்டீரியா/வைரசைஸுக்கு எதிராக அவற்றை எதிர்க்க ஒரு வைரஸ் நடுநிலையாக்கியாகச் செயல்படுகிறது.
- மேலும் இது "அவுஷதா தாரா" என்ற பெயரில் ஒரு நுண்ணுயிர் எதிர்ப்பு உடல் கவச உறையையும் உருவாக்கியுள்ளது.

## கடற்படைப் புத்தாக்கம் மற்றும் சுதேச அமைப்பு

- கடற்படைப் புத்தாக்கம் மற்றும் சுதேச அமைப்பானது இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது ஆத்ம நிர்பர் பாரத் என்ற திட்டத்தின் பார்வைக்கு ஏற்ப பாதுகாப்பில் தன்னிறைவு பெறுவதற்கான புதுமை மற்றும் உள்நாட்டுமயமாக்கலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஒரு மூன்று அடுக்கு அமைப்பாகும்,
    - கடற்படைத் தொழில்நுட்ப முடுக்க மன்றம் (Naval Technology Acceleration Council)
    - கடற்படைத் தொழில்நுட்ப முடுக்க மன்றத்தின் கீழ் செயல்படும் குழுவானது திட்டங்களைச் செயல்படுத்தும்.

- தொழில்நுட்ப மேம்பாட்டு முடுக்கக் கூடமானது (Technology Development Acceleration Cell) ஒரு விரைவான காலக் கட்டத்தில் அதிகரித்து வரும் ஆபத்தான தொழில்நுட்பத்தை உய்த்தறிய உருவாக்கப்பட்டுள்ளது.

## விலைக் கண்காணிப்பு மற்றும் வள அலகு

- தேசிய மருந்துப் பொருள் விலை நிர்ணய ஆணையமானது (National Pharmaceutical Pricing Authority - NPPA) கர்நாடக மாநில மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையுடன் இணைந்து, அம்மாநிலத்தில் "விலைக் கண்காணிப்பு மற்றும் வள அலகை" (Price Monitoring and Resource Unit - PMRU) திறந்து வைத்துள்ளது.
- மாநிலத்தில் மருந்துகளின் விலையைக் கண்காணிக்கவும் இந்த மருந்துகளின் இருப்பை உறுதி செய்யவும் NPPAவிற்கு உதவுவதே PMRU அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.
- நாட்டில் மருத்துவ மருந்துகளின் விலையைக் கட்டுப்படுத்தும் NPPA ஆனது 1997 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு அரசு ஒழுங்குமுறை ஆணையமாகும்.
- PMRU அமைக்கப்பட்ட 12வது மாநிலம் கர்நாடகம் ஆகும்.
- ஏற்கனவே அமைக்கப் பட்டவை – கேரளா, ஒடிஷா, குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, நாகாலாந்து, திரிபுரா, உத்தரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மிசோரம்.

## கூகுள் பணிகள்

- கூகுள் நிறுவனமானது மெய்நிகர் கல்வித் தளத்தில் கற்பிக்கப்படும் கற்றலை எளிமையாக்குவதற்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக புதிய கல்விக் கூறுகளை அறிவித்துள்ளது.
- இந்த வசதியானது கூகுள் மீட், ஜி சூட் மற்றும் கூகுள் வகுப்பறை போன்ற கூகுளின் அனைத்துப் பொருட்களிலும் கிடைக்க இருக்கின்றது.
- இந்தப் புதிய கூறு கொண்டுள்ள சில வசதிகள் வரும் மாதங்களில் வெளியிடப்பட உள்ளது. மற்ற வசதிகள் அனைத்தும் இந்த ஆண்டின் இறுதியில் வெளியிடப்படும்.

## உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப் கூட்டு கண்காணிப்புத் திட்ட அறிக்கை

- இந்த அறிக்கையானது இந்தியாவானது நீரைக் கொண்டு கை கழுவும் நிலையை வெகுவாக அதிகரித்துள்ளதாகவும், ஆனால் சோப்புப் பற்றாக்குறையைக் கொண்டு உள்ளதாகவும் கூறுகின்றது.
- உலக அளவில், 462 மில்லியன் குழந்தைகள் 2019 ஆம் ஆண்டில் அவர்களுடைய பள்ளிகளில் சுகாதாரச் சேவை ஏதுமின்றி இருந்துள்ளனர்.
- துணை சஹாரா ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 244 மில்லியன் மக்கள், மத்திய மற்றும் தெற்கு ஆசியாவில் 125 மில்லியன் மக்கள் ஆகியோர் இதில் அடங்குவர். இதில் 92 மில்லியன் மக்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.




Source: Progress on drinking water, sanitation and hygiene in schools: Special focus on COVID-19. New York: United Nations Children's Fund (UNICEF) and World Health Organization, 2020.

## புத்தாக்கச் சாதனைகள் மீதான கல்வி நிறுவனங்கள் குறித்த அடல் தர வரிசை

❖ 2020 ஆம் ஆண்டின் புத்தாக்க சாதனைகள் மீதான கல்வி நிறுவனங்கள் குறித்த அடல் தரவரிசையானது (ARIIA - Atal Ranking of Institutions on Innovation Achievements) கல்வி நிறுவனங்களை 2 பெரும் பிரிவுகள் மற்றும் 6 துணைப் பிரிவுகளாக வகைப்படுத்தி உள்ளது.

❖ ARIIA-ன் நோக்கம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே புத்தாக்கம், தொழில்முனைவுத் திறன், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களைத் தரவரிசைப்படுத்துவதாகும்.

❖ ARIIA என்பது ஏஐசிடிஇ மற்றும் கல்வி அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவினால் செயல்படுத்தப்படும் மத்தியக் கல்வித் துறை அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.

| வகை | முதல் 2 வெற்றியாளர்கள் |
|---|---|
| **மத்திய அரசினால் நிதி அளிக்கப்படும் நிறுவனங்கள்** | 1) ஐஐடி – மதராஸ்<br>2) ஐஐடி – மும்பை<br>3) ஐஐடி – தில்லி |
| **மகளிர் (உயர் கல்வி நிறுவனங்கள் மட்டும்)** | 1) பெண்களுக்கான மனை அறிவியல் மற்றும் உயர்கல்விக்கான அவினாசிலிங்கம் கல்வி நிறுவனம்<br>2) பெண்களுக்கான இந்திரா காந்தி தில்லி தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் |
| **தனியார் கல்வி நிறுவனங்கள்** | 1) S.R. பொறியியல் கல்லூரி, தெலுங்கானா<br>2) G.H. ராய்சோனி பொறியியல் கல்லூரி, நாக்பூர்<br>3) ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, தமிழ்நாடு |

| | |
|---|---|
| **தனியார்/நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள்** | 1) கலிங்கா தொழில்துறைத் தொழில்நுட்ப மையம், ஒடிசா<br>2) எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம்<br>3) வேலூர் தொழில்நுட்ப மையம் |
| **மாநில அரசினால் நிதி அளிக்கப்படும் தன்னாட்சிக் கல்வி நிறுவனங்கள்** | 1) புனே பொறியியல் கல்லூரி, மகாராஷ்டிரா<br>2) பிஇஎஸ் பொறியியல் கல்லூரி, கர்நாடகா<br>3) கோயம்புத்தூர் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு |
| **மாநில அரசினால் நிதி அளிக்கப்படும் பல்கலைக் கழகங்கள்** | 1) இரசாயன தொழிலநுட்ப மையம், மகாராஷ்டிரா<br>2) பஞ்சாப் பல்கலைக்கழகம்<br>3) சௌத்திரி சரண் சிங் ஹரியானா வேளாண் பல்கலைக்கழகம் |

## தேசியத் தேர்வு முகமை

- மத்திய அமைச்சரவையானது மத்திய அரசில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு ஒரு பொது முதனிலைத் தேர்வை நடத்துவதற்காக தேசியத் தேர்வு முகமையை (NRA - National Recruitment Agency) அமைக்க முடிவு செய்துள்ளது.
- NRA ஆனது அரசு மற்றும் பொதுத் துறை வங்கிகளில் உள்ள அரசிதழில் பதிவு செய்யப் படாத பணிகளுக்கு வேண்டிய பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு பொதுத் தகுதித் தேர்வை (CET - Common Eligibility Test) நடத்த உள்ளது.
- இந்தத் தேர்வானது ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கை வெளியிடப்பட்டு, அரசாங்கப் பதவிகளுக்கு வேண்டிய நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக வேண்டி பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகளுக்குப் பதிலாக, ஒரு அறிவிக்கை வெளியிடப்பட்டு ஒற்றை இணையதள அல்லது ஆன்லைன் தேர்வாக நடத்தப் படும்.
- தற்பொழுதுள்ள தேர்வு முகமைகளான பணியாளர் தேர்வு ஆணையம் (SSC - Staff Selection Commission) இரயில்வே தேர்வு வாரியம் (RRB – Railway Recruitment Board), வங்கிப் பணியாளர் தேர்வு மையம் (IBPS - Institute of Banking Personnel Selection) ஆகியவை தொடர்ந்து செயல்படும்.
- ஆரம்பத்தில் CET ஆனது SSC, RRB மற்றும் IBPS ஆகியவற்றின் தொகுதி பி மற்றும் தொகுதி சி (தொழில்நுட்பம் சாராதது) பதவிகளுக்கான தேர்வை மட்டுமே நடத்த உள்ளது.
- CET ஆனது தேர்வர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு முதல் நிலைத் தேர்வாகும். இதன் மதிப்பெண் மூன்றாண்டுகளுக்குச் செல்லுபடியாகும்.
- NRA என்பது சமூகப் பதிவுகள் சட்டம், 1860 என்ற சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பாகும்.




## தேசியப் புற்றுநோய் பதிவுத் திட்ட அறிக்கை, 2020

- தேசிய மருத்துவ ஆராய்ச்சி ஆணையமானது தேசியப் புற்றுநோய் பதிவுத் திட்ட அறிக்கை – 2020 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள புற்று நோயாளிகளின் எண்ணிக்கையானது 2025 ஆம் ஆண்டு வாக்கில் 15.7 இலட்சமாக அதிகரிக்க உள்ளது.
- புகையிலை தொடர்பான புற்றுநோய்கள் 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் புற்றுநோய் விகிதத்தில் 27.1% ஆக உள்ளது.
- இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான புற்றுநோய் நிகழ்வுகளானது வட - கிழக்குப் பிராந்தியத்தில் காணப்படுகின்றது.
- மிசோரமில் உள்ள அய்ஸ்வால் மாவட்டம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள பாப்பும்பேர் மாவட்டம் ஆகியவை 1 இலட்சம் மக்கள் தொகைக்கு புற்று நோயின் அதிக வயது சரி செய்யப்பட்ட விகிதத்தை (Age adjusted rates) பதிவு செய்துள்ளது.
- அதிக எண்ணிக்கையிலான மார்பகப் புற்றுநோயானது சென்னை, ஹைதராபாத், தில்லி மற்றும் பெங்களூரு ஆகிய நகரங்களில் காணப்படுகின்றது.



## அடல் பிமித் வியக்தி கல்யாண் யோஜனா

- தொழிலாளர்கள் ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகமானது (ESIC - Employee's State Insurance Corporation) தனது அடல் பிமித் வியக்தி கல்யாண் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் தகுதி நிலை மற்றும் வேலை வாய்ப்பின்மைப் பயன்களின் பணவழங்கீட்டு மேம்பாடு ஆகியவற்றைத் தளர்த்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது மாறிவரும் வேலை வாய்ப்புக் கட்டமைப்பின் காரணமாக எந்தவொருக் காரணங்களுக்காகவும் வேலையிழந்த அல்லது வேலைவாய்ப்பற்றவர்களுக்கு நிதி வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *தளர்வுகள்*

- பணவழங்கீட்டுத் தளர்வானது சராசரி ஊதியமான 25% என்ற அளவிலிருந்து 50% ஆக மேம்படுத்தப் பட்டுள்ளது.
- வேலைவாய்ப்பின்மைக்குப் பிறகு 90 நாட்களில் கொடுக்கப்படும் நிவாரணத் தொகையானது 30 நாட்களுக்குப் பிறகு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக மாறி விடும்.
- காப்பீடு செய்யப்பட்ட நபர் தனது காப்பீட்டு உரிமையைத் தான் பணியாற்றிய தன்னுடைய கடைசியான முதலாளியினால் அனுப்பப்பட்டு உரிமை கோரப் படுவதற்குப் பதிலாக நேரடியாக ESICயின் கிளை அலுவலகத்திலேயே அந்தக் காப்பீட்டு உரிமையைச் சமர்ப்பிக்க முடியும். பின் அந்த நிதியானது நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கிற்குச் செலுத்தப்படும்.

## சுவச் சர்வேக்சன் 2020 தரவரிசை

- இது 28 நாட்கள் என்ற அளவில் முழுவதும் டிஜிட்டல் முறையில் நடைபெற்ற மற்றும் காகிதமற்ற ஒரு தேசிய அளவிலான ஆய்வாகும். மேலும் இது உலகின் மிகப்பெரிய ஒரு தூய்மை ஆய்வாகவும் விளங்குகின்றது.
- இந்தூர் நகரமானது தொடர்ந்து நான்காவது முறையாக தூய்மையான இந்திய நகரம் என்ற நிலையைத் தக்க வைத்துள்ளது. இதற்கு அடுத்து இந்த தரவரிசையில் சூரத் 2வது இடத்திலும் நவி மும்பை 3வது இடத்திலும் உள்ளது.

### *இதர வெற்றியாளர்கள்*

- இந்தியாவின் தூய்மையான தலைநகரம் – புது தில்லி மாநகராட்சிக் கழகம், புது தில்லி
- இந்தியாவின் தூய்மையான சிறு நகரம் – அம்பிகாபூர், சத்தீஸ்கர்
- இந்தியாவின் தூய்மையான நடுத்தர நகரம் – மைசூரு, கர்நாடகா
- இந்தியாவின் தூய்மையான பெரு நகரம் – விஜயவாடா, ஆந்திரப் பிரதேசம்
- இந்தியாவின் தூய்மையான மிகப்பெரும் நகரம் – அம்தாவத், குஜராத்
- இந்தியாவின் தூய்மையான நகரம் (1 இலட்சம் மக்கள் தொகைக்குக் கீழ்) – கராத், மகாராஷ்டிரா

### *தமிழ்நாட்டில்*

- தமிழ்நாட்டில் உள்ள தூய்மையான நகரம் கோயம்புத்தூர் ஆகும். இது 40வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இதில் மதுரை மற்றும் சென்னை ஆகியவை முறையே 42வது மற்றும் 45வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- திருச்சி 102வது இடத்தையும் திருநெல்வேலி 159வது இடத்தையும் சேலம் 173வது இடத்தையும் திருப்பூர் 173வது இடத்தையும் பிடித்துள்ளன.

- புத்தாக்கம் மற்றும் சிறந்த நடைமுறைகளில் சிறந்து விளங்கும் மிகப்பெரிய நகரம் – சென்னை, தமிழ்நாடு.
- மேலே குறிப்பிட்ட தரவரிசையில் தமிழ்நாட்டில் உள்ள எந்தவொரு நகரமும் முதல் 10 இடங்களுக்குள் இடம் பெற வில்லை.

| பிரிவு | வெற்றியாளர் |
|---|---|
| **100 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறைவாக உள்ள மாநிலங்கள்** | 4) ஜார்க்கண்ட்<br>5) ஹரியானா<br>6) உத்தரகாண்ட் |
| **100 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேல் உள்ள மாநிலங்கள்** | 3) சத்தீஸ்கர்<br>4) மகாராஷ்டிரா<br>5) மத்தியப் பிரதேசம் |
| **தேசியத் தரவரிசை (நகரங்கள் 1 – 10 இலட்சம்)** | 4) அம்பிகாபூர் – சத்தீஸ்கர்<br>5) மைசூரு - கர்நாடகா<br>6) புது தில்லி |
| **கங்கைக் கரையோர நகரங்கள் தரவரிசை** | 4) சுனார் (50 ஆயிரத்திற்குக் குறைவாக மக்கள் தொகை கொண்டது)<br>5) கன்னோஜ் (50 ஆயிரம் இலட்சம் மக்கள் தொகை)<br>6) வாரணாசி (1 இலட்சம் மக்கள் தொகைக்கு மேல்) |

Ministry of Housing and Urban Affairs
Government of India

SWACHH SURVEKSHAN League 2020

**SS2020 League Rankings (Quarter 1)**

**Greater than 10 Lakh Population**

| RANK # | STATE NAME | DISTRCT NAME | CITY/ULB NAME | ULB CODE | SCORE BEFORE VALIDATION | SCOF AFTE VALII |
|---|---|---|---|---|---|---|
| 1 | MADHYA PRADESH | INDORE | INDORE | 802273 | 1860.00 | 1632. |
| 2 | MADHYA PRADESH | BHOPAL | BHOPAL | 802312 | 1830.00 | 1523. |
| 3 | GUJARAT | SURAT | SURAT | 802629 | 1736.00 | 1497. |
| 4 | MAHARASHTRA | NASHIK | NASHIK | 802776 | 1733.58 | 1468. |
| 5 | GUJARAT | RAJKOT | RAJKOT | 802501 | 1713.00 | 1442. |

## தேசிய ஆசிரியர்கள் விருது 2020

- நாடு முழுவதும் 47 ஆசிரியர்களுக்கு 2020 ஆம் ஆண்டிற்கான தேசிய ஆசிரியர் விருதுகளானது வழங்கப்பட உள்ளது.
- அவர்களில் பின்வரும் 2 ஆசிரியர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.
    - R.C. சரஸ்வதி, சென்னையில் அசோக் நகரில் உள்ள அரசு மகளிர் உயர் நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர்.
    - S. திலீப், விழுப்புரத்தில் சதயமங்கலத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியின் ஆங்கில ஆசிரியர்.

## ஆளில்லா குட்டி விமானத்தை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு அமைப்பு




- மத்திய இரயில்வே துறை அமைச்சகமானது இரயில்வேப் பாதுகாப்பின் பயன்பாட்டிற்காக ஆளில்லா குட்டி விமானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்த இருப்பதாக அறிவித்துள்ளது.
- இந்த ஆளில்லா குட்டி விமானமானது மத்திய இரயில்வே, தென் கிழக்கு இரயில்வே, மற்றும் தென் மேற்கு இரயில்வே ஆகியவற்றில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்தக் கண்காணிப்பு அமைப்பை செயல்படுத்துவதற்காக இரயில்வே துறை அமைச்சகமானது நிஞ்சா என்ற ஒரு ஆளில்லா குட்டி விமானத்தைக் கொள்முதல் செய்துள்ளது.
- இந்த ஆளில்லா குட்டி விமானங்கள் காணொலியை ஒளிபரப்பும் திறன் கொண்டதாகவும் நிகழ்நேரக் கண்காணிப்பை மேற்கொள்ளும் திறன் கொண்டதாகவும் விளங்குகின்றது.

## தேசிய மக்கள் தொகை ஆணையம்

- தேசிய மக்கள் தொகை ஆணையமானது 2011-36 ஆகிய காலகட்டத்திற்கான மக்கள் தொகை கணிப்பு குறித்த தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

- ❖ இந்த ஆணையமானது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தினால் அமைக்கப்பட்டுள்ளது.

### *முக்கிய அம்சங்கள்*

- ❖ நாட்டின் பாலின விகிதமானது 943 (2011 ஆம் ஆண்டில்) என்ற அளவிலிருந்து 957 (2036 ஆம் ஆண்டில்) ஆக அதிகரிக்கும் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- ❖ இந்தியாவின் மக்கள் தொகையானது 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2036 ஆம் ஆண்டில் 1.52 பில்லியனை எட்ட உள்ளது.
- ❖ இந்தியாவின் மக்கள் தொகையானது 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2036 ஆம் ஆண்டில் 25% அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- ❖ 2011 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால கட்டத்தில் மக்கள் தொகை அதிகரிப்பு விகிதமானது 12.5% ஆக இருக்கும்.
- ❖ இது 2021-31 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மேலும் 8.4% என்ற அளவிற்குக் குறைய இருக்கின்றது.
- ❖ 2031 ஆம் ஆண்டு வாக்கில், இந்தியாவானது சீனாவைப் பின்னுக்குத் தள்ளி, உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக விளங்க உள்ளது.
- ❖ பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை முறையே 3.5 மற்றும் 3.7 என்ற அளவில் மிக உயரிய மொத்தப் பிறப்பு விகிதங்களைக் கொண்டுள்ளது.
- ❖ 2001 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் பீகார் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகியவை அதிக அளவிலான வெளியக இடப்பெயர்வு கொண்ட மாநிலங்களாக உள்ளன.
- ❖ அதே வேளையில், குஜராத், மகாராஷ்டிரா, தில்லி மற்றும் ஹரியானா ஆகியவை உள்ளக இடப்பெயர்வில் நேர்மறைத் தன்மையுடன் உள்ளன.
- ❖ கர்நாடகா, கேரளா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய தென் மாநிலங்கள் 9% மக்கள் தொகை வளர்ச்சியை மட்டுமே கொண்டிருக்கும் என்று கணக்கிடப் பட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையானது நாட்டில் உள்ள நகர்ப்புற மக்கள் தொகையானது 2036 ஆம் ஆண்டில் 57% அதிகரிக்கும் என்று கணித்துள்ளது.
- ❖ 2036 ஆம் ஆண்டில் பெண்களுக்கான சராசரி வாழ்நாள் எதிர்பார்ப்பு 80 ஆகவும் ஆண்களுக்கான சராசரி வாழ்நாள் எதிர்பார்ப்பு 74 ஆகவும் கொண்டிருக்கும் ஒரே இந்திய மாநிலம் கேரளா ஆகும்.

## ட்ரைபுட் திட்டம் (Trifood Project)

- ❖ 2 புதிய மூன்றாம் நிலை பதப்படுத்தும் மையங்களான ட்ரைபுட் (TRIFOOD) மையங்களானவை மகாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டு உள்ளது.
- ❖ இது பழங்குடியின வனப்பொருள் சேகரிப்பாளர்களினால் சேகரிக்கப்படும் மரம் அல்லாத வனப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது ட்ரைபெட் (TRIFED - Tribal Cooperative Marketing Development Federation of India) மற்றும் மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சகத்தினால் கூட்டாக செயல்படுத்தப் பட உள்ளது.

## கோர்மோ பணிகள் செயலி

- ❖ இந்தியாவில் தொடக்க நிலைப் பணி கோருபவர்கள், அந்தப் பணிகளைக் கண்டறிந்து, அதற்கு விண்ணப்பிப்பதற்கு உதவுவதற்காக வேண்டி தனது கோர்மோ பணிகள் செயலியைத் தொடங்கியுள்ளதாக கூகுள் அறிவித்துள்ளது.
- ❖ இந்தப் பணிகள் சோதனை முறையில் முதலில் வங்க தேசத்தில் தொடங்கப் பட்டது. அதன் பிறகு இந்தோனேஷியாவில் இந்த சேவை தொடங்கப் பட்டது.
- ❖ இது பல்வேறு சந்தைகளில் இருக்கும் பல்வேறு நிலைகளில் உள்ள வேலை தேடுபவர்கள் மற்றும் வணிகர்களுக்கு உதவுவதற்காக வேண்டி இது ஒரு பணிகள் சார்ந்த தளமாக வளர்ந்துள்ளது.




## விலையுயர்ந்த உலோகங்களுக்கான தரநிர்ணயக் குறியீடு

- ❖ மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகமானது தங்க நகைகள் மற்றும் கலைப் பொருட்கள் போன்ற விலையுயர்ந்த உலோகங்களுக்கான கட்டாயத் தரநிர்ணயக் குறியீட்டு அம்சத்தை அறிவித்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டு ஜுன் 01 மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வர உள்ளது.
- ❖ தரநிர்ணயக் குறியீடு என்பது விலையுயர்ந்த உலோகங்களைத் துல்லியமாகக் கண்டறிதல் மற்றும் அதன் அதிகாரப்பூர்வ பதிவுகளுக்கான ஒரு சான்றளிப்புச் செயல்முறையாகும்.
- ❖ இது உலோகங்களின் தூய்மைத் தன்மை மற்றும் துல்லியத் தன்மையை உறுதி செய்கின்றது.

## தேசியத் திருநர் ஆணையம்

- ❖ மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சகமானது தேசியத் திருநர் ஆணையத்தை அமைத்துள்ளது.
- ❖ மத்திய சமூக நீதித் துறை அமைச்சர் இந்த ஆணையத்தின் தலைவராக செயல்படுவார். மேலும் பல்வேறு அமைச்சகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக இருப்பர்.
- ❖ அச்சமூகத்திலிருந்து இந்தக் குழுவில் நியமிக்கப் பட்டுள்ள 5 உறுப்பினர்கள் பின்வருமாறு : லட்சுமி நாராயண் திருப்பதி, கோபி சங்கர் (மதுரை), மீரா பரிடா, சைனாப் ஜாவித் பட்டேல் மற்றும் காக் சிங்டாபம் சியாம்சந்த் ஷர்மா ஆகியோராவர்.
- ❖ இந்த ஆணையமானது திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 என்ற சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ளது.

## NEP கொள்கையைச் செயல்படுத்தும் முதல் மாநிலம்

- 2020 ஆம் ஆண்டு புதிய தேசிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்த இருக்கும் முதல் மாநிலம் கர்நாடகா ஆகும்.
- புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள NEP (Natioanl Education Policy - தேசிய கல்விக் கொள்கை) கொள்கையை வரவேற்பதற்காக வேண்டி அந்த மாநில அரசினால் தேவையான நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- NEP - 2020 ஆனது அடுத்த 20 ஆண்டுகளுக்கு அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் அனைவருக்கும் சமமான ஒரு தரமான கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## ஐஎன்எஸ் விராட் குஜராத்தில் உடைக்கப் படுதல்

- 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியக் கடற்படையில் பணியாற்றிய ஐஎன்எஸ் விராத் என்ற கப்பலானது குஜராத்தில் உள்ள அலாங்கில் உடைக்கப்பட உள்ளது.
- இந்தக் கப்பலானது முன்று வருடங்களுக்கு முன்பு பணியிலிருந்து நீக்கப்பட்டது.
- இது 1987 ஆம் ஆண்டில் இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது.
- இதற்கு முன்பு 1959 முதல் 1984 வரை இந்தக் கப்பல் இங்கிலாந்துக் கடற்படையில் எச்எம்எஸ் ஹெர்மிஸ் என்ற பெயரில் பணியாற்றியது.
- இது விண்மீன் குழு என்ற பெயரிலான வகுப்பைச் சேர்ந்த ஒரு விமானம் தாங்கி வகைக் கப்பலாகும்.
- இது 2013 ஆம் ஆண்டில் பணியில் சேர்க்கப்பட்ட ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவிற்கு முன்பு இந்தியக் கடற்படையின் தலைமைக் கப்பலாக விளங்கியது.
- தற்பொழுது, இந்தியக் கடற்படையின் ஒரே விமானம் தாங்கிக் கப்பல் ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவாகும்.

## தேசியப் புவியியல் தகவல் அமைப்பு செயல்படுத்தப்பட்ட நில வங்கி அமைப்பு

- மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது தேசியப் புவியியல் தகவல் அமைப்பு செயல்படுத்தப்பட்ட நில வங்கி முறையை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்தியா முழுவதும் உள்ள தொழில்துறைக் குழுக்களின் தரவுதளத்தை வழங்குவதற்கான ஒரு தளமாக இது அமையவுள்ளது.
- தொழிற்துறைத் தகவல்களை இலவசமாகவும் எளிதாகவும் அணுகுவதற்கான ஒரு தீர்வாக இது செயல்படும்.
- இது காடு, மூலப்பொருள் வெப்ப வரைபடங்கள், வடிகால் மற்றும் இணைப்பின் பல அடுக்குகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளது.

## கிரண் தொலைபேசி உதவிச் சேவை

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது மனநல சுகாதார மறுவாழ்வுக்காக கிரண் என்னும் ஒரு கட்டணமில்லா தொலைபேசி உதவி எண்ணை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த எண்ணானது (1800-599-0019) அதன் கூட்டாளர்களுடன் இணைந்து சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.

- இது முதலுதவி, ஆரம்பகால நோய்ப் பாதிப்பு ஆய்வுக்கு ஆதரவு, துன்ப மேலாண்மை, உளவியல் ஆதரவு, மாறுபட்ட நடத்தைகளைத் தடுப்பது, மன நலம், உளவியல் நெருக்கடி மேலாண்மை போன்றவற்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கிரண் தொலைபேசி உதவிச் சேவையானது 13 மொழிகளில் அதன் சேவையை வழங்க உள்ளது.

## ஏற்றுமதி ஆயத்த குறியீட்டு அறிக்கை 2020

- நிதி ஆயோக்கானது போட்டித்தன்மை நிறுவனத்துடன் (Institute of Competitiveness) இணைந்து ஏற்றுமதி ஆயத்த குறியீட்டு அறிக்கை 2020 என்ற ஒரு அறிக்கயை வெளியிட்டுள்ளது.
- இந்திய மாநிலங்களின் ஏற்றுமதி தயாரிப்பு மற்றும் செயல்திறனை ஆய்வு செய்யும் வகையிலான முதல் அறிக்கை இதுவாகும்.
- இந்தக் குறியீடானது மாநிலங்களை நான்கு முக்கிய அளவுருக்களின் அடிப்படையில் தரவரிசைப் படுத்தியுள்ளது - கொள்கை; வணிக சுற்றுச்சூழல் அமைப்பு; ஏற்றுமதி சுற்றுச்சூழல் அமைப்பு; ஏற்றுமதி செயல்திறன்.

### *அறிக்கையின் சிறப்பம்சங்கள்*

- தற்போது, இந்தியாவின் ஏற்றுமதியில் 70 சதவீதமானது மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகிய ஐந்து மாநிலங்களின் பங்களிப்பில் உள்ளது.

| பிரிவு | மாநிலங்கள் |
|---|---|
| **முதல் 3 மாநிலங்கள்** | குஜராத், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு. |
| **நிலத்தால் சூழப்பட்ட முதல் 3 மாநிலங்கள்** | ராஜஸ்தானைத் தொடர்ந்து தெலுங்கானா மற்றும் ஹரியானா. |
| **முதல் 3 இமயமலை மாநிலங்கள்** | உத்தரகண்ட்டைத் தொடர்ந்து திரிபுரா மற்றும் இமாச்சல பிரதேசம். |
| **சிறந்த 3 ஒன்றியப் பிரதேசங்கள்/நகர்ப்புற மாநிலங்கள்** | டெல்லியைத் தொடர்ந்து கோவா மற்றும் சண்டிகர். |
| **கொள்கை அளவுருக்களில் முதல் 3 இடம்** | மகாராஷ்டிராவைத் தொடர்ந்து குஜராத் மற்றும் ஜார்க்கண்ட். |
| **வணிக சுற்றுச்சூழல் அளவுருவில்** | குஜராத்தைத் தொடர்ந்து டெல்லி மற்றும் தமிழ்நாடு. |
| **ஏற்றுமதி சுற்றுச்சூழல் அமைப்பு அளவுருவில்** | மகாராஷ்டிராவைத் தொடர்ந்து ஒடிசா மற்றும் ராஜஸ்தான். |
| **ஏற்றுமதி செயல்திறன் அளவுருவில்** | மிசோரத்தைத் தொடர்ந்து குஜராத் மற்றும் மகாராஷ்டிரா. |




## இந்திய தொல்பொருள் ஆய்வின் புதிய வட்டங்கள்

- இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் 7 புதிய வட்டங்களை இந்திய கலாச்சார அமைச்சகமானது அறிவித்துள்ளது.
- மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், கர்நாடகா, மேற்கு வங்கம் மற்றும் குஜராத்தில் புதிய வட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.
- திருச்சி, ராய்கஞ்ச், ராஜ்கோட், ஜபல்பூர், ஜான்சி & மீரட் ஆகியவை புதிய வட்டங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.
- கர்நாடகாவில் உள்ள ஹம்பி நகரமானது சர்வதேச அளவில் ஒரு புகழ்பெற்ற இடமாதலால் இது குறு வட்டம் என்ற நிலையில் இருந்து ஒரு முழுமையான வட்டமாக மாற்றப் பட்டுள்ளது.
- முன்னதாக நாடு முழுவதும் 29 தொல்பொருள் ஆய்வு வட்டங்கள் இருந்தன.

# சர்வதேசச் செய்திகள்

## ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆளுநர் குழுவின் ஐந்தாவது வருடாந்திரக் கூட்டம்

- இது 'கனெக்ட்டிங் பார் டுமாரோ' (நாளைக்காக இணைவது) என்ற கருப்பொருளின் கீழ் இணைய வாயிலில் நடத்தப் பட்டது.
- இந்தச் சந்திப்பில் சீனாவின் ஜின் லிகுன் மீண்டும் இதன் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- தற்போது, இந்த வங்கியில் இந்தியாவானது 7.65% வாக்கிற்கான பங்குகளைப் பெற்று உள்ளது. அதே நேரத்தில் சீனா இந்த அமைப்பில் 26.63% பங்குகளை வைத்திருக்கிறது.
- இச்சந்திப்பின் போது, அந்த வங்கியில் சேர லைபீரியா அளித்த விண்ணப்பத்திற்கு ஆளுநர் குழுவானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த வங்கியானது 57 நிறுவன உறுப்பினர்கள் என்ற அளவிலிருந்து 103 என்ற அளவில் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட வங்கியாக வளர்ந்துள்ளது.

- இதன் ஆறாவது வருடாந்திரக் கூட்டம் 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாயில் நடத்தப் பெறும்.
- மத்தியக் கிழக்கு நாட்டில் நடக்கும் முதலாவது வருடாந்திரக் கூட்டமாக இது அமையும்.

## நச்சு உண்மை

- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் மற்றும் சர்வதேச இலாப நோக்கற்ற அமைப்பான தூய பூமி ஆகியவை சுகாதார நெருக்கடி குறித்த முதல் வகையான தமது அறிக்கையை எழுதி வெளியிட்டுள்ளன.
- இது "நச்சு உண்மை: காரீய மாசுபாட்டுடன் இணைத்து குழந்தைகளை ஈடுபடுத்துவது அவர்களின் எதிர்கால ஆற்றலின் குறைபாட்டிற்கு வழிவகுக்கிறது" என்று தலைப்பிடப் பட்டுள்ளது.
- இது உலகெங்கிலும் உள்ள ஏராளமான குழந்தைகளைப் பாதிக்கும் காரீய நச்சுத் தன்மையைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

## காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பு (CHRI)

- சமீபத்தில் ஆள்கடத்தலுக்கு எதிரான உலக தினக் கொண்டாட்டத்தின் போது அடிமைத் தனம் குறித்த ஒரு அறிக்கையானது CHRI (Commonwealth Human Rights Initiative) மற்றும் சர்வதேச அடிமைத்தன எதிர்ப்பு அமைப்பான “வாக் ப்ரீ” (Walk Free) ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது.
- உலகில் நவீன அடிமைத்தன நிலையில் ஏறத்தாழ 40% மக்கள் காமன்வெல்த் நாடுகளில் வாழ்கின்றனர்.
- உலகில் நடைபெறும் அனைத்துப் பெண் குழந்தைத் திருமணங்களில் மூன்றில் ஒரு பங்கை இந்தியா கொண்டுள்ளது.
- CHRI என்பது மனித உரிமைகள் துறையில் பணியாற்றும் ஒரு சுயாதீன, இலாப நோக்கற்ற மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் இந்தியாவில் உள்ள புது தில்லியில் அமைந்துள்ளது.

## ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து சிலை

- 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு அரிய வகை சிவன் கடவுளின் கற்சிலையானது இந்தியத் தொல்லியல் துறைக்கு (ASI - Archaeological Survey of India) வழங்கப்பட உள்ளது.
- இது இராஜஸ்தானில் உள்ள ஒரு கோவிலிலிருந்துத் திருடப்பட்டு, ஐக்கிய இராஜ்ஜியத்திற்குக் கடத்தப்பட்டது.



- இது இராஜஸ்தானின் பரோலியில் உள்ள காட்டீஸ்வர ஆலயத்தைச் சேர்ந்ததாகும்.

- இது குர்ஜரா-பிரதிகாரா அரசர்களினால் கட்டப்பட்டதாகும். இது பிரதிகாரா பேரரசு என்றும் அழைக்கப் படுகின்றது.
- இவர்கள் 7 ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருந்து 11 ஆம் நூற்றாண்டு வரை வட இந்தியாவின் அதிகப்படியான பகுதிகளை ஆட்சி செய்து வந்தனர்.

## உரிமம் மீதான வரி

- அமெரிக்கத் தொழில்நுட்ப நிறுவனமான முகநூல் மற்றும் ஆல்பபெட் கூகுள் ஆகியவை செய்திப் பொருளடக்கத்திற்காக வேண்டி ஆஸ்திரேலிய ஊடக வெளியீட்டாளர்களுக்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று ஆஸ்திரேலியா எச்சரித்துள்ளது.
- இது தனது நாட்டு ஊடக நிறுவனங்களுக்கு உதவ இருக்கின்றது.
- உரிம ரீதியிலான முறையின் கீழ் உரிமத்தைப் பெறும் முதலாவது நாடு ஆஸ்திரேலியா ஆகும்.

## கூர்க்கா படை வீரர்கள் குறித்த 1947 ஆம் ஆண்டு ஒப்பந்தம்

- சமீபத்தில் நேபாள நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் கூர்க்கா படை வீரர்களின் இராணுவச் சேவை குறித்த இந்தியா, நேபாளம் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகியவற்றுக்கிடையேயான 1947 ஆம் ஆண்டு ஒப்பந்தமானது தேவையற்றது என்று கூறியுள்ளார்.
- 1814-16 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஆங்கிலேய-நேபாளப் போரைத் தொடர்ந்து, ஆங்கிலேய அரசானது 1815 ஆம் ஆண்டில் கூர்க்கா படை வீரர்களைப் பணியில் சேர்க்க முடிவு செய்தது.
- 1947 ஆம் ஆண்டில் இந்தியாவின் விடுதலைக்குப் பின்பு, கூர்க்கா படை வீரர்கள் குறித்த விவகாரமானது ஆங்கிலேய-இந்தியா-நேபாளம் ஆகியோருக்கிடையேயான முத்தரப்பு ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப் பட்டது.
- தற்பொழுது கூர்க்காக்கள் ஆங்கிலேய இராணுவத்தில் 3% ஆக உள்ளனர். இவர்கள் அங்கு 2015 ஆம் ஆண்டு தமது 200 ஆண்டு காலச் சேவையை நிறைவு செய்துள்ளனர்.



## கேலப்பாகோஸ் தீவுக் கூட்டம் மற்றும் சீனா

- ஈகுவேடார் நாடானது கேலப்பாகோஸ் தீவுக்கூட்டத்திற்கு அருகில் "மிதக்கும் நகரம்" என்று பெயரிடப்பட்ட சீன மீன்பிடிப் படகுகள் காணப்பட்டதற்கு தனது வருத்தத்தை அதிகாரப் பூர்வமாகத் தெரிவித்துள்ளது.
- கேலப்பாகோஸ் தீவுகளானது தென் அமெரிக்கக் கண்டத்திலிருந்து 1000 கிலோ மீட்டருக்கு அப்பால் பசிபிக் கடலில் அமைந்துள்ளது.

- 1978 ஆம் ஆண்டில், இந்தத் தீவுகளானது யுனெஸ்கோவின் முதலாவது உலகப் பாரம்பரியத் தளமாக உருவெடுத்துள்ளது.




## பாகிஸ்தானின் புதிய அரசியல் வரைபடம்

- சமீபத்தில் பாகிஸ்தான் நாடானது ஜம்மு காஷ்மீரின் முழுப் பகுதியையும் குஜராத்தின் ஒரு சில பகுதிகளையும் தனக்குச் சொந்தமான பகுதிகளாகக் கூறும் வகையிலான ஒரு புதிய அரசியல் வரைபடத்தை வெளியிட்டுள்ளது.
- இது அப்போதைய ஜுனாகத் மாநிலத்தின் பகுதியையும் தனக்குச் சொந்தமான பகுதியாகக் கூறுகின்றது.
- இந்த வரைபடத்தின் முந்தைய பதிப்பில், சீனாவுடன் எல்லையைக் கொண்ட காஷ்மீர் மற்றும் லடாக் பகுதிகள் எல்லை குறிக்கப்படாமல் இருந்தது. இது "முடிவு செய்யப்படாத எல்லைப் பகுதி மாகாணம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.



## கோவிட் – 19 நோய்த் தொற்றின் போது கல்வி – ஐ.நாவின் கொள்கை

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது “கொள்கை விளக்கம்: கோவிட் – 19 நோய்த் தொற்றின் போதும் மற்றும் அதற்குப் பின்னும் கல்வி” என்ற தலைப்பு கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இதன்படி, கோவிட் – 19 நோய்த் தொற்றால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கங்களின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 21 மில்லியன் அளவில் கூடுதலான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பள்ளியிலிருந்து வெளியேறுவர் (இடைநிற்றல்) அல்லது பள்ளி செல்லும் வசதியைப் பெறாமல் இருப்பர்.
- இந்தக் கொள்கை விளக்க அறிக்கையானது எதிர்வரும் பேரிடரைத் தடுப்பதற்கான வழிகள் குறித்த ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் தரவு மற்றும் அம்சப் பரிந்துரைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்

- மஹிந்தா ராஜபக்சே இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் 145 இடங்களில் (கூட்டணியிலிருந்து 5 இடங்களுடன்) வெற்றி பெற்றுள்ளார். இவர் தற்போது இலங்கையின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மை இடத்தைக் கொண்டுள்ளார்.
- மூன்றில் இரண்டு மடங்கு சிறப்புமிக்க பெரும்பான்மையானது அந்நாட்டின் அரசியலமைப்பை மாற்றுவதற்கு வேண்டிய அதிகாரத்தை அவர்களுக்கு அளிக்க உள்ளது.
- இலங்கையானது மக்களாட்சி ஜனநாயக மற்றும் ஒற்றையாட்சி முறையைக் கொண்ட நாடாகும். இது நாடாளுமன்றம் மற்றும் அதிபர் முறை ஆகிய இரண்டும் கலந்து பகுதியளவு அதிபர் முறையினால் ஆளப்படுகின்றது.

## உலகளாவிய உணவு இழப்பு மற்றும் உணவுக் கழிவைக் குறைப்பதற்காக ஒரு புதிய தளம்

- உணவு மற்றும் வேளாண் அமைப்பானது உலகளாவிய உணவு இழப்பு மற்றும் உணவுக் கழிவைக் குறைப்பதற்கு உதவுவதற்காக ஒரு புதிய தளத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்தத் தளமானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 அன்று அனுசரிக்கப்பட இருக்கும் முதலாவது சர்வதேச உணவு இழப்பு மற்றும் உணவுக் கழிவு விழிப்புணர்வு தினத்தன்று அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பட உள்ளது.
- இந்தத் தளமானது உணவின் அளவு, குறைப்பு குறித்த கொள்கைகள், கூட்டிணைவு, செயல்கள் மற்றும் உலக நோய்த் தொற்றுக் காலத்தில் உணவு இழப்பு மற்றும் உணவுக் கழிவுகளை வெற்றிகரமாகக் குறைத்த மாதிரிகளின் உதாரணங்கள் குறித்த தகவல்களைக் கொண்டிருக்கும்.

## 75வது நாகசாகி நாள்

- 2020 ஆகஸ்ட் 9, அன்று, ஜப்பானின் நாகசாகி நகரத்தில் அமெரிக்கா அணுகுண்டை வீசியதால் கொல்லப்பட்ட மக்களையும் அப்பாவிக் குழந்தைகளையும் நினைவு கூரும் வகையில் 75 வது நாகசாகி தினம் அனுசரிக்கப் படுகிறது.
- ஆகஸ்ட் 9, 1945 அன்று, அமெரிக்காவானது "ஃபேட் மேன்" (Fat Man) என்ற அணுகுண்டை அங்கு வீசியது.

- இதன் விளைவாக, ஆகஸ்ட் 14 ஆம் தேதி, ஜப்பான் சரணடைய இரண்டாம் உலகப் போரானது முடிவுக்கு வந்தது.




## லோயா ஜிர்கா கூடுகை

- கொலை செய்தல் மற்றும் கடத்துதல் உள்ளிட்ட கடுமையான குற்றங்களுக்காக தண்டனை பெற்று வரும் 400 தாலிபான் தீவிரவாதிகளை விடுதலை செய்வது குறித்து முடிவு செய்வதற்காக 3 நாள் நடைபெறும் லோயா ஜிர்கா கூடுகையானது ஆப்கானிஸ்தானில் கூட்டப் பட்டுள்ளது.
- இது ஆப்கானிஸ்தானில் உள்ள பல்வேறு இன, மத மற்றும் பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளை ஒன்றிணைக்கும் மிகப்பெரிய அளவிலான ஒரு தேசியக் கூடுகையாகும்.
- இது தேசிய நெருக்கடி காலம் மற்றும் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகக் கூட்டப்படும் உயரிய மதிப்பு கொண்ட ஒரு பழைமை வாய்ந்த ஆலோசக அமைப்பாகும்.
- ஆப்கன் அரசியலமைப்பின் படி, லோயா ஜிர்கா ஆனது ஆப்கன் மக்களின் ஒரு உயரிய மதிப்பு மிக்க உணர்வாகக் கருதப்படுகின்றது.
- ஆனாலும் இது ஒரு அதிகாரப்பூர்வ முடிவு எடுக்கும் அமைப்பு அல்ல. இதன் முடிவுகள் எந்தவொரு அமைப்பையும் கட்டுப்படுத்தாது.

## இந்திய வீரர்களுக்கான போர் நினைவுச் சின்னம்

- வங்க தேச அரசானது 1971 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போரில் கொல்லப்பட்ட இந்திய வீரர்களுக்காக வேண்டி ஒரு போர் நினைவுச் சின்னத்தைக் கட்ட உள்ளது.
- இந்தப் போர் நினைவுச் சின்னமானது திரிபுராவின் எல்லையில் உள்ள பிரம்மன்பரியாவில் உள்ள ஆசுகன்ஞ் என்ற இடத்தில் கட்டமைக்கப்பட உள்ளது.
- இது 1971 ஆம் ஆண்டின் விடுதலைப் போரில் (Liberation War of 1971) இந்தியாவின் முக்கியத்துவத்திற்காக முக்கியமாகக் கட்டப்பட உள்ளது.
- பாகிஸ்தான் நாடானது “செங்கிஸ்கான் நடவடிக்கை” என்பதனைத் தொடங்கிய பிறகு இந்தியா இந்தப் போரில் நுழைந்தது. அந்த நடவடிக்கை 11 இந்திய விமான தளங்களைத் தாக்கியது.

## IC-IMPACTS வருடாந்திர ஆராய்ச்சி மாநாடு

- இந்தியா-கனடா IC-IMPACTS (India-Canada Centre for Innovative Multidisciplinary Partnership to Accelerate Community Transformation and Sustainability) வருடாந்திர ஆராய்ச்சி மாநாடானது இரு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை ஒரு புதிய நிலைக்கு எடுத்துச் செல்வது குறித்து விவாதிப்பதற்கான ஒரு நோக்கத்துடன் நடத்தப்பட்டது.
- இந்த மாநாடானது சமூக மாற்றம் மற்றும் நீடித்தத் தன்மையை விரைவுபடுத்துவதற்காக வேண்டி புத்தாக்க பல்துறைப் பங்களிப்பிற்கான இந்தியா-கனடா மையத்தினால் காணொலி வாயிலாக நடத்தப் படுகின்றது.

## டைம்ஸ் சதுக்கத்தில் இந்தியக் கொடி

- முதன்முறையாக, அமெரிக்காவில் முன்னணியில் உள்ள ஒரு வெளிநாடு வாழ் இந்தியர் குழுவானது (இந்திய மன்றங்கள் கூட்டமைப்பு) ஆகஸ்ட் 15 அன்று நியூயார்க்கில் உள்ள டைம்ஸ் சதுக்கத்தில் இந்தியாவின் தேசியக் கொடியை ஏற்ற உள்ளது.
- அமெரிக்காவில் உள்ள முக்கியமான இடத்தில் மூவர்ணக் கொடி பறக்க விடப் படுவது இதுவே முதன்முறையாகும்.

## இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்கத் துணைக் குடியரசுத் தலைவர் வேட்பாளராக நியமனம்

- அமெரிக்கத் தேர்தலானது 2020 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது.
- குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் அமெரிக்கத் தேர்தலில் போட்டியிடுவதற்கான மற்றொரு வாய்ப்பினையும் கொண்டுள்ளார். இவர் எதிர் அணியைச் சேர்ந்தவரான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பிடன் என்பவரை எதிர்த்துப் போட்டியிடவுள்ளார்.
- ஜோ பிடன் என்பவர் ஒபாமா அதிபராக இருந்த போது அமெரிக்காவின் துணை அதிபராகப் பணியாற்றினார்.
- அதிபர் வேட்பாளரான ஜோ பிடன் ஜனநாயகக் கட்சியின் சார்பாக கமலா ஹாரிஸ் என்பவரை துணை அதிபராகத் தேர்ந்தெடுத்துள்ளார்.
- தேசிய அலுவலகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட இருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதலாவது பெண் மற்றும் முதலாவது கறுப்பினப் பெண்மணி இவராவார்.

## பிரிக்ஸ் போதை மருந்து எதிர்ப்பு பணிக் குழுச் சந்திப்பு

- பிரிக்ஸ் போதை மருந்து எதிர்ப்பு பணிக் குழுவின் 4வது அமர்வானது காணொலி வாயிலாக ரஷ்யாவின் தலைமையில் நடத்தப்பட்டது.
- இந்த குழுவில் உள்ள அனைத்து உறுப்பு நாடுகளான இந்தியா, பிரேசில், ரஷ்யா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவை இந்த அமர்வில் கலந்து கொண்டன.
- டார்க்நெட்டின் தவறான பயன்பாடு மற்றும் போதை மருந்து கடத்தலுக்கான தொழில்நுட்பங்கள் ஆகியவை இந்த அமர்வின் முக்கியக் கருப்பொருளாகும்.

## புதிய கோவிட் – 19 திரள்

- சமீபத்தில் மலேசியா நாடானது 10 மடங்கு அதிக ஆற்றல் கொண்டிருக்கும் புதிய கோவிட் – 19 திரளைக் கண்டறிந்துள்ளது.

- இந்த வைரஸின் பிறழ்வானது DG14G என்று அழைக்கப்படுகின்றது.
- இந்திய அறிவியல்சார் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி ஆணையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மூன்று மாத ஆராய்ச்சிக் காலத்தில் கோவிட்-19 கிருமியின் 73 புதிய திரள்களைக் கண்டறிந்துள்ளனர்.

### *மரபணு மாற்றம் பற்றி*

- இது மரபணுக்களின் மிகப்பெரிய பிரிவுகளின் உள்நுழைவு, அகற்றம் அல்லது சீரமைத்தல் ஆகியவற்றின் காரணமாக மரபணுவில் ஏற்படும் மாற்றமாகும்.
- இந்த மாற்றமானது மனித வழியின் மூலம் நிகழ்ந்தது என்பதைக் குறிக்காது.
- மேலும் மாற்றமானது இயற்கையாக நிகழ்கின்றது. மேலும் இது முக்கியமாக ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்கு செல்லும் போது நிகழ்கின்றது.
- சில நேரங்களில், இந்த மாற்றமானது ஒரு வலுவற்ற வைரசை உருவாக்குவதற்கான வழியினை வகுக்கும் திறனும் கொண்டதாகும்.




## உலக சூரியசக்தி ஒளி தொழில்நுட்ப மாநாடு

- சர்வதேச சூரியசக்தி ஒளிக் கூட்டமைப்பானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 அன்று முதன்முறையாக உலக சூரியசக்தி ஒளித் தொழில்நுட்ப மாநாட்டை நடத்த உள்ளது.
- இந்த மாநாடானது ஆற்றலை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் செய்வதற்காக, அதில் உள்ள சவால்களைக் களைவதற்காக வேண்டி ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொறியாளர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.
- இந்த மாநாடானது அடுத்த தலைமுறைக்கான சூரியசக்தி ஒளித் தொழில்நுட்பங்களை எடுத்துக் காட்ட உள்ளது.

## இஸ்ரேல் – ஐக்கிய அரபு அமீரக அமைதி ஒப்பந்தம்

- இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதலாவது வளைகுடா நாடு ஐக்கிய அரபு அமீரகமாகும்.
- இந்த ஒப்பந்தமானது ஆப்ரஹாம் பிரகடனம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- எகிப்து மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளுக்கு அடுத்து அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மூன்றாவது அரபு நாடு இஸ்ரேல் ஆகும்.




- யூதம், கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் ஆகிய 3 முக்கியமான ஆப்ரஹாமிக் சமயங்களை கௌரவப்படுத்துவதற்காக ஆப்ரஹாம் என்ற பெயரானது பயன்படுத்தப் படுகின்றது.
- இந்த ஒப்பந்தமானது மேற்கு நதிக் கரையின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தியுள்ளது.

### *மேற்கு நதிக்கரைப் பிரச்சினை*

- மேற்கு நதிக்கரைப் பகுதியானது இஸ்ரேல் மற்றும் ஜோர்டான் ஆகியவற்றிற்கு இடையே அமைந்துள்ளது.
- மேற்கு நதிக்கரைப் பகுதியானது அரபு-இஸ்ரேலியப் போரின் முடிவில் ஜோர்டான் நாட்டினால் கைப்பற்றப்பட்டது.
- 1967 ஆம் ஆண்டில், சிரியா, எகிப்து மற்றும் ஜோர்டான் ஆகியவற்றின் கூட்டுப் படையினால் இஸ்ரேல் தோற்கடிக்கப் பட்டது.

## நிர்மன்ஸ்ரீ திட்டம்

- வீட்டுவசதிக் கட்டுமானத் துறையை நோக்கிய பெண்களின் திறனை மேம்படுத்துவதற்காக வேண்டி ஐரோப்பிய ஒன்றியமானது 'நிர்மன்ஸ்ரீ' என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது இந்தியாவில் தன்னளவில் பெரிய அளவில் நடக்கும் முதல் வகையான ஒரு நீடித்த வீட்டு வசதித் திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது மகாராஷ்டிராவின் பீட் மற்றும் உஸ்மானாபாத் மாவட்டங்களிலும், ஒடிசாவின் தெங்கனல் மற்றும் ஜஜ்பூர் மாவட்டங்களிலும் செயல்படுத்தப் படும்.



## 19வது திருத்தத்தை நீக்குதல்

- ❖ இலங்கை அதிபரான கோத்தபய ராஜபக்சே அவர்கள் அந்நாட்டு அரசியலமைப்பின் புகழ்மிக்க 19வது திருத்தத்தை நீக்குவதற்கான தனது எண்ணத்தை தெரிவித்து உள்ளார்.
- ❖ இது 2015 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது பல்வேறு முக்கியமான அம்சங்களைக் கொண்டுள்ளது. அவையாவன:
    - ○ அதிபர் மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை 6 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைப்பது.
    - ○ ஒருவர் 2 முறை மட்டுமே அதிபராக பதவி வகிப்பதற்கான கால வரம்பை மீண்டும் அறிமுகம் செய்வது.
    - ○ நான்கரை ஆண்டுகளுக்குப் பிறகு மட்டுமே நாடாளுமன்றத்தை அதிபர் கலைக்கச் செய்வது.
    - ○ அதிபர் அமைச்சரவையின் தலைவராகத் தொடர்வார். அவர் பிரதமரின் அறிவுரையின்படி அமைச்சர்களை நியமிப்பார்.

## டிஜிட்டல் வாழ்க்கைத் தரக் குறியீடு 2020

- ❖ இந்தக் குறியீடானது பிரிட்டீஷ் விர்ஜின் தீவில் உள்ள ஒரு மெய்நிகர் தனியார் வலைப் பின்னல் (வலையமைப்பு) வழங்குநரான சர்ப்சார்க்கினால் (Surfshark) தயாரிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தக் குறியீட்டில் டென்மார்க் மற்றும் ஸ்வீடன் ஆகியவை முதல் 2 இடங்களிலும் கனடா மூன்றாவது இடத்திலும் உள்ளது.
- ❖ இஸ்ரேல் ஆனது குறைந்த செலவில் இணையதளச் சேவையை வழங்குகின்றது.
- ❖ சிங்கப்பூர், ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை மின்னணு-அரசு குறிகாட்டிகளில் சிறப்பாகச் செயல்படுகின்றன.
- ❖ ஐக்கிய இராஜ்ஜியம், பிரான்சு மற்றும் லித்வேனியா ஆகியவை சிறந்த அளவில் இணையதள பாதுகாப்பை வழங்குகின்றன.
- ❖ சிறந்த தரமான இணையதளச் சேவையானது சிங்கப்பூர், ஸ்வீடன் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளினால் வழங்கப் படுகின்றது.

### *இந்தியாவின் நிலை*

- ❖ இதில் ஒட்டுமொத்தமாக, இந்தியா 57வது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தியா குறைந்த விலையில் வழங்கப்படும் இணையதள சேவைக்கான குறிகாட்டியில் 9வது இடத்திலும் மின்னணு-அரசுச் சேவையில் 15வது இடத்திலும் உள்ளது.
- ❖ இந்தியா மின்னணு-அரசுச் சேவை குறிகாட்டியில் 15வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ இந்தியா இணையதளப் பாதுகாப்பில் மிக மோசமாக செயல்பட்டுள்ளது. இந்தியா இதில் 57வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ இந்தியா தரமான இணையதளச் சேவையில் 78வது இடத்தில் உள்ளது. இந்தியா இதில் வங்கதேசம், நேபாளம், நைஜீரியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குப் பின்னால் உள்ளது.
- ❖ மின்னணுக் கட்டமைப்பில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்குப் பின்னால் 79வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

## உலக நாடாளுமன்றச் சபாநாயகர்கள் கருத்தரங்கு

- மக்களவை சபாநாயகரான ஓம் பிர்லா அவர்கள் 5வது உலக நாடாளுமன்றச் சபாநாயகர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.
- இந்தக் கருத்தரங்கானது ஐக்கிய நாடுகளின் ஆதரவுடன் ஆஸ்திரிய நாடாளுமன்றம் மற்றும் ஜெனீவாவில் உள்ள நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் ஆகியவற்றினால் நடத்தப்பட்டது.
- இதன் கருத்துரு : மக்கள் மற்றும் பூமிக்கான அமைதி மற்றும் நீடித்த வளர்ச்சியை வழங்கக் கூடிய மிகத் திறன்மிக்க பன்முகத் தன்மைக்கான நாடாளுமன்ற தலைமைத்துவம்.

## கொள்கை வடிவமைக்கும் குழுக்களின் வலையமைப்பிற்கான ஆசியான் – இந்தியா அமைப்பின் 6வது வட்ட மேசை மாநாடு

- கொள்கை வடிவமைக்கும் குழுக்களின் வலையமைப்பிற்கான ஆசியான் – இந்தியா அமைப்பின் 6வது வட்ட மேசை மாநாடானது காணொலி வழியாக நடத்தப்பட்டது.
- இந்த வட்ட மேசை மாநாட்டின் கருத்துரு, "ஆசியான்-இந்தியா; கோவிட் – 19 தொற்றிற்குப் பின்பான காலத்தில் பங்களிப்பை வலுப்படுத்துதல்" என்பதாகும்.
- இது கொள்கை வடிவமைக்கும் குழுக்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள், அறிஞர்கள், ஊடகம் மற்றும் வணிகப் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டுள்ளது.
- இது எதிர்கால ஒத்துழைப்பிற்கான வழிமுறைகள் குறித்து அரசிற்கு கொள்கை ரீதியிலான தரவுகளை அளிப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற 7வது ஆசியான் – இந்தியா மாநாட்டின் (தாய்லாந்தில் நடைபெற்ற) போது ஏற்படுத்தப் பட்டது.

## விநியோகச் சங்கிலி தாங்குந்தன்மை முன்னெடுப்பு

- விநியோகச் சங்கிலி தாங்குந்தன்மை முன்னெடுப்பானது முதன்முதலில் ஜப்பான் நாட்டினால் பரிந்துரைக்கப் பட்டது.
- இது சீனாவைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜப்பான் நாட்டுடன் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் இதில் இணைந்து கொள்ள இருக்கின்றன.
- இது சீனாவின் அரசியல் நடத்தை மற்றும் விநியோகச் சங்கிலிக்கு ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவை குறித்த நிறுவனங்களுக்கான ஒரு நேரடி எதிர் வினை ஆகும்.
- அதன் புவிசார் இட அமைப்பானது இந்தோ – பசிபிக் இராஜதந்திர உறவுகளுக்கான ஒரு முக்கோண அணுகுமுறையை மதிப்பிடுகின்றது.

## மாலியில் இராணுவக் கிளர்ச்சி

- சமீபத்தில் மாலியின் தலைநகரான பாமாகோவில் ஏற்பட்ட இராணுவக் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக அந்நாட்டு அதிபரான இப்ராகிம் பல்பக்கர் கெய்டா மற்றும் அந்நாட்டின் பிரதமர் போபோ சிபி ஆகியோர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டு அதிபர் பதவி விலகினார்.
- 1960 ஆம் ஆண்டில் விடுதலை அடைந்த மாலி தனது ஜனநாயக கொள்கைகளுக்காக மிகவும் மதிக்கப்பட்ட ஒரு நாடாகும்.

- 2012 ஆம் ஆண்டு அங்கு ஒரு இராணுவக் கிளர்ச்சி வெடித்தது. அது முதல் இந்த நாடானது இஸ்லாமியத் தீவிரவாதிகளுடனான வன்முறைச் செயல்பாடுகளினால் பாதிக்கப்பட்டு வந்தது..




## இயற்கையான இளம்பிள்ளை வாதத் தீநுண்மி அற்ற ஆப்பிரிக்கா

- ஆப்பிரிக்கவானது, சுதந்திரமான ஒரு அமைப்பான ஆப்பிரிக்கப் பிராந்திய சான்றிதழ் ஆணையத்தினால் இயற்கையான இளம்பிள்ளை வாதத் தீநுண்மி அற்ற ஒரு கண்டமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் இயற்கையான இளம்பிள்ளை வாதத் தீநுண்மி ஒழிக்கப்பட்டதற்குச் சான்றளிக்கும் பொறுப்பு ஆப்பிரிக்கப் பிராந்திய சான்றிதழ் ஆணையத்திற்கு உள்ளது.
- ஆப்பிரிக்காவின் கடைசி இயற்கையான இளம்பிள்ளை வாதத் தீநுண்மியினால் ஏற்பட்ட பாதிப்பானது 2016 ஆம் ஆண்டில் நைஜீரியாவின் வடகிழக்கில் போர்னோ மாநிலத்தில் கண்டறியப் பட்டது.
- இளம்பிள்ளை வாதத் தீநுண்மியானது தற்போது ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் மட்டுமே காணப்படுகிறது.
- இந்தியாவானது 2014 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக இளம்பிள்ளை வாதம் அற்ற ஒரு நாடாக அறிவிக்கப் பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## எதிர்கால நிறுவன அடையாளக் குறியீடு 2020

- எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனமான ரிலையன்ஸ் தொழிற் துறை நிறுவனமானது இரண்டாவது மிகப்பெரிய ஒரு அடையாள நிறுவனமாக தரப்படுத்தப்பட்டுள்ளது.
- எதிர்கால நிறுவன அடையாளக் குறியீடு என்பது நிறுவனத்தின் செயல்பாட்டு ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு உலகளாவியக் கண்ணோட்ட ஆணை ஆய்வாகும். இது சந்தை மூலதனத்தில் அடிப்படையில் பி.டபில்யூ.சியின் முதல் 100 உலகளாவிய நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தும்.
- இதர நிறுவனங்கள்

- ஆப்பிள் – 1வது இடம்
- சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் – 3வது இடம்
- டாடா – 65வது இடம்

## புத்தாக்க மையம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது நிதியியல் உள்ளடக்கத்தை வலுப்படுத்துவதற்காக செயல்படும் திறன் கொண்ட புதிய திறன்களின் எண்ணம் மற்றும் உருவாக்கத்திற்கான "புத்தாக்க மையத்தை" தொடங்கியுள்ளது.
- இந்த மையமானது நாட்டில் ஸ்டார்ட் அப்களை ஊக்கப்படுத்துவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த மையமானது சாத்தியமான மற்றும் புத்தாக்க நிதியியல் கூறுகளை உருவாக்குவதற்கான மையமாகச் செயல்பட இருக்கின்றது.
- சமீபத்திய முன்னெடுப்புகளில் ஒன்று "ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸ்" (Regulatory Sandbox) என்பதாகும்.
- ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸ் என்பது கட்டுப்படுத்தப்பட்ட ஒரு ஒழுங்குமுறைச் சூழலில் புதிய பொருட்கள் மற்றும் சேவைகளின் நிகழ்நேர சோதனையைக் குறிக்கின்றது.

## பணச் செயல்பாட்டு ஒழுங்குமுறைகள் – 2016 ஆம் ஆண்டு திருத்தம்

- இந்தியாவின் நொடித்தல் வாரியமானது இந்தியாவின் திவால் மற்றும் நொடித்தல் வாரிய (பணச் செயல்பாடுகள்) ஒழுங்குமுறைகள், 2016 என்ற விதிமுறைகளைத் திருத்தியுள்ளது.
- இது இந்தியாவின் திவால் மற்றும் நொடித்தல் வாரியம் (பணச் செயல்பாடுகள்) (3வது திருத்தம்) ஒழுங்குமுறைகள், 2020ன் மூலம் திருத்தப்பட்டுள்ளது.

## ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கை

- 2020-21 ஆம் ஆண்டின் 7வது இரு மாதத்திற்கொரு முறையிலான நாணயக் கொள்கையில், இந்திய ரிசர்வ் வங்கியானது "குறைந்த வட்டிவிகிதங்கள்" நிலைப்பாட்டை ("accommodative" stance) தக்க வைத்துக் கொள்ளவும், ரெப்போ கொள்கை விகிதத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் அதனை 4% ஆக வைத்திருக்கவும் முடிவு செய்துள்ளது.
- இந்தியப் பொருளாதாரத்தில் கோவிட்-19 தொற்றின் தாக்கத்தைக் குறைக்கவும், பொருளாதார வளர்ச்சியைப் புதுப்பிக்கவும் இந்த முடிவானது எடுக்கப்பட்டுள்ளது.
- இதன் விளைவாக ரிசர்வ் வங்கியானது, நேர்மாற்று மறுகொள்முதல் விகிதத்தை (Reverse repo rate) மாற்றமேதுமில்லாமல் ரொக்கத் தகவமைப்பு வசதியின் (Liquidity adjustment facility) 3.35 சதவீதத்திலும், விளிம்பு நிலை வசதி வீதத்தையும் (Marginal standing facility), வங்கி வீதத்தையும் 4.25 சதவீதமாகவும் வைத்திருக்க முடிவு செய்துள்ளது.
- முதல் காலாண்டிற்கான ரிசர்வ் வங்கியின் வணிக மதிப்பீட்டுக் குறியீடானது, கணக்கெடுப்பு வரலாற்றில் மிகக் குறைந்த புள்ளியைக் கண்டுள்ளது.

## நுகர்வோர் நம்பிக்கை ஆய்வு

- ❖ சமீபத்தில் இந்திய ரிசர்வ் வங்கியானது தனது நுகர்வோர் நம்பிக்கை ஆய்வு அறிக்கை என்ற ஒன்றை வெளியிட்டுள்ளது.
- ❖ இது நுகர்வோர்களின் நிதியியல் நிலைமை தொடர்பாக நுகர்வோர்கள் எவ்வாறு நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதைக் கணக்கிடுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ தற்போதையக் குறியீடானது 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 53.8 ஆக உள்ளது. இது மே மாதத்தில் 63.7 ஆக இருந்தது.

## பாதிப்புகளுக்குள்ளான சொத்துகளுக்கான KV காமத் குழு

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது KV காமத் என்பவரின் தலைமையின் கீழ் 5 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ❖ இது கோவிட் – 19 நோய்த் தொற்றால் தாக்கம் பெற்ற அமைப்புசார் கடன்களாகக் கருதப்படும் நிதியியல் கூறுகள் குறித்து தனது பரிந்துரைகளை வழங்க உள்ளது.
- ❖ அடிப்படையில் இந்தக் குழுவானது கோவிட் – 19 நோய்த் தொற்று தொடர்பான பாதிப்புகளுக்குள்ளான சொத்துகளின் தீர்வுகளுக்கு உதவுவதற்காக வேண்டி முக்கிய குறிகாட்டிகளைப் பரிந்துரைக்க உள்ளது.

## முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்கலின் கீழ் ஸ்டார்ட் அப் துறை

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI - Reserve Bank of India) இந்தியாவின் ஸ்டார்ட் அப் துறைக்கு முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்கல் (PSL - Priority sector lending) அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.
- ❖ இது ஸ்டார்ட் அப்களுக்கு கடன் வழங்குவதற்காக வேண்டி அதிக நிதியை ஏற்படுத்த உள்ளது.
- ❖ இந்திய அரசு மற்றும் RBI ஆகியவை நாட்டின் அடிப்படைத் தேவைகளின் வளர்ச்சிக்கு முக்கியமான துறைகள் என்று கருதப்படும் துறைகளுக்கு மற்ற துறைகளை விட அதிக முன்னுரிமை அளிக்கும் என்பதை இது குறிக்கின்றது.
- ❖ பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்கான PSL விதிகளுக்காக வெளியிடப்பட்ட RBI வழிகாட்டுதல்களின்படி, 40% மொத்த நிகர வங்கிக் கடனானது முன்னுரிமைத் துறைக்கு வழங்கப் பட வேண்டும்.


REVISED RULES

Priority sectors
- Agriculture
- MSMEs
- Export Credit
- Education
- Housing
- Social Infrastructure
- Renewable Energy

Banks have to offer 18% of priority loans to agriculture, of which 8% has been fixed for small & marginal farmers

## விவசாய உள்கட்டமைப்பு நிதி

- வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்தின் கீழ் 1 லட்சம் கோடி ரூபாய் நிதி வசதியைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இது வேளாண் தொடக்க நிறுவனங்கள், தொழில்முனைவோர், உழவர் குழுக்கள், தொழில்நுட்ப வீரர்கள் முதலியோருக்கு அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் வேளாண் சொத்துக்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும்.
- 2020 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில், மத்திய அமைச்சரவையானது ரூ. 20 லட்சம் கோடி ஊக்கத் தொகுப்பின் ஒரு பகுதியாக இந்த வேளாண் உள்கட்டமைப்பு நிதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## உபரி நிதி அரசிற்கு மாற்றம்




- இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியமானது ரூ.57,128 கோடி உபரி நிதி அல்லது ஈவுத் தொகையை 2019-20 ஆம் ஆண்டில் மத்திய அரசிற்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- இது கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 1.76 இலட்சம் என்பதிலிருந்து குறைந்து 67.5 சதவீதமாக உள்ளது.
- கடந்த ஆண்டில் RBIயின் மத்திய வாரியமானது RBIயின் முன்னாள் ஆளுநரான பிமல் ஜலான் என்பவரின் தலைமையிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது.
- இந்தக் குழுவானது RBIயின் உபரி நிதி இருப்பு மற்றும் அதன் பகுதியை அரசிற்கு அளிப்பது குறித்துப் பரிந்துரைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

## சௌரியா KGC அட்டை

- எச்டிஎப்சி வங்கியானது டிஜிட்டல் முறையில் இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது "சௌரியா KGC (கிசான் தங்கக் கடன்) அட்டையை" அறிமுகப் படுத்தி உள்ளது.



- இது இந்திய தரைப்படை இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை, துணை இராணுவப் படை வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்ப நலன்களுக்காக வேண்டி அறிமுகப்படுத்தப் பட்டுள்ள மூவர்ணம் கொண்ட ஓர் அட்டையாகும்.
- இந்த அமைப்பானது இந்திய அரசினால் வெளியிடப்பட்ட கிசான் கடன் அட்டை வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

## 2020-2025ற்கான நிதியியல் கல்விக்கான தேசிய உத்தி

- இந்திய ரிசர்வ் வங்கியானது அடுத்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட இருக்கும் நிதியியல் கல்விக்கான தேசிய உத்தியை வெளியிட்டுள்ளது.
- இந்த பல்துறைசார் அணுகுமுறையானது நிதியியல் விழிப்புணர்வு சார்ந்த மற்றும் அதிகாரமிக்க இந்தியாவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இரண்டாவது NSFE (National strategy for financial education) ஆகும். முதலாவது NSFE ஆனது 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- இது பின்வரும் 4 நிதியியல் துறை ஒழுங்குமுறைகளின் ஆலோசனையின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளது.
    - இந்திய ரிசர்வ் வங்கி
    - இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்
    - இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம்
    - ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம்

## பசுமை வைப்புநிதித் திட்டம்

- பசுமை வைப்புநிதித் திட்டமானது பெருநிறுவனப் பயனாளிகளுக்காக எச்எஸ்பிசி இந்தியா நிறுவனத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், வங்கியானது பசுமை முன்னெடுப்புகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டங்கள் ஆகியவற்றுக்கு நிதியளிப்பதற்காக இந்த வைப்பு நிதித் தொகைகளைப் பயன்படுத்தும்.
- இந்தத் திட்டமானது குறைவான கரிமம், காலநிலையைத் தாங்கக்கூடிய மற்றும் நீடித்தப் பொருளாதாரத்திற்கு மாற ஊக்கப்படுத்தும் தகுதியுள்ள வணிகம் மற்றும் அது தொடர்பான திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும்.

## ரமேஷ் சந்த் பணிக் குழு

- நிதி ஆயோக்கினால் அமைக்கப்பட்ட ரமேஷ் சந்த் பணிக்குழுவானது கரும்பு விலைகளை சர்க்கரை விலையுடன் இணைக்கப் பரிந்துரைத்துள்ளது.
- இந்தப் பணிக் குழுவானது இந்தத் தொழிற்துறையை நல்ல நிதியியல் வளத்துடன் வைத்திருக்க வேண்டியது அவசியம் என்று கூறுகின்றது.
- இந்த பணிக்குழுவானது தனது அறிக்கையில், குறைந்தபட்ச சர்க்கரை விலையில், ஒரு முறை அதிகரிப்பு செய்வதற்கு வேண்டி அதாவது 1கிலோவிற்கு ரூ.33 என்ற அளவிற்கு அதிகரிப்பதற்குப் பரிந்துரை செய்துள்ளது.
- பணிக்குழுவின் இந்த அறிக்கையானது, 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இறுதி செய்யப்பட்டு, ஆகஸ்ட் மாதம் 20 ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செவ்வாய் பெர்சிவரென்ஸ் ரோவர் (ஆய்வு வாகனம்) 2020

- நாசா அமைப்பானது செவ்வாய் பெர்சிவரென்ஸ் ரோவர் (ஆய்வு வாகனம்) 2020 என்று பெயரிடப்பட்ட செவ்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.
- செவ்வாய் ரோவரானது 2021 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ரோவரானது அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கேப் கேன்வரல் விமானப் படைத் தளத்திலிருந்து அட்லஸ் V-541 என்ற ஏவு வாகனத்தினால் செலுத்தப் பட்டது.
- செவ்வாய் பெர்சிவரென்ஸ் ரோவர் ஆனது "இன்ஜெநியுட்டி" என்ற பெயரிடப்பட்ட முதலாவது கிரகங்களுக்கிடையிலான ஒரு வானூர்தியை நிலைநிறுத்தும் ஒரு இயந்திர மனிதனைக் கொண்டுள்ளது.



## சுரக்சா

- அறிவியல்சார் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றமானது அமெசிஸ் இந்தியா என்ற நிறுவனத்துடன் இணைந்து "சுரக்சா" என்ற நுண்ணுயிரித் தூய்மையாக்கல் பெட்டியை மேம்படுத்தியுள்ளது.
- இந்தப் பெட்டியானது வெப்பம் மற்றும் யுவிசி ஒளியைப் பயன்படுத்தி 10-15 நிமிடத்திற்குள் ஒரு பொருளைத் தூய்மையாக்கும் திறன் கொண்டது.

## சர்வதேச வெப்பாற்றல் சோதனை உலை (ITER/ International Thermonuclear Experimental Reactor)

- சர்வதேச வெப்பாற்றல் சோதனை உலையானது தனது 1 ஆண்டு கால கூடுகை நிலைக்குள் நுழைந்துள்ளது.
- இது ஒரு மிகப்பெரிய சர்வதேச அணுக் கரு இணைவு ஆராய்ச்சி மற்றும் பொறியியல்சார் திட்டமாகும்.
- இது உலகின் மிகப்பெரிய காந்த வரையறை கொண்ட பிளாஸ்மா இயற்பியல் சோதனையாக இருக்கும்.
- இது ஒரு சோதனை ரீதியிலான டோகாமாக் (tokamak) என்ற ஒரு அணுக்கரு இணைவு உலையாகும். இது தெற்கு பிரான்சில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இது அமைதிப் பயன்பாடுகளுக்காக வேண்டி அணுக்கரு இணைவின் அறிவியல்சார் மற்றும் தொழில்நுட்பச் செயலாக்க முறையை மேற்கொள்ள இருக்கின்றது.

- இது தூய்மையான, குறைந்த செலவு கொண்ட மற்றும் அதிக அளவிலான ஆற்றலை உற்பத்தி செய்யும் முதலாவது இணைவு சாதனமாக இருக்கும்.
- இந்தத் திட்டமானது ஐரோப்பிய ஒன்றியம், சீனா, இந்தியா, ஜப்பான், ரஷ்யா, தென் கொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய 7 உறுப்பு நாடுகளில் நிதியளிக்கப்பட்டு நிர்வகிக்கப் படுகின்றது.
- அணுக்கரு இணைவானது சூரியன் மற்றும் நட்சத்திரங்களின் ஆற்றல் மூலமாக விளங்குகின்றது.

## ஆதித்யா படகு

- இது முதலாவது "கெசியஸ்" (Gussies) மின்சாரப் படகு விருதினை வென்றுள்ளது.




- இது படகு மற்றும் படகோட்டுதலில் சிறப்புமிகு கஸ்டேவ் ட்ரோவ் விருது என்று அதிகாரப் பூர்வமாக அழைக்கப்படுகின்றது.
- இது சூரிய ஒளி ஆற்றலால் இயங்கும் இந்தியாவின் முதலாவது மற்றும் மிகப்பெரிய படகாகும்.
- இது கேரள மாநில நீர்ப்போக்குவரத்துத் துறையின் கீழ் செயல்படுகின்றது.

## AJO – Neo

- இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் கொல்கத்தாவில் உள்ள சத்தியேந்திரநாத் போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையமானது "AJO – NRO" என்ற பெயர் கொண்ட ஒரு சாதனத்தை மேம்படுத்தியுள்ளது.
- இது புதிதாகப் பிறந்த குழந்தைகளில் (பச்சிளம் குழந்தை) "தொடுதல் அற்ற மற்றும் வலியற்ற" ஊடுருவல் அல்லாத பிலிரூபின் நிலை சோதனையாகும்.



## பெய்டோ

- பெய்டோ அமைப்பு தற்பொழுது முழுவதும் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக சீனா கூறியுள்ளது.
- இது அமெரிக்காவின் புவியிடங்காட்டி, ரஷ்யாவின் குளோனாஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கலிலியோ ஆகியவற்றை உள்ளடக்கிய விண்வெளியை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளை அளிக்கும் புகழ்பெற்ற குழுவில் இணைகின்றது.
- இந்தியாவினுடையது "இந்தியத் திரள்களுடன் கண்காணிப்பு (NaVIC/Navigation with Indian Constellation)" என்று அழைக்கப் படுகின்றது.
- இந்தியா தனது சொந்தக் கண்காணிப்பு அமைப்பான இந்தியப் பிராந்தியக் கண்காணிப்பு செயற்கைக்கோள் அமைப்பை (IRNSS - Indian Regional Navigation Satellite System) மேம்படுத்திக் கொண்டிருக்கின்றது.
- IRNSS என்பது இந்தியாவினால் மேம்படுத்தப்பட்டு வரும் தன்னாட்சி பெற்ற பிராந்தியக் கண்காணிப்பு செயற்கைக்கோள் அமைப்பாகும்.
- இது இந்தியாவில் உள்ள பயனாளர்களுக்கும் அதன் எல்லையிலிருந்து 1500 கிலோ மீட்டர் வரையுள்ள பயனாளர்களுக்கும் துல்லியமான இருப்பிடம் குறித்த தகவல் சேவையை அளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## நாசா விண்வெளி வீரர்கள்

- பாப் பென்கென் மற்றும் டவுக் ஹர்லே ஆகிய இரண்டு அமெரிக்க விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து 21 மணி நேர பயணத்தைத் தொடர்ந்து பூமிக்கு வெற்றிகரமாகத் திரும்பியுள்ளனர்.
- இந்த விண்வெளி வீரர்கள் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விமான நிலையத்திலிருந்து எலோன் மஸ்கின் நிறுவனமான ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து நாசாவினால் விண்ணிற்குச் செலுத்தப் பட்டனர்.
- இந்த வெற்றிகரமான தரையிறக்கத்தின் மூலம் எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது இந்த வெற்றியைப் பெற்ற முதலாவது தனியார் நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

## மஞ்சள் காய்ச்சல்

- மஞ்சள் காய்ச்சல் ஆனது ஏடிஸ் எஜிப்தி கொசுக்களின் மூலம் பரவக் கூடிய வைரஸின் மூலம் ஏற்படும் ஒரு காய்ச்சலாகும்.
- ஒரு புதிய ஆய்வின்படி, இந்த நோயானது 2050 ஆம் ஆண்டிற்குள் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து மத்திய மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு மாறும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இது துணை நிலை சகாரா ஆப்பிரிக்கப் பகுதியில் 34 நாடுகளில் பரவிக் காணப் படுகின்றது.

## ஹம்மர் ஏவுகணைகள்

- ரபேல் போர் விமானத்திற்காக இந்தியாவிற்கு "ஹம்மர் ஏவுகணைகளை" வழங்க பிரான்சு முடிவு செய்துள்ளது.
- ஹம்மர் (Hammer – விரிவுபடுத்தப்பட்ட வரம்புடன் அதிகத் திறன் கொண்ட கூறுநிலை

ஏவுகணை) என்பது நடுத்தர வரம்பு கொண்ட வானிலிருந்து நிலத்தில் இருக்கும் இலக்கை நோக்கித் தாக்கும் ஏவுகணையாகும். இது ஏறத்தாழ 60-70 கிலோ மீட்டர் தொலைவில் எந்தவொரு இலக்கையும் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.

- இது போர்த் தளவாட வான்வெளி-சோல் கூறுநிலை ஏவுகணை வகுப்பைச் சேர்ந்தது ஆகும். அதாவது இது வானிலிருந்து நிலத்தில் இருக்கும் இலக்கைத் தாக்கும் ஒரு வகையிலான கூறுநிலை ஆயுதமாகும்.
- இந்த ஆயுதம் கூறுநிலை தன்மை கொண்டதாகும். ஏனெனில் இது பல்வேறு வகையான வழிகாட்டு அலகுகள் மற்றும் பல்வேறு வகையான வெடிகுண்டுகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் திறன் கொண்டதாகும்.

## தொலைதூரத்திலிருந்த முறையிலான நோயாளிக் கண்காணிப்புத் தீர்வு

- ஐஐடி மதராஸ் மற்றும் பார்ட்னர் ஹெல்த்கேர் என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம் ஆகியவை கோவிட்-19 நோய்த் தொற்றிற்காக தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது தொலைதூரத்திலிருந்த முறையிலான நோயாளிக் கண்காணிப்பு அமைப்பை மேம்படுத்தியுள்ளன.
- இந்த உபகரணமானது தற்சார்பாக உள்ளதாகவும், எடுத்துக் செல்லக் கூடியதாகவும் கம்பி இணைப்பு அற்றதாகவும் உள்ளது. இதனை நோயாளியின் விரலில் எளிதில் பொருந்த முடியும்.
- இந்தச் சாதனமானது மருத்துவர்கள், செவிலியர்கள் போன்ற சுகாதாரப் பணியாளர்கள் நோயாளியுடன் இருக்கும் நெருக்கமான தொடர்பைக் குறைப்பதையும் தனிநபர் பாதுகாப்புச் சாதனங்கள் என்ற பிபிஇ உபகரணங்களை சேமிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## மினிட்மேன் II ஏவுகணை

- அமெரிக்க விமானப் படையானது கண்டம் விட்டு கண்டம் பாயும் (ICBM - Intercontinental ballistic missile) LGM-30G மினிட்மேன் III ஏவுகணையின் சோதனை முயற்சியை நடத்தியது.
- இது 3 ஆயுதமற்ற மற்றும் திரும்பி வரக்கூடிய வாகனங்களை எடுத்துச் சென்றது.
- இது ஒற்றை அல்லது பல்வேறு அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லும் திறனுடன் நீண்ட வரம்பு கொண்ட, திட எரிபொருளைக் கொண்ட, 3 நிலை கொண்ட ICBM ஏவுகணையாகும்.




## அம்மோனியம் நைட்ரேட்

- ❖ அம்மோனியம் நைட்ரேட் ஒரு வெள்ளை நிறமுடைய, படிக இயல்புடைய வேதிப் பொருளாகும். இது தண்ணீரில் கரையக் கூடியது.
- ❖ இது வணிக ரீதியிலான வெடிபொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய மூலப்பொருளாகும்.
- ❖ ஐ.நா.வின் ஆபத்தானப் பொருட்களின் வகைப்பாட்டின் கீழ், அம்மோனியம் நைட்ரேட் ஆனது ஒரு ஆக்ஸிஜனேற்றியாக வகைப்படுத்தப் பட்டு இருக்கிறது.
- ❖ இருப்பினும், பிற பொருளுடன் கலக்கும் போது இதை வெடிபொருளாகப் பயன்படுத்தலாம்.
- ❖ உலகில் பயங்கரவாதிகள் பயன்படுத்தும் மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் சாதனங்களில் அம்மோனியம் நைட்ரேட் எரிபொருள் எண்ணெயானது பயன்படுத்தப் படுகின்றது.

## செயற்கைப் பொருள் தொடர்

- ❖ ஐஐடி-குவஹாத்தி மற்றும் இம்பீரியல் கல்லூரி இலண்டன் ஆகியவை இணைந்து "செயற்கைத் தொடர்" அல்லது "செயற்கைப் பொருள் தொடர்" என்ற நானோ வகைப் பொருட்களை உருவாக்கியுள்ளன.
- ❖ இந்தத் தொடரானது ஒளி உமிழும் இருமுனையத்தைப் பிரகாசமாக, ஆற்றல் திறனுள்ளதாக மற்றும் நீடித்த காலத்திற்குச் செயல்படும் தன்மை கொண்டதாக மாற்றுகின்றது.
- ❖ செயற்கைத் தொடர் என்பது செயற்கைப் பொருட்களாக செயல்படும் குறிப்பிட்ட அமைப்பு கொண்ட ஒரு வரிசையாகும். இது மிகச்சிறந்த ஒளியியல் பண்புகளை வெளிப்படுத்தும் திறன் கொண்டது.

## முதலாவது பதிவு செய்யப்பட்ட கோவிட் – 19 தடுப்பு மருந்து

- ❖ ரஷ்யாவானது தனது முதலாவது கோவிட் – 19 தடுப்பு மருந்தை வெளிநாட்டுச் சந்தைகளுக்காக "ஸ்புட்னிக் V" என்று பெயரிட்டுள்ளது.

- இந்தப் பெயரானது உலகின் முதலாவது செயற்கைக்கோளினைக் குறிக்கின்றது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றிற்காக ஒரு தடுப்பு மருந்தைப் பதிவு செய்த முதலாவது நாடு ரஷ்யா ஆகும்.

## சூரிய ஒளிவட்டக் காந்தப் புலம்

- முதன்முறையாக, சர்வதேச சூரிய ஒளிசக்தி இயற்பியலாளர் குழுவானது சமீபத்தில் சூரிய ஒளிவட்டத்தின் உலகளாவிய காந்தப் புலத்தை அளவிட்டுள்ளது.
- சூரிய ஒளிவட்டம் என்பது சூரிய வளிமண்டலத்தின் வெளிப்புற அடுக்கைக் குறிக்கின்றது.
- தற்பொழுது வரை, சூரியக் காந்தப் புலத்தின் வழக்கமான அளவீடானது போட்டேஸ்பியரின் மேற்பரப்பில் மட்டுமே மேற்கொள்ளப் பட்டுள்ளது.


Coronal magnetic field lines obtained from the PFSS model

## சிறுத்தைப் புலி திட்டம்

- இந்திய ஆயுதப் படையானது சிறுத்தைப் புலி திட்டத்தைப் புதுப்பிக்க முடிவு செய்து உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், தற்சமயம் ராணுவச் சேவையில் உள்ள ஹெரான் எனப்படும் 90 ஆளில்லா குட்டி விமானங்களானவை லேசரினால் வழி நடத்தப்படும் குண்டுகள்; வானிலிருந்துச் செலுத்தப்படும் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணைகள், வானிலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணைகள் ஆகியவற்றுடன் மேம்படுத்தப்பட உள்ளன.
- இந்த மேம்படுத்துதலானது பூமியில் உள்ள ஆயுதப் படை நிலையங்கள் தொலை தூரத்திலிருந்து ஆளில்லா குட்டி விமானங்களை இயக்கவும் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்பின் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தவும் உதவ இருக்கின்றது.

## ஸ்பேஸ்எக்ஸின் எஸ்என்5 ஸ்டார்ஷிப் முன்மாதிரி

- இது ஸ்பேஸ்எக்ஸின் செவ்வாய்க் கிரக பயணத்திற்கான ஆளில்லா விண்கலத்தின் ஒரு முன்மாதிரியாகும்.
- இது ஸ்டார்ஷிப் என்ற விண்கலத்தின் ஒரு பகுதி ஆ\கும்.

- இந்த முன்மாதிரி விண்கலமானது தனது முதலாவது பயணச் சோதனையை சமீபத்தில் நிறைவு செய்தது.
- இது பூமியின் சுற்றுவட்டப் பாதை, நிலவு மற்றும் செவ்வாய் ஆகியவற்றிற்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் மற்றும் சரக்குகளுக்கான மீண்டும் பயன்படுத்தக் கூடிய போக்குவரத்து அமைப்பாக செயல்படவுள்ளது.
- ஸ்பேஸ்எக்ஸ் ஆனது ஸ்டார்ஷிப்பை "உலகின் மிகவும் வலிமையான ஏவு வாகனம்" என்று குறிப்பிடுகின்றது.



## மேல் (உயர்) நிலை ராக்கெட் என்ஜினின் சோதனை ஓட்டம்

- இந்தியாவைச் சேர்ந்த விண்வெளி ஸ்டார்ட் அப் நிறுவனமான ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் ஆனது "ராமன்" என்ற மேல் நிலை ராக்கெட் என்ஜினை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்துள்ளது.
- இது நோபல் பரிசை வென்றவரான சர் சி.வி. ராமன் என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்ட, இந்தியாவின் முதலாவது 100% முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட முன்னோக்கிச் செல்லும் நிலையிலான இருநிலை கொண்ட திரவ ராக்கெட் என்ஜின் செலுத்தியாகும் (3D printed bi-propellant liquid rocket engine injector).
- இந்தியாவில் மேம்படுத்தப்பட்ட ராக்கெட் என்ஜினை சோதனை செய்யும் இந்தியாவின் முதலாவது தனியார் விண்வெளி நிறுவனம் இதுவாகும்.
- ராமன் என்பது குறைந்த எண்ணிக்கையிலான இயங்கும் பாகங்களைக் கொண்ட ஒரு இலகுரக முப்பரிமாண அச்சிடப்பட்ட ராக்கெட் என்ஜினாகும்.
- இது 250 முதல் 700 கிலோ கிராம் எடையுள்ள செயற்கைக் கோளைக் குறைந்த (தாழ்) சுற்று வட்டப் பாதையில் நிலை நிறுத்தும் திறன் கொண்டது.

## சூரியக் கரும்புள்ளிக் கூட்டம் - AR2770

- AR2770 என்ற மிகப்பெரிய சூரியக் கரும்புள்ளிக் கூட்டமானது சமீபத்தில் நாசாவின் சோலார் டைனமிக்ஸ் வானியல் ஆய்வகத்திலிருந்து (NASA's Solar Dynamics Observatory) சூரியனின் மேற்பரப்பின் மீது எடுக்கப்பட்ட படங்களின் மூலம் காணப் பட்டது.
- சூரியக் கரும்புள்ளி என்பது சூரியனின் ஒரு பகுதியாகும். இது அதன் மேற்பரப்பில் கருமை நிறத்தோடும் மற்றும் தன்னைச் சுற்றியுள்ள ஏனைய பகுதிகளை விட சற்றே குளிர்ந்த படியும் இருக்கிறது.

- மேலும், இந்தப் பகுதியில், சூரியனின் காந்தப் புலமானது பூமியின் காந்தப்புலத்தை விட சுமார் 2,500 மடங்கு அதிகம்.
- 50,000 கி.மீ விட்டம் கொண்ட இந்தப் புள்ளிகளில் சில, சூரியனின் காந்தப்புலத்தைப் புலப்படுத்தும் குறிப்பான்கள் ஆகும்.



## ஏரோ-2 உந்துவிசை ஏவுகணை இடைமறி அமைப்பு

- இஸ்ரேல் ஆனது தனது மேம்பட்ட ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பாக உள்ள ஏரோ - 2 என்ற உந்துவிசை ஏவுகணை இடைமறி அமைப்பை (Arrow - 2 Ballistic Missile Interceptor) வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.
- அமெரிக்காவின் ஆதரவுடன் கட்டப்பட்ட இது பல்வேறு சரமாரியான ஏவுகணைத் தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட, உயர்மட்ட ஒருங்கிணைந்த இஸ்ரேலிய கேடயமாகச் செயல்படுகிறது.
- ஏரோ 2 ஆனது குறுகிய மற்றும் இடைப்பட்ட ஏவுகணைகளையும் நீண்ட எல்லையைக் கடக்கக் கூடிய ஏவுகணைகளையும் இடைமறிக்கும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

## TESS இன் முதன்மைப் பணி

- TESS (Transiting Exoplanet Survey Satellite) எனும் புறக்கோள்களின் விவரம் சேகரிக்கும் செயற்கைக் கோளானது தனது இரண்டு ஆண்டுக் கணக்கெடுப்பின் போது 75% விண்மீன்கள் நிறைந்த வானத்தைப் புகைப்படப் பதிவு செய்யும் முதன்மைப் பணியை முடித்து 66 புதிய புறக்கோள்களையும் கண்டறிந்துள்ளது.
- நட்சத்திரங்களைச் சுற்றி வரும் கிரகங்களால் ஏற்படும் பிரகாச குறைபாட்டைக் கொண்டு நட்சத்திரங்களைக் கண்காணிக்க TESS ஆனது ட்ரான்சிட் (Transit) என்ற ஒரு முறையைப் பயன்படுத்துகிறது.
- TESS எனும் புறக்கோள் கண்டறியும் விண்வெளி தொலைநோக்கியானது 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் பூமியின் சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டது.

## ஹீலியத்தினால் மேம்படுத்தப்பட்ட நட்சத்திரம்

- இந்திய ஆராய்ச்சியாளர் "ஒமேகா சென்சூரி" என்ற ஒரு உருண்டையான தொகுப்பு கொண்ட வளமான உலோக மாதிரிகளிடையே ஹீலியத்தினால் (He) மேம்படுத்தப்பட்ட ஒரு பிரகாசமான நட்சத்திரத்தைக் கண்டறிந்துள்ளார்.
- ஒமேகா சென்சூரியில் ஹீலியம் மிகுதியாக உள்ளதைக் கண்டுபிடிக்க ஏற்படுத்தப்பட்ட முதலாவது நிறமாலையியல் கண்டுபிடிப்பு இதுவாகும்.
- இந்த ஆய்வானது He மேம்படுத்தப்பட்ட எண்ணிக்கையின் உருவாக்கத்திற்கான ஒரு முக்கிய ஆதாரமாகக் கருதப்படுகின்றது.

## UVGI அடிப்படையிலான அறை நோய்க் கிருமி நீக்கச் சாதனம்

- ஐஐடி – ரோப்பர் ஆனது குறிப்பிடத்தக்க புறஊதாக் கிருமி நாசினி கதிர்வீச்சு அடிப்படையிலான "UNSAFE" என்ற சிறப்பு வாய்ந்த ஒரு அறை நோய்க் கிருமி நீக்க சாதனத்தை உருவாக்கியுள்ளது.
- இந்த சாதனத்தின் மடிக்கக் கூடிய இறக்கைகளானது தொடர்ந்து பயன்படுத்தப்படும் மேற்பரப்பின் மீது 360 டிகிரி கோணத்தில் நோய்த் தொற்று நீக்கத்தை அளிக்கின்றது.
- தொலைதூரத்திலிருந்து கட்டுப்படுத்தப்படும் இந்தச் சாதனமானது செயல்பாட்டாளர் பாதுகாப்பான தூரத்தில் இருந்து இதனைச் செயல்படுத்த வழிவகை செய்கின்றது.



## ஆளில்லாக் குட்டி விமான எதிர்ப்பு அமைப்பு

- இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை அமைப்பின் ஆளில்லாக் குட்டி விமான எதிர்ப்பு அமைப்பானது ஆகஸ்ட் – 15 அன்று பிரதமரின் பாதுகாப்பிற்காகப் பணியில் ஈடுபடுத்தப் பட்டது.
- இந்த ஆளில்லாக் குட்டி விமான எதிர்ப்பு அமைப்பானது 3 கிலோ மீட்டர் வரை ஆளில்லா நுண் விமானங்களைக் கண்டறியும் திறன் கொண்டதாகும்.
- இது 1லிருந்து 1.25 கிலோ மீட்டர் வரை உள்ள இலக்கை வீழ்த்துவதற்கு லேசரைப் பயன்படுத்துகின்றது.
- இது ஆளில்லா விமான அச்சுறுத்தல்களைக் கண்டறியும் திறன் கொண்டது.
- ஆளில்லாக் குட்டி விமானங்கள் வெடி விபத்துகளை ஏற்படுத்துவதற்காக தீவிரவாதிகளால் தொலைதூரத்திலிருந்து கட்டுப்படுத்தப்படும் ஒரு வகை குட்டி விமானங்களாகும்.
- இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை அமைப்பு மேம்படுத்திய ஆளில்லாக் குட்டி விமான எதிர்ப்பு அமைப்பானது முதன்முறையாக பிரேசில் அதிபர் ஜெயிர் போல்ஸ்னரோ இந்தியா வந்த போது அவருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்டது.



## கோவிட் – 19 தொற்றைக் கண்டறிவதற்கான "SALIVA DIRECT" சோதனை

- அமெரிக்காவில் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பானது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கான நோய்க் கண்டறிதல் சோதனையான உமிழ்நீரை அடிப்படையாகக் கொண்ட ஒரு அவசர காலச் சோதனைக்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
- இது முடிவுகளை விரைவாக அளிக்கின்றது.
- இந்தச் சோதனை முறையானது "SALIVA DIRECT" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- "SALIVA DIRECT" சோதனை முறையானது "நாசி தொண்டையில் உள்ள உமிழ்நீரை எடுத்தல்" எனப்படும் ஒரு வழக்கமான முறையுடன் ஒப்பிடும்போது எளிமையானதாகவும் விலை குறைந்ததாகவும் உள்ளது.

## சீரஸ்: ஒரு பெருங்கடல் உலகம்

- வியாழனுக்கும் செவ்வாய்க் கிரகத்திற்கும் இடையிலான சிறுகோள் பட்டையில் உள்ள ஒரு மிகப்பெரிய சிறுகோளான சீரஸ் என்பது தனது உறைந்த பனிப் பரப்பின் கீழ் பெரியளவில் உப்பு நீரின் தேக்கத்தைக் கொண்டுள்ளதால் அதைப் 'பெருங்கடல் உலகம்' என்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.
- பூமிக்கு அப்பால் உள்ள பிற சூரிய மண்டலப் பொருட்களுள் தனது மேற்பரப்பின் கீழ் பெருங்கடல்களைக் கொண்டு இருப்பதாக தோன்றுபவை பின்வருமாறு
    - சனியின் சந்திரன் என்செலடஸ் (Enceladus),
    - வியாழனின் சந்திரன் யூரோபா (Europa),
    - புளூட்டோ எனும் குறுங்கோள் (Pluto) மற்றும்
    - நெப்டியூனின் சந்திரன் ட்ரைடன் (Triton) ஆகியவையாகும்.




## SPT0418-47 அண்டம்

- மேக்ஸ் பிளாங்க் வானியற்பியல் நிறுவனத்திலுள்ள வானியலாளர்கள் "SPT0418-47" எனப்படும் ஒரு குழந்தை அண்டத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இது 12 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில், பால்வழி அண்டத்தைப் போல தோற்றமளிக்கிறது.

- இது பால்வழி போன்ற சுழல் கைகளைக் கொண்டிருக்க வில்லை, ஆனால் ஒரு சுழலும் வட்டு மற்றும் பால்வீதியை ஒத்த ஒரு வீக்கம் (bulge) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- அந்த வானியலாளர்கள் குழுவானது அட்டகாமா பெரிய மில்லிமீட்டர் / துணை மில்லி மீட்டர் வரிசை (அல்மா) என்ற தொலைநோக்கி உடன் ஒளியை ஈர்ப்பு விசை வளைக்கும் என்ற கோட்பாட்டை (gravitational lensing concept) பயன்படுத்தியது.




## சந்திரனின் மேற்பரப்பில் செங்கற்களை உருவாக்கும் செயல்முறை

- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு மற்றும் இஸ்ரோ ஆகியன இணைந்து சந்திரனின் மேற்பரப்பில் "விண்வெளிச் செங்கற்கள்" எனப் பெயரிடப்பட்ட செங்கல் போன்ற கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான ஒரு நிலையான செயல்முறையை உருவாக்கியுள்ளன.
- இந்தச் செயற்முறையானது விண்வெளிச் செங்கல் தயாரிக்க சந்திரனின் மண், பாக்டீரியா மற்றும் கொத்தவரை (குவார் பீன்ஸ்) ஆகியவற்றைப் பயன்படுத்தியது.
- இந்தச் செயல்முறையானது சந்திரனின் மேற்பரப்பில் கட்டுமானத்திற்கான மூலப்பொருட்களாக மனிதச் சிறுநீரில் இருந்து யூரியாவைப் பயன்படுத்துகிறது. மேலும் இது சந்திரனின் மண்ணைப் பயன்படுத்துவதன் மூலம் அதற்கான ஒட்டு மொத்தச் செலவினங்களையும் குறைக்கிறது.



## சாராபாய் பள்ளம்

- நிலப்பரப்பு படவரைவு நிழற்படக் கருவி - 2 (டெர்ரெய்ன் மேப்பிங் கேமரா - 2) என்பதன் மூலம் சந்திரயான் - 2 ஆனது சந்திரனின் பள்ளங்களை படம் பிடித்துள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது, மேலும் அந்தப் பள்ளங்களில் ஒன்றை 'சாராபாய் பள்ளம்' என்றும் பெயரிட்டுள்ளது.
- டாக்டர் விக்ரம் அம்பாலால் சாராபாய் அவர்கள் இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தையாகக் கருதப் படுகிறார்.
- விக்ரம் அம்பாலால் சாராபாயின் 100வது பிறந்த தின ஆண்டானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதி அன்று அனுசரிக்கப் பட்டது.



## பெட்டல்ஜியூஸ் மற்றும் ஹப்பிள் தொலைநோக்கி

- 2019 ஆம் ஆண்டின் இறுதியில் தெற்கு அரைக்கோளத்தில் உள்ள ஒரு நட்சத்திரமான பெட்டல்ஜியூஸ் ஒளி மங்கி வருவதை புவியில் உள்ள பல்வேறு தொலைநோக்கிகள் கண்டறிந்து உள்ளன.
- இந்தத் திடீர் ஒளி மங்குதல் நிகழ்வானது ஆராய்ச்சியாளர்களை வியப்படையச் செய்துள்ளது. இவர்கள் இந்தத் திடீர் மாற்றத்தைக் கண்டறிவதற்காக பல்வேறு கோட்பாடுகளை மேம்படுத்தும் முயற்சியில் இறங்கினர்.
- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்த நட்சத்திரமானது வழக்கமாக நிலையில் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது.
- தற்பொழுது, ஹப்பிள் ஆய்வுகள் அந்த நட்சத்திரத்தின் ஒரு பகுதியை தூசி மேகங்கள் சுற்றியுள்ளதாகக் கூறுகின்றது,
- பெட்டல்ஜியூஸ் என்பது 725 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கும் ஒரு நட்சத்திரமாகும்.

## தெற்கு அட்லாண்டிக்கில் பள்ளம் (சீர்கேடு)

- நாசாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பூமியின் காந்த (ஈர்ப்பு) புலத்தில் சிறிய மற்றும் மாறிக் கொண்டிருக்கும் ஒரு பள்ளத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பள்ளமானது தென் அமெரிக்கா மற்றும் தெற்கு அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ளது.
- இது வழக்கத்திற்கு மாறான ஒரு வலுவற்ற பகுதியாகும். இது தென் அட்லாண்டிக் சீர்கேடு எனப்படுகின்றது.
- இது மின்னேற்றம் பெற்ற துகள்களை வழக்கத்திற்கு மாறாக பூமியின் மேற்பரப்பிற்கு அருகில் கொண்டு வரும்.

- இது உள்ளகக் கணினிகளுக்குப் பயன்படும். மேலும் இது செயற்கைக் கோளிலிருந்துப் பெறப்பட்ட தரவு சேகரிப்புடன் இடையீடு மேற்கொள்ளும் திறன் கொண்டது.

## பூமிக்கு நெருக்கமாக நெருங்கி வரும் குறுங்கோள்

- 3 முதல் 6 மீட்டர் நீளமுடைய ஒரு குறுங்கோளானது பூமிக்கு அருகில் உள்ள மற்ற குறுங்கோள்களை விட பூமிக்கு மிக அருகில் அதைத் தாக்காத வண்ணம் நெருங்கி வந்து சாதனை ஒன்றைப் படைத்து உள்ளது.
- கிடைத்துள்ள அறிக்கைகளின் படி, இது தென் இந்தியக் கடல் பகுதியின் மேலே 1830 மைல்கள் (2950 கிலோ மீட்டர்) தூரத்தைக் கடந்துள்ளது.
- இது "2020 QG" என்று அழைக்கப்படுகின்றது. இது பூமியைத் தாக்காமல் நெருங்கி வந்த ஒரு குறுங்கோளாக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.




## தனியார் துறையினால் உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது விண்வெளிக் கலன்கள்

- "பொருளாதார வெடி பொருட்கள் நிறுவனம்" (Economic Explosives Ltd) என்ற தனியார் துறை நிறுவனத்தினால் முழுமையாக உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது பினாகா வகை ராக்கெட்டுகள் பொக்ரானில் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டன.
- இந்த ராக்கெட்டுகள் டிஆர்டிஓ மற்றும் தனியார் துறை ஆகியவற்றிற்கிடையேயான ஒரு தொழில்நுட்பப் பரிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.
- பினாகா என்பது உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட பலவகை பீப்பாய் அளவுள்ள ராக்கெட் ஏவு அமைப்பாகும் (multi barrel rocket launcher system). இது இந்திய இராணுவத்திடம் ஏற்கெனவே பணிச் சேவையில் உள்ளது.

## ஈரானின் புதிய ஏவுகணைகள்

- ஈரான் நாடானது பின்வரும் உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் பாலிஸ்டிக் வகை (கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும்) ஏவுகணைகளை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - தியாகி குவாசிம் சுலைமானி – 1400 கிலோ மீட்டர் வரம்பு
  - தியாகி அபு மஹதி எனப்படும் புதிய கப்பல் வகை ஏவுகணை – 1000 கிலோ மீட்டர் வரம்பு

- நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் வகையிலான ஏவுகணையானது ஈரானின் மிகவும் வலிமை பெற்ற இராணுவத் தளபதியான குவாசிம் சுலைமானி என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- புதிய கப்பல் வகை ஏவுகணையானது ஈராக்கின் போர்ப் படைத் தளபதியான முஜாஹிதீன் அபு மஹதி-அல் முகந்தீஸ் என்பவரின் நினைவால் பெயரிடப் பட்டு உள்ளது.
- இவர்கள் இருவரும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஈராக்கில் உள்ள பாக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்காவினால் நிகழ்த்தப்பட்ட ஒரு ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப் பட்டுள்ளனர்.

### 95 புதிய குளிர்ச்சியான பழுப்பு நிற குள்ளக் கோள்கள்

- நாசாவினால் நிதியளிக்கப்பட்ட குடிமக்கள் ஆராய்ச்சித் திட்டமான "பேக்யார்டு வேர்ல்ட்ஸ் : கோள் 9" என்பதின் மூலம் ஒரு ஆராய்ச்சிக் குழுவானது நமது சூரியனுக்கு அருகில் புதிய குளிர்ச்சியான 95 பழுப்பு நிறக் குள்ளக் கோள்களைக் கண்டறிந்துள்ளது.
- இந்த குளிர்ந்த கோள்களானது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் உள்ள கோள்களின் உருவாக்கம் மற்றும் அதன் வளிமண்டலம் ஆகியவற்றிற்கான புதிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை அளிக்கின்றது.
- பழுப்பு நிற குள்ளக் கோள்கள் வழக்கத்திற்கு மாறான வானுலகப் பொருட்களாகும். இவை கோள்களை விட மிகப் பெரியதாகும். ஆனால் அவை நட்சத்திரங்களாகும் அளவிற்கு மிகப்பெரியதாக இல்லை.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### யமுனை நீரில் அம்மோனியா

- யமுனை ஆற்றில் அதிக அளவு அம்மோனியா (3 பிபிஎம்) சமீபத்தில் கண்டறியப் பட்டது.
- இந்தியத் தர நிர்ணயப் பணியகத்தின் படி, குடிநீரில் அம்மோனியாவின் ஏற்றுக் கொள்ளக் கூடிய அதிகபட்ச வரம்பு 0.5 பிபிஎம் (ppm/parts per million) ஆகும்.
- அம்மோனியா ஒரு நிறமற்ற வாயு ஆகும். இது உரங்கள், நெகிழி, செயற்கை இழைகள், சாயங்கள் மற்றும் பிற பொருட்களின் உற்பத்தியில் ஒரு தொழில்துறை இரசாயனமாக பயன்படுத்தப் படுகிறது.

### உறுதிபடுத்தப் பட்ட பாதுகாப்பு | புலிகளின் தரநிலைகள் [CA | TS]

- இது 2013 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு பாதுகாப்பு உத்தியாகும் ([CA | TS] - Conservation Assured | Tiger Standards).
- இந்த முயற்சிக்கு முதலில் தேர்ந்தெடுக்கப் பட்டது புலிகள் இனமாகும்.
- இது ஜாகுவார், சிங்கம் மற்றும் நன்னீர் டால்பின்கள் உள்ளிட்ட பிற இனங்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது.
- புலிகள் தன் இயற்கை வாழ்விடத்தில் காணப்படும் நாடுகளில் இதைச் செயல்படுத்த உலகளாவிய இயற்கை நிதியமானது உதவுகிறது.

- இந்தியாவின் தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையமானது நாட்டின் 50 புலிகள் பாதுகாப்புச் சரணாலயங்களிலும் இதை ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது.
- இந்த அறிவிப்பானது TX2 என அழைக்கப்படும் இலக்கான, காடுகளில் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க 2010 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட உலகளாவிய இலக்கிற்கு இந்தியாவின் பங்களிப்பை மேலும் பலப்படுத்துகிறது.
- இந்த 50 புலிகள் பாதுகாப்புச் சரணாலயங்கள் நாட்டின் 18 மாநிலங்களில் பரவி உள்ளது. இது உலகின் புலிகளின் எண்ணிக்கையில் 70%க்கும் அதிகமாக உள்ளது.
- இதன் மூலம் தேசிய அளவில் “CA | TS” அமைப்பை ஏற்றுக் கொண்ட இயற்கையான வாழ்விடங்களில் புலிகள் காணப்படும் 13 நாடுகளில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.
- புலிகள் அறிக்கை 2018 என்ற அறிக்கையின் படி, 2006 முதல் 2018 வரை இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கையானது ஆண்டுக்கு 6% அதிகரிக்கும் விகிதத்தில் காணப் பட்டுள்ளது.




## வான்வழி வழியாக விதை விதைத்தல்

- ஹரியானா மாநில வனத் துறையானது அம்மாநிலமெங்கிலும் வான்வழியாக விதை விதைத்தலை சோதனை முயற்சியாகத் தொடங்கியுள்ளது.
- இந்த நுட்பமானது செல்ல முடியாத அல்லது செல்வதற்குக் கடினமாக உள்ள ஆரவல்லி மலைப் பகுதிகளில் விதை விதைத்தலை மேற்கொள்ள அனுமதிக்கின்றது.
- இந்த நுட்பமானது மற்ற குடிமைப் பகுதிகளுடன் தொடர்பில் இல்லாத அல்லது இணைக்கப்படாதப் பகுதிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

## செந்நாய் (Dhole)

- அருகிவரும் செந்நாயைப் பாதுகாப்பது குறித்த ஒரு ஆய்வுக் கட்டுரையானது “பாலூட்டி ஆராய்ச்சி இதழில்” வெளியிடப்பட்டுள்ளது.
- செந்நாய் ஆனது ஆசிய வன நாய், இந்திய வன நாய், சத்தமிடும் நாய், சிவப்பு நாய் மற்றும் மலை ஓநாய் என்றும் அழைக்கப் படுகின்றது.
- புலியைத் தவிர பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் “அருகிவரும்” இனங்களின் பட்டியலில் இடம்பிடித்து இருக்கும் இந்தியாவில் உள்ள ஒரே மிகப்பெரிய ஊனுண்ணி செந்நாய் ஆகும்.
- உலகில் அதிக எண்ணிக்கையிலான செந்நாய்களை இந்தியா கொண்டுள்ளது.
- இந்தியாவில் அருகிவரும் செந்நாயைப் பாதுகாப்பதில் கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முன்னிலையில் உள்ளன.



## இந்தியச் சிறுத்தை

- தனது புலிகள் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக, இந்திய வனவிலங்கு நிறுவனமானது (WII - Wildlife Institute of India) இந்த மாத இறுதியில் "காணப்பட்ட சிறுத்தைகள்" என்பது குறித்த ஒரு பிரத்தியேக அறிக்கையை வெளியிட உள்ளது.
- இந்தியச் சிறுத்தைகள் குறித்த கடைசி முறைசார் கணக்கெடுப்பானது 2014 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இது இந்தியாவில் சிறுத்தைகளின் எண்ணிக்கையானது 12,000 மற்றும் 14,000 ஆகியவற்றுக்கு இடையில் இருக்கும் என்று கணித்துள்ளது.
- மேலும் இது 8000 சிறுத்தைகள் புலிகளின் வாழிடத்திற்குள் காணப்படுவதாகவும் கணித்துள்ளது.
- சிறுத்தைகளின் நிலை
  - புலிகளுடன் சேர்த்து வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972ன் பட்டியல் I-ன் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளது.
  - CITES-ன் (The Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) பட்டியல் I-ல் வகைப்படுத்தப் பட்டுள்ளது.
  - IUCN-ன் (International Union for Conservation of Nature) சிவப்புப் பட்டியலில் "பாதிக்கப்படக் கூடிய இனமாக" பட்டியலிடப் பட்டுள்ளது.

## சூழலியல்-ஓட்டம் (E-Flow)

- உத்தரப் பிரதேச மாநில அரசானது குறைந்தது 6 நதிகளில் மாசுபட்டுள்ள பகுதிகளுக்காக குறைந்த சுற்றுச்சூழல் ஓட்டத்தை (நிலை) நிர்ணயிக்க முடிவு செய்துள்ளதாக மத்திய அரசிடம் கூறியுள்ளது.
- சூழலியல்-ஓட்டம் என்பது சாதகமான சுற்றுச்சூழல் நிலையில் ஒரு நதியின் சூழலை மேம்படுத்துவதற்காகத் தேவைப்படும் ஒரு குறைந்தபட்ச ஓட்டமாகும்.
- உத்தரப்பிரதேச மாநில அரசானது சரயு, ஹிண்டோன், ராம்கங்கா, பெட்வா, காக்ரா மற்றும் ரப்தி ஆகிய நதிகளின் மாசுபட்டுள்ள பகுதிகளுக்காக E-Flow-ஐ முறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.
- இதுவரை, மத்திய அரசினால் E-Flow நிர்ணயிக்கப்பட்ட நாட்டில் உள்ள ஒரே நதி கங்கை ஆகும்.
- 2018 ஆம் ஆண்டில் மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகமானது கங்கைக்கான E-Flow முறைக்காக வேண்டி ஒரு அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது.

## இந்தியாவின் முதலாவது பனிச் சிறுத்தை பாதுகாப்பு மையம்

- உத்தரகண்ட் மாநில அரசானது இந்தியாவின் முதலாவது பனிச் சிறுத்தை பாதுகாப்பு மையத்தைத் திறக்க முடிவு செய்துள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து உத்தரகண்ட் வனத் துறையினால் கட்டப்பட உள்ளது.
- இது உயரிய இமயமலை சூழலமைப்பின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பு, நீடித்தப் பயன்பாடு, மீட்டெடுப்பு என்ற 6 ஆண்டு காலத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- பனிச் சிறுத்தையானது பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.
  - பெரிய பூனைகளை வேட்டையாடுதல் மற்றும் அவற்றைக் கடத்தவதற்கு எதிராக உயரியப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய இந்திய வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் பட்டியல் – I
  - பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்புப் பட்டியலில் “பாதிக்கப்படக் கூடிய இனம்”




## புதிய குள்ள வெட்டுக்கிளி இனங்கள்

- 116 ஆண்டுகளுக்குப் பிறகு, முதலாவது புதிய குள்ள வெட்டுக் கிளி இனங்கள் (கிளாடோனோட்டஸ் சகூரி) குரோஷிய மற்றும் ஜெர்மனைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் இலங்கையின் சிங்கராஜா மழைக் காடுகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- சேவல் சுட்டு நிறத் துண்டு வடிவிலான இந்த வெட்டுக் கிளிக்களுக்கு கேரள வன ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஒரு இளம் உயிரியல் மற்றும் வெட்டுக் கிளி வல்லுநரான தனீஷ் பாஸ்கர் என்பவரின் நினைவாக கிளாடோனோட்டஸ் மாஸ்கரி என்று பெயரிடப்பட்டுள்ளது.



## ஆர்க்டிக் பகுதியில் துருவக் கரடிகளின் எதிர்காலம்

- ❖ தோரந்தோ ஸ்கர்பாரோக் பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வானது “உலக துருவக் கரடி நிலைபேறு அடைதலுக்கு விரைவான காலநிலை அளவு உலகியல் வரம்பை நிர்ணயிக்கின்றது” என்ற தலைப்பில் இயற்கைக்கான காலநிலை என்ற பத்திரிக்கையில் வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ இந்த ஆய்வின்படி, காலநிலை மாற்றமானது துருவக் கரடிகளை முற்றிலுமாக அழிந்து போகும் நிலைக்குத் தள்ளி விடும் என்றும், ஆர்க்டிக் பகுதியில் உள்ள துருவக் கரடிகள் 2100 ஆம் ஆண்டில் அழிந்து போகும் என்றும் கூறப்பட்டுள்ளது.
- ❖ இந்த ஆய்வானது துருவக் கரடிகளின் இனப்பெருக்கம் மற்றும் வாழும் திறன் ஆகியவற்றைப் பாதிக்கும் ஆர்க்டிக் கடலின் இழப்பு குறித்த காலக் கெடுவை அளிப்பதில் தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது ஆய்வாகும்.
- ❖ துருவக் கரடிகள் அழிந்து வருவதில் கால நிலை மாற்றமானது முக்கியப் பங்கு வகிப்பதுடன் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தினால் ஒரு அழியக்கூடிய இனமாகப் இது பட்டியலிடப்பட்டுள்ளது.




## உண்ணிகளால் பரவும் SFTS தீநுண்மி

- ❖ இது சீனாவில் மீண்டும் வெளிப்பட்டுள்ளது.
- ❖ இந்தத் தீநுண்மியானது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. சீனா 2011 ஆம் ஆண்டில் இந்த தீநுண்மியின் நோய்க்கிருமியை தனிமைப் படுத்தியது.
- ❖ இது புன்யா என்ற தீநுண்மி வகையைச் சேர்ந்தது.
- ❖ இது இரத்த நுண் தட்டுகள் குறைபாடு நோய்க்குறியுடன் கடுமையான காய்ச்சலை (SFTS - Severe fever with thrombocytopenia syndrome) ஏற்படுத்துகிறது.
- ❖ இந்த தீநுண்மியானது பூனைகள், எலிகள், முள்ளம்பன்றிகள் (hedgehogs), மரநாய்கள் (weasels), பிரஷ்டைல் போசம்ஸ் (brushtail possums) மற்றும் யாக் (yak) உள்ளிட்ட பாலூட்டிகளைப் பாதிக்கும் என்று அறியப்படுகிறது.

## யமுனை நதியின் சிக்கலான நோய்க் கிருமிகள்

- ❖ ஐஐடி-தில்லியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவானது பொதுவாக இயற்கையாக தீங்கு விளைவிக்கும் சில நோய்க் கிருமிகளை யமுனையில் கண்டறிந்துள்ளது.

- கண்டறியப்பட்டுள்ள பாக்டீரிய எதிர்ப்பு ஆனது நதிகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் இது விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் தீங்கு விளைவிக்கும்.
- நோய்க் கிருமிகள் என்பது வைரஸ், பாக்டீரியா, புரோட்டோசோவா போன்ற தொற்றும் நுண்ணுயிரிகள் அல்லது கிருமிகளைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.

## சினபங் மலை

- இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் உள்ள எரிமலையான சினபங் ஆனது சமீபத்தில் வெடித்துச் சிதறியது.
- கடந்த காலத்தில் அந்த எரிமலையின் 2வது வெடிப்பு இதுவாகும்.
- இது அந்த நாட்டில் 120 செயல்படும் எரிமலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. இது பசுபிக் நெருப்பு வளையப் பகுதியில் நிலநடுக்கத்தை சந்திக்கக் கூடியதாக உள்ளது.




## பட்டாம் பூச்சிகளின் 77 புதிய இனங்கள்

- பம்பாய் இயற்கை வரலாற்றுச் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வானது மும்பையின் மாதேரன் மலைப் பகுதியில் உள்ள சூழலியல் ரீதியிலான பாதுகாப்பு வனப் பகுதியில் பட்டாம் பூச்சிகளின் 77 புதிய வகை இனங்களைக் கண்டறிந்துள்ளது.
- இதன் மூலம் இந்த வனப் பகுதியில் உள்ள மொத்தப் பட்டாம் பூச்சி இனங்களின் எண்ணிக்கையானது 140 ஆக உள்ளது.
- 1894 ஆம் ஆண்டிற்குப் பிறகு, அதாவது 125 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வனப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வு இதுவாகும்.

## BEEG விதைப் பந்துகள்



- ஐஐடி-கான்பூர் கல்வி நிறுவனமானது BEEG (Bio compost Enriched Eco friendly Globule - உயிரி உரம் செறிவூட்டப்பட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறு உருண்டை) என்று பெயரிடப்பட்ட உள்நாட்டு விதைப் பந்துகளை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது கொரானா காலத்தில் பாதுகாப்புடன் விதை விதைத்தலை மேற்கொள்ள மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு உதவ உள்ளது. மேலும் இது மக்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்குகின்றது.

## அர்டிசியா வகை தாவரத்தின் புதிய இனங்கள்

- ஜவஹர்லால் நேரு வெப்ப மண்டலத் தாவரவியல் பூங்கா மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் தமிழ்நாட்டின் ஆனைமலைப் புலிகள் காப்பகத்தில் உள்ள அக்காமலை வனப் பகுதியில் அர்டிசியா தாவரத்தின் புதிய இனத்தைக் கண்டறிந்துள்ளார்.
- இந்தப் புதிய இனமான அர்டிசியா ராமசாமி ஆனது 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தாவரவியலாளரான எம்.எஸ். ராமசாமி என்பவரின் நினைவாகப் பெயரிடப் பட்டு உள்ளது.
- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்புப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.

## TRAFFIC அமைப்பின் சிறுத்தைகள் பற்றிய ஆய்வு

- 'ஸ்பாட்டட்' (SPOTTED) என்ற தலைப்பில் 'சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம்: நடந்து கொண்டிருக்கும் வேட்டையாடுதல் மற்றும் இந்தியாவில் சிறுத்தைகளின் சட்டவிரோத வர்த்தகம் பற்றிய பார்வை' என்ற ஒரு ஆய்வுக் கட்டுரையை TRAFFIC இந்தியா நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் 2015-2019 ஆண்டிற்கு இடையில் மொத்தம் 747 சிறுத்தை இறப்புகளில் 596 சிறுத்தைகள் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் மற்றும் வேட்டையாடுதல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக இருக்கிறது.
- உத்தரகண்ட் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்து அதிக எண்ணிக்கையிலான வேட்டையாடுதல் நடவடிக்கைகள் பதிவாகியுள்ளன.
- வனவிலங்கு வர்த்தகக் கண்காணிப்பு வலையமைப்பான TRAFFIC என்பது பல்லுயிர்த் தன்மை மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய இரண்டின் பின்னணியில் வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் வர்த்தகத்தில், உலகளவில் செயல்படும் ஒரு முன்னணி அரசு சாரா அமைப்பாகும்.

- ❖ இது இயற்கைக்கான உலகளாவிய நிதியம் மற்றும் இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் ஆகியவற்றின் ஒரு மூலோபாயக் கூட்டணியாக 1976 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

## ஆர்க்டிக் பனிப்பாறைப் பிளவு

- ❖ 81 சதுர கிலோ மீட்டர் அளவு கொண்ட ஒரு மிகப்பெரிய பனிப் பாறையானது ஆர்க்டிக் பனித் திட்டின் (மில்னி பனித் திட்டு) வடக்குப் பகுதியிலிருந்துப் பிரிந்து வடக்கு நோக்கி நகரத் தொடங்கியுள்ளது.
- ❖ மில்னி பனிப் பாறைத் திட்டானது 2020 ஆம் ஆண்டின் ஜூலை மாத இறுதியில் 2 நாட்களில் மட்டும் தனது பனியில் ஏறத்தாழ 40% பரப்பினை இழந்துள்ளது.
- ❖ ஆர்க்டிக் பகுதியானது ஆர்க்டிக் பெருக்கம் எனப்படும் மின்னூட்டச் செயல்முறையின் காரணமாக மற்ற கோள்களுடன் ஒப்பிடும் போது இரண்டு மடங்கு வீதத்தில் வெப்பமாகிக் கொண்டிருக்கின்றது.




## சிங்கப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் டால்பின் (ஓங்கில்) பாதுகாப்புத் திட்டம்

- ❖ 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று இந்தியப் பிரதமர் புலிகள் பாதுகாப்புத் திட்டம் வெற்றியடைந்ததன் தொடர்ச்சியாக மத்திய அரசானது நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிங்கப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் டால்பின் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்க இருப்பதாக அறிவித்துள்ளார்.
- ❖ இந்தத் திட்டங்கள் இந்தியாவில் இந்த 2 அருகி வரும் இனங்களின் உயிரிப் பன்முகத் தன்மையின் பாதுகாப்பிற்காக மத்திய அரசினால் தொடங்கப்படவுள்ளன.
- ❖ சிங்கப் பாதுகாப்புத் திட்டம் ஆசியச் சிங்கங்களின் பாதுகாப்புடன் தொடர்பு கொண்டதாகும்.
- ❖ இது நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றின் வாழிட மேம்பாட்டின் மீது கவனம் செலுத்த உள்ளது.
- ❖ கங்கை ஆற்று ஓங்கிலானது சுட்டிக் காட்டும் இனங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இது அந்தச் சூழலமைப்பின் ஒட்டு மொத்த நிலை குறித்த தகவலை அளிக்கின்றது.

- கங்கை ஆற்று ஓங்கில் ஆனது ஐயுசிஎன் அமைப்பின் செந்தரவுப் பட்டியலின் படி ஒரு அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது CITES-ல் பட்டியல் – 1ல் (The Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) வைக்கப் பட்டுள்ளது.

## பவளப் பாறைகள் மற்றும் இந்தியப் பருவக் காற்று

- சமீபத்தில் இந்திய வெப்ப மண்டல வானிலையியல் மையமானது வட இந்தியப் பெருங்கடலில் உள்ள பவளப் பாறைகள் இந்தியப் பருவக் காற்றின் தொடக்கம் மற்றும் அந்த பருவக் காற்றின் திரும்பப் பெறல் ஆகியவற்றிற்கான தீர்வுகளைக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- பவளப் பாறைகள் மேற்பரப்பின் மீது வளர்ந்து வரும் பட்டைகள் பருவக்கால வரலாற்று நிலைகள், சுற்றுப்புற நீரின் வெப்பநிலை, மழை மற்றும் முன்பு இருந்த பல்வேறு பரிணாமங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் திறன் கொண்டதாக இந்த ஆய்வு கூறுகின்றது.
- இது முந்தைய காலநிலை குறித்த தகவலைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் மர வளையத்தைப் போன்றதொரு ஒரு ஆய்வாகும்.

## பூமராங் நிலநடுக்கம்

- தற்பொழுது ஒரு சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழுவானது "பூமராங் வகை நிலநடுக்கத்தை" அட்லாண்டிக் பெருங்கடலில் (ரோமாஞ்சே விரிவுப் பகுதி) பதிவு செய்துள்ளது.
- இது தொடக்க வெடிப்பில் இருந்து பரவிய ஒரு ஆரம்பகால முறிவாகும். ஆனால் அதன் பின் இது எதிர்புறத்தில் அதிவேகத்தில் திரும்பி நகர்ந்தது.
- வழக்கமாக, நிலநடுக்கங்கள் ஒரு பிளவின் மீது திடீரென பாறைகள் உடைந்து போகும் முறிவு நிகழ்வுகளின் போது ஏற்படுகின்றன. இதில் இந்தப் பிளவு என்பது இரண்டு தொகுதிகள் அல்லது கண்டத் தட்டுகளுக்கான ஒரு எல்லையைக் குறிக்கின்றது.



### தென் ஆப்பிரிக்காவிலிருந்து 3 சிறுத்தைகள்

- ❖ விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக கர்நாடகாவில் உள்ள மைசூரு மிருகக்காட்சிச் சாலையானது 1 ஆண் மற்றும் 2 பெண் ஆப்பிரிக்கச் சிறுத்தைகளை தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்ஸ்பெர்க்கில் உள்ள அண் வேன் டைக் சிறுத்தை மையத்திடமிருந்துப் பெற்றுள்ளது.
- ❖ இந்த மிருகக்காட்சிச் சாலையானது இதற்கு முன்பு 2011 ஆம் ஆண்டில் ஜெர்மனியிடமிருந்து நிலத்தில் வாழும் ஒரு அதிவேக விலங்காகக் கருதப்படும் ஆப்பிரிக்க வனச் சிறுத்தைகளைப் பெற்றுள்ளது.
- ❖ ஹைதராபாத் மிருகக் காட்சிச் சாலைக்குப் பிறகு வேட்டையாடும் சிறுத்தைகளைக் கொண்டுள்ள நாட்டின் 2வது மிருகக்காட்சி சாலை மைசூரு ஆகும். ஹைதராபாத் மிருகக் காட்சி சாலையானது இந்த பெரிய பூனை இனங்களான ஒரு ஜோடி ஆப்பிரிக்கச் சிறுத்தைகளைக் கொண்டுள்ளது.

### கறுப்புக் கடலில் இயற்கை வாயு இருப்புகள்

- ❖ துருக்கி அதிபரினால் மேற்கொள்ளப் பட்ட அறிவிப்பின்படி, 320 பில்லியன் கன மீட்டர்கள் அளவிற்கான இயற்கை வாயுவானது கறுப்புக் கடலில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ❖ துருக்கி தனது ஆற்றல் வளங்களுக்காக ரஷ்யா, ஈரான், ஈராக் ஆகிய நாடுகளைச் சார்ந்துள்ளது.
- ❖ எனவே, இந்த எண்ணெய் இருப்புக் கண்டுபிடிப்பானது அதன் எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கும்.




## மாநிலச் செய்திகள்

### ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரம்

- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் ஆளுநரான பிஸ்வா பூஷன் ஹரிசந்தன் ஆந்திரப் பிரதேச அனைத்துப் பகுதிகளின் பரவலாக்கம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி மசோதா, 2020 என்ற மசோதாவிற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளார்.
- ❖ பரவலாக்கல் மசோதாவிற்கு வழங்கப்பட்ட அனுமதியானது அமராவதி, கர்நூல் மற்றும் விசாகப்பட்டினத்தை சட்டமன்றம், நீதித் துறை மற்றும் நிர்வாகம் சார்ந்த தலைநகர்களாக மேம்படுத்த வழிவகை செய்கின்றது.

## வால்மீகி சமூகம்

- வால்மீகி சமூகமானது ஜம்மு காஷ்மீரில் தமது இருப்பிடத்திற்கான சான்றிதழைப் பெற்றுள்ளது.
- தற்பொழுது இந்தச் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வாழ்வதற்கான உரிமை, வாக்குரிமை, அரசுப் பணிகளுக்கான உரிமை, தொழில் சார் கல்லூரிகள் மற்றும் இடஒதுக்கீட்டிற்கான உரிமை ஆகியவற்றைப் பெற உள்ளனர்.
- இவர்கள் 63 ஆண்டுகளுக்கு முன்பு ஜம்மு காஷ்மீருக்கு அப்போதைய அரசின் கோரிக்கையின் பேரில் "துப்புரவுப் பணியாளர்களாக" வந்தனர்.

## இந்திரா ரசோய் யோஜனா

- ராஜஸ்தான் மாநில அரசானது இந்திரா ரசோய் யோஜனா என்ற திட்டத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.
- இதன் குறிக்கோள் "பட்டினியில்லை தூக்கமில்லை" என்பதாகும்.
- இந்தத் திட்டமானது சென்னையின் "அம்மா கீ ராசோய்" (அம்மா உணவகம்) என்பதனால் ஊக்கம் அளிக்கப் பட்டு, தொடங்கப் பட்டுள்ளது.

## "ஏக் மாஸ்க் – அனேக் ஜிண்டாகி" என்ற விழிப்புணர்வுப் பிரச்சாரம்

- மத்தியப் பிரதேசமானது ஆகஸ்ட் 01 முதல் 15 வரை "ஏக் மாஸ்க் – அனேக் ஜிண்டாகி" என்ற ஒரு பொது விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- "ஏக் மாஸ்க் – அனேக் ஜிண்டாகி" என்பது "ஒரு முகக் கவசம், பல உயிர்கள்" என்பதைக் குறிக்கின்றது.
- இந்தப் பிரச்சாரமானது கோவிட் -19 நோய்த் தொற்றிலிருந்துப் பாதுகாக்க முகக் கவசம் அணிவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளது.

## ஆந்திரப் பிரதேசத்திற்கான 3 தலைநகரங்கள்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது அம்மாநிலத்திற்கான 3 தலைநகரங்களை உருவாக்கக் கோரும் அறிக்கைக்குத் தடை விதித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், ஆந்திரப் பிரதேச மாநில சட்டசபையானது, ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளின் பரவலாக்கம் மற்றும் சம வளர்ச்சி மசோதா, 2020 என்ற மசோதாவை நிறைவேற்றியது.
- இந்தச் சட்டமானது அம்மாநிலத்திற்கு 3 தலைநகரங்கள் அமைக்க வழிவகை செய்கின்றது.
    - அமராவதி – சட்டசபைத் தலைநகரம்
    - விசாகப்பட்டினம் – நிர்வாகத் தலைநகரம்
    - கர்னூல் - நீதித்துறைத் தலைநகரம்




## பாரிவர் பெஹ்சான் பத்ரா – PPP

- இது ஹரியானா அரசினால் தொடங்கப்பட்டுள்ளது.
- இது பயனாளிகள் மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களில் உள்ள பயன்களை நேர்மையான மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் தங்கள் வீடுகளிலேயே பெற வழிவகை செய்கின்றது.
- PPP (Parivar Pehchan Patra) ஆனது ஒரு முழுக் குடும்பத்திற்கும் ஒரு தனி அடையாளத்தை வழங்கும். மேலும் இது குடும்பத் தலைவரின் பெயரை குடும்ப அட்டையின் மேல் வரிசையில் கொண்டிருக்கும்.

## "பணிகள் மேலாண்மை அமைப்பு" இணைய வாயில்

- ஹரியானாவின் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் உள்துறை அமைச்சரான அனில் விஜ் ஆகியோர் தன்னளவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது "பணிகள் மேலாண்மை அமைப்பை" தொடங்கியுள்ளனர்.
- இது ஹரியானாவின் நகர உள்ளாட்சி அமைப்புகளின் (ULB - Urban Local Bodies) மேம்பாட்டுப் பணிகளின் மேலாண்மை மற்றும் கண்காணிப்பிற்கான இணைய அடிப்படையிலான, காகிதமற்ற மற்றும் மையப்படுத்தப்பட்ட ஒரு இணைய வாயிலாகும்.
- இந்த மையப்படுத்தப்பட்ட இணையதளமானது ஹரியானாவில் உள்ள ULBகளின் அனைத்துப் பணிகளையும் ஒரு ஒற்றைத் தளத்தில் கொண்டு வரும் பணியை மேற்கொள்ளும். மேலும் அப்பணிகளை நிறைவு செய்வதில் ஏற்படும் எந்தவொரு கால தாமதமும் இந்தத் தளத்தில் காண்பிக்கப்படும்.

## ஜம்மு காஷ்மீரின் துணை நிலை ஆளுநர்

- ஜம்மு காஷ்மீரின் துணைநிலை ஆளுநரான கிரிஷ் சந்திர முர்மு அவர்கள் தனது ஆளுநர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.
- ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தின் முதலாவது துணைநிலை ஆளுநர் இவராவார். இவர் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நியமிக்கப்பட்டார்.

- தற்பொழுது முன்னாள் மத்திய அமைச்சரான மனோஜ் சின்ஹா என்பவர் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தின் புதிய துணைநிலை ஆளுநராக நியமிக்கப் பட்டுள்ளார்.

## பள்ளிகளுக்கான கற்றல் கூறுகளுக்காக கூகுள் நிறுவனத்துடன் இணைதல்

- மகாராஷ்டிரா மாநில அரசானது வகுப்பறை அணுகுமுறையை நிகழ்நேரக் கற்றலின் ஒருங்கிணைக்கும் கற்றல் நிகழ்வுகளை அளிப்பதற்காக கூகுள் நிறுவனத்துடன் இணையவுள்ளதாக அறிவித்துள்ளது.
- கல்வி மற்றும் கூகுள் வகுப்பறைகளுக்கான G தொகுப்பின் மாநிலம் தழுவிய பரவலுக்காக கூகுள் இந்தியா நிறுவனத்துடன் இணையும் இந்தியாவின் முதலாவது மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.

## ஒய்.எஸ்.ஆர் சேயுதா திட்டம்

- இது ஆந்திராவில் தொடங்கப்பட உள்ளது.
- சிறுபான்மைச் சமூகத்திலிருக்கும் பெண்களை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒய்.எஸ்.ஆர் சேயுதா திட்டத்துடன் ஒய்.எஸ்.ஆர் அசாரா திட்டத்தையும் ஆந்திர அரசானது துவங்கவிருக்கிறது.
- இத்திட்டமானது சுய உதவிக் குழுவின் 90 லட்சம் பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

## தெண்டு இலைகள் திட்டம்

- சத்தீஸ்கரின் முதலமைச்சரான பூபேஷ் பாகேல், மாநிலத்தில் தெண்டு இலைகள் சேகரிப்பாளர்களுக்காக “ஷாஹீத் மகேந்திர கர்மா தெண்டுபட்டா சங்கிரகக் சமாஜிக் சுரக்சா யோஜனா” என்ற சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
- தெண்டு இலைகள் பீடிகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

## சிறுமியர் மற்றும் மகளிர்களுக்கான திட்டங்கள்

- “பேட்டி பச்சாவ், பேட்டி பதாவோ” பிரச்சாரத்திற்கு ஒரு பெரிய ஊக்கத்தை அளிக்கும் பொருட்டு, ஹரியானா அரசானது இரண்டு புதிய திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுமியர் மற்றும் மகளிர்களுக்கு இலவச மாதவிடாய்க் கால அணையாடைகளை (sanitary napkins) “மஹிலா எவம் கிஷோரி சம்மன் யோஜனா” என்ற திட்டம் வழங்க இருக்கின்றது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு செறிவூட்டிய, சுவை கொண்ட மற்றும் கொழுப்பு நீக்கப்பட்ட பால் பொடியை "முக்கிய மந்திரி தூத் உபர் திட்டம்" என்ற திட்டம் வழங்க இருக்கின்றது.

## குஜராத் தொழிற்துறைக் கொள்கை, 2020

- குஜராத் மாநில அரசானது “தொழிற் துறைக் கொள்கை 2020” என்ற கொள்கையை வெளியிட்டுள்ளது.

- இந்தக் கொள்கையின் கீழ், அம்மாநில அரசானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் குஜராத் தொழில்துறை மாநாட்டை நடத்துவதற்காக பிரத்தியேகமான “உறவுசார் மேலாளர்களை” நியமிக்க உள்ளது.
- இந்தக் கொள்கையானது “இடம்பெயர் ஊக்கமளிப்புகள்” என்பதின் மூலம் சீனாவிலிருந்து தொழிற்சாலைகள் விரும்பத்தகு முறையில் இந்தியாவிற்கு இடம்பெயர உதவ உள்ளது.

## தில்லி மின்சார வாகனக் கொள்கை

- தில்லி முதல்வரான அரவிந்த் கெஜ்ரிவால் “தில்லி மின்சார வாகனக் கொள்கையை” வெளியிட்டுள்ளார்.
- இந்தப் புதிய கொள்கையின் கீழ், தில்லி அரசானது பதிவுக் கட்டணம் மற்றும் சாலை வரிக்கு விலக்கு அளித்துள்ளது.
- இந்தக் கொள்கையாது பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் மாசுபாட்டு அளவுகளைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது 2024 ஆம் ஆண்டில் 25% மின்சார வாகனங்களைக் கொண்டிருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## கிராம வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பெண்களுக்கான இடங்களில் இட ஒதுக்கீடு

- மேகாலயா மாநில அமைச்சரவையானது “கிராம வேலைவாய்ப்பு ஆணையங்களில் பெண்களுக்கான இடங்கள் மீதான இடஒதுக்கீட்டுக் கொள்கை” என்ற ஒன்றிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தக் கொள்கையானது கிராம அளவில் உள்ள சமூக நிறுவனங்களில் பெண்களுக்காக 50% இடஒதுக்கீட்டை வழங்குகின்றது.
- இந்தக் கொள்கையானது பெண்களின் தலைமைத்துவம் மற்றும் தன்னாட்சிப் போக்கை மேற்கொள்வதற்காக அவர்களுக்கான ஒரு மன்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் பெண்கள் மேம்பாட்டை உறுதி செய்கின்றது.

## முக்கிய மந்திரி கிசான் சகாய் யோஜனா – குஜராத்

- குஜராத் மாநில அரசானது "முக்கிய மந்திரி கிசான் சகாய் யோஜனா" (PMFBY - Pradhan Mantri Fasal Bima Yojana) என்ற ஒரு திட்டத்தை இந்த ஆண்டிற்கான பிரதம மந்திரி பசல் பீமா யோஜனாவிற்கு ஒரு தற்காலிக மாற்றாகத் தொடங்கியுள்ளது.
- அம்மாநிலத்தில் காப்பீட்டு நிறுவனங்களால் அதிக காப்பீட்டுத் தொகை கோரப் பட்டதன் காரணமாக இது தொடங்கப்பட்டுள்ளது.
- PMFBY ஆனது பயிர் விளைச்சல் பொய்த்துப் போவதற்கு எதிராகவும் அனைத்து வகையான எண்ணெய் வித்துகள் மற்றும் வணிக ரீதியிலான/தோட்டக் கலைப் பயிர்களை உள்ளடக்கி அவற்றுக்கு விரிவான காப்பீட்டை வழங்குவதற்காக வேண்டி 2016 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.

## இந்திரா வன மித்தன் யோஜனா - சத்தீஸ்கர்

- உலகப் பழங்குடியின தின (ஆகஸ்ட் 09) கொண்டாட்டத்தன்று சத்தீஸ்கர் மாநில அரசானது இந்திரா வன மித்தன் யோஜனாவைத் தொடங்க முடிவு செய்துள்ளது.
- இந்தத் திட்டமானது பழங்குடியின மக்களுக்காக வேலை வாய்ப்புகளை வழங்க உள்ளது. இதன் மூலம் அவர்கள் தற்சார்பு அடைந்து, தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

## மாணவர்களுக்குத் திறன்பேசிகள் – பஞ்சாப்

- பஞ்சாப் மாநில அரசானது மாணவர்களுக்குத் திறன்பேசிகளை இலவசமாக வழங்கத் தொடங்கியுள்ளது.
- இதற்கு முன்பு அம்மாநில அரசானது அம்மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு திறன் பேசிகள் வழங்கப் படும் என்று அறிவித்திருந்தது.
- இதற்குக் காரணம் இந்த நோய்த் தொற்றுக் காலத்தில் நிகழ்நேர/ஆன்லைன் வகுப்புகள் நடத்தப்படுவது மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது.




## முதலாவது பட்டுப் பயிற்சி மற்றும் உற்பத்தி மையம்

- காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையமானது (KVIC - Khadi and Village Industries Commission) இதே வகையைச் சேர்ந்த முதலாவது பட்டுப் பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தை அருணாச்சலப் பிரதேசத்தில் திறக்க முடிவு செய்துள்ளது.

- இந்த மையமானது அம்மாநிலத்தில் சூலியு என்ற ஒரு கிராமத்தில் திறக்கப்பட உள்ளது.
- KVIC ஆனது 1957 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். இது சிறு, குறு, நடுத்தர தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தலைமை அமைப்பாகும்.

## கோவாவிற்குப் புதிய புவிசார் குறியீடுகள்

- கோவாவின் ஹர்மால் மிளகாய், மொய்ரா வாழைப்பழங்கள் மற்றும் காஜி ஆகியவை புவிசார் குறியீடுகள் பதிவகத்திடமிருந்து புவிசார் குறியீடுகளைப் பெற்றுள்ளது.
- ஹர்மால் மிளகாய்கள் ஹர்மால் கிராமம் மற்றும் பெர்னெம் தாலூக்காவைச் சுற்றியுள்ள பகுதிகள், குறிப்பாக அரம்போலின் கடற்கரையோரக் கிராமம் ஆகியவற்றில் மட்டுமே விளைகின்றது.
- மொய்ரா வாழைப் பழங்கள் பார்டெஸ் தாலூக்கா & பைச்சோலிம் தாலூக்காவின் மொய்ரா கிராமத்தில் விளையும் தனித்துவம் மிக்க வாழைப்பழங்களாகும்.
- பாரம்பரிய மாநில இனிப்புப் பலகாரமான காஜி ஆனது அம்மாநிலத்தில் நடைபெறும் இந்து ஜாத்ராஸ் மற்றும் கத்தோலிக்க விருந்து ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாக விளங்குகின்றது.

## கர்ம சதி பிரகல்பா திட்டம்

- 2020 ஆம் ஆண்டின் சர்வதேச இளைஞர் தினக் கொண்டாட்டத்தின் போது, மேற்கு வங்க மாநில அரசானது கர்ம சதி பிரகல்பா என்ற ஒரு திட்டத்தை தொடங்கி உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், 1 இலட்சம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மென் கடன்கள் மற்றும் மானியங்கள் வழங்கப்பட உள்ளன. எனவே அவர்கள் இதன் மூலம் சுயசார்பு அடைவார்கள்.

## YSR சேயுதா திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது நிதியுதவி அளிப்பதன் மூலம் பெண்களின் நீடித்த வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் ஒரு திட்டமான "YSR சேயுதா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - பொருளாதாரச் செயல்பாடுகளில் பெண்களின் பங்களிப்பிற்கு ஆதரவளித்தல்
    - வணிகத்தில் நிதியை முதலீடு செய்ய விரும்பும் பெண்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை அளித்தல்.

## தண்டனை அதிகரிப்பதற்கான அவசரச் சட்டம்

- ஒடிசா மாநில அமைச்சரவையானது கோவிட் – 19 ஒழுங்குமுறைகளை மீறுபவர்களுக்கான அபராதத்தை அதிகரிப்பதற்கான ஒரு பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மாநிலப் பரிந்துரைகள் நடைமுறைக்கு வருவதற்கு தொற்று நோய்கள் சட்டம், 1897 என்ற சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட வேண்டும்.
- தண்டனை வழங்குவதற்கான விதிமுறையானது இச்சட்டத்தில் 3வது பிரிவில் வழங்கப் பட்டுள்ளது.

## தேசபக்தர்கள் தினம் - மணிப்பூர்

- ஆண்டுதோறும் ஆகஸ்ட் 13 ஆம் தேதி அன்று மணிப்பூரில் தேசபக்தர்கள் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 1891 ஆம் ஆண்டின் ஆங்கிலோ-மணிப்பூரி போரை நினைவு கூரும் வகையில் இது அனுசரிக்கப் படுகிறது. இந்தப் போரின் போது அந்த மாநிலத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டி பலர் தமது உயிரைத் தியாகம் செய்தனர்.

## ஜெர்மன் தொழில் பயிற்சி

- கோவா அரசானது சீமென்ஸ் லிமிடெட் மற்றும் டாய்ச் கெசெல்செஃப்ட் ஃபார் இன்டர்நேஷனல் ஜுசெமனார்பீட் (Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit India) இந்தியா என்ற நிறுவனத்துடன் ஒரு முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- கோவாவின் தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களில் உலகத்தரம் வாய்ந்த ஜெர்மனியின் இரட்டைநிலை தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மாநில அரசு, தொழில்துறை மற்றும் கோவாவில் திறன் பயிற்சிக்கான சர்வதேச வளர்ச்சிக்கான நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான முதல் வகையான ஒத்துழைப்பாகும்.

## விவசாய புத்தாக்கத் திட்டத்திற்கான செயற்கை நுண்ணறிவு

- வேளாண் புத்தாக்கத் திட்டத்திற்கான செயற்கை நுண்ணறிவை தெலுங்கானா அரசு (Artificial Intelligence for Agricultural Innovation) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இதற்காக நான்காவது தொழில்துறைப் புரட்சி மையம் மற்றும் உலகப் பொருளாதார மன்றம் - இந்தியா ஆகியவற்றுடன் அந்த மாநில இணைகின்றது.

## ஒருனோடோய் திட்டம்

- அசாம் மாநில அரசானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதியிலிருந்து “ஒருனோடோய் திட்டத்தை” செயல்படுத்தவுள்ளது.
- இது அம்மாநிலத்தில் உள்ள ஏறத்தாழ 17 இலட்சம் குடும்பங்களுக்கு நேரடிப் பணப் பரிமாற்றத்தின் மூலம் நிதியுதவியை அளிக்க உள்ளது.
- இது அசாமில் ஒரு மிகப்பெரிய DBT (DBT - Direct Benefit Transfer) திட்டமாக கருதப் படுகின்றது.

## குவஹாத்தியில் முன்னறிவிப்பு அமைப்பு

- அசாமில் வெள்ள முன்னறிவிப்பு அமைப்பானது (FEWS - Flood Early Warning System) ஆற்றல் மற்றும் வள மைத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.

- இது முழுவதுமாக தானியங்கும் வகையில் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கூறாகும். இது குவஹாத்தியில் கடுமையான வெள்ளம் மற்றும் மழை குறித்த தகவல்களை உள்ளூர் அதிகாரிகளுக்கு வழங்க உள்ளது.
- சென்னை மற்றும் மும்பை ஆகிய நகரங்களுக்கு அடுத்து FEWS அமைப்பைக் கொண்ட மூன்றாவது நகரம் குவஹாத்தி ஆகும்.
- மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சகமானது இதே போன்ற ஒரு அமைப்பை கொல்கத்தா மற்றும் பெங்களூரு ஆகிய நகரங்களில் அமைக்க உள்ளது.

## மைசூரு மற்றும் பீடாருக்கு இடையிலான தொழிற்துறை பெருவழிப் பாதை

- கர்நாடக மாநில அரசானது மைசூரு மற்றும் பீடாருக்கு இடையில் தொழிற்துறை பெருவழிப் பாதை அமைக்கப்படும் என்று கூறியுள்ளது.
- இது அம்மாநிலத்தில் வணிக மற்றும் தொழிற்துறை வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக மேற்கொள்ளப் படுகின்றது.
- இந்தியாவில் ஒரு தொழிற்துறை பெருவழிப் பாதை என்பது பல்வேறு மாநிலங்களுக்கிடையேச் செல்லும் ஒரு பல்முனையப் போக்குவரத்துச் சேவை ஆகும்.

### *மற்ற புதிய தொழிற்துறை பெருவழிப் பாதைகள்*

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், பின்வரும் 5 தொழிற்துறை பெருவழிப் பாதைகள் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டன.
  - தில்லி-மும்பை பெருவழிப் பாதை
  - சென்னை-பெங்களூரு பெருவழிப் பாதை
  - பெங்களூரு-மும்பை பெருவழிப் பாதை
  - அமிர்தசரஸ்-கொல்கத்தா பெருவழிப் பாதை
  - கிழக்குக் கடற்கரை பொருளாதாரப் பெருவழிப் பாதை

## உலகின் உயரமான கப்பல் துறைப் பாலம் - மணிப்பூர்

- இந்திய இரயில்வேயானது மணிப்பூர் மாநிலத்தில் உலகின் உயரமான கப்பல் துறைப் பாலத்தைக் கட்டமைத்துக் கொண்டிருக்கின்றது.
- இந்தப் பாலத்தின் உயரம் 141 மீட்டராகும்.
- இது ஐரோப்பாவின் மாண்டிநீகிரோவில் உள்ள மாலா-ரிஜிகா என்ற 139 மீட்டர் உயரப் பாலத்தை விட உயரமானதாகும்.



- இந்தப் பாலமானது ஜிரிபம் – துபுல் – இம்பால் இரயில் பாதைத் திட்டத்தின் (111 கிலோ மீட்டர் தொலைவு) ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டமானது 45 சுரங்கப் பாதைகளைக் கொண்டிருக்கும்.
- இந்தத் திட்டத்தில் உள்ள 12வது சுரங்கப் பாதையானது வட கிழக்கில் மிக நீளமான சுரங்கப் பாதையாக இருக்கும்.

## நாகா சுதந்திர தினம்

- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று 74வது நாகா சுதந்திர தினமானது நாகாலாந்து மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் அனுசரிக்கப்பட்டது.
- நாகாலாந்து 1963 ஆம் ஆண்டில் தனி மாநிலமாக உருவானது
- எனினும், நாகா இனத் தலைவர்களின் ஒரு பகுதியினர் அதற்கான தனி இறையாண்மையைக் கோருவதற்கான இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.
- நாகாலாந்து மாநிலமானது தனது மாநில உருவாக்க தினத்தை டிசம்பர் 01 அன்று அனுசரிக்கின்றது.
- இந்த மாநிலமானது 1963 ஆம் ஆண்டில் அசாமில் இருந்து பிரிக்கப் பட்டு நாட்டின் 16வது மாநிலமாக உருவானது.

## தன்னாட்சிப் பகுதிக்கான குழு

- அருணாச்சலப் பிரதேச மாநில அரசானது பட்காய் தன்னாட்சிக் குழு மற்றும் மோன் தன்னாட்சிப் பகுதி ஆகியவற்றுக்கான சாத்தியமுள்ள தீர்வுகள் குறித்து விவாதிப்பதற்காகக் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவானது துணை முதல்வரான சௌனா மெய்ன் என்பவரின் தலைமையின் கீழ் அமைக்கப் பட்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் தன்னாட்சி ஆணையத்தின் கீழ் உள்ள பகுதிகள் தற்பொழுது இந்திய அரசியலமைப்பின் 5வது அட்டவணையின் கீழ் உள்ளன.
- இது இந்திய அரசியலமைப்பின் 6வது அட்டவணையில் உள்ள பூர்வீக (உள்ளூர்) சமுதாயத்திற்கு என்று உள்ளதைப் போல் சிறப்பு உரிமைகளை அளிக்காது.
- 6வது அட்டவணையானது 4 வட கிழக்கு மாநிலங்களில் 10 தன்னாட்சி மாவட்ட ஆணையங்களை உள்ளடக்கியுள்ளது.
- இது தன்னாட்சி மாவட்ட ஆணையங்களை உருவாக்குவதன் மூலம் அங்குள்ளப் பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாக்க முயல்கின்றது.

### *தன்னாட்சி ஆணையங்களின் அதிகாரங்கள்*

- இந்தத் தன்னாட்சி ஆணையங்கள் நில மேலாண்மை, வன மேலாண்மை, கிராம ஆணைய உருவாக்கம், பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு, திருமணம், சமூக நடைமுறைகள், சுரங்கம், கடன் கொடுத்தல், பரம்பரைச் சொத்து, கிராம மற்றும் நகர நிலையிலான கொள்கைகள் ஆகியவை குறித்து சட்டங்களை இயற்ற முடியும்.

## 'பதாய் துஹார் பரா' திட்டம்

- சத்தீஸ்கரின் முதல்வர் பூபேஷ் பாகேல் அவர்கள் 'பதாய் துஹார் பரா' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.

- கொரோனா தீநுண்மி பெருக்கத்தால், வகுப்புகள் இடைநிறுத்தப் படுவதால் பள்ளி மாணவர்கள் அந்தந்த இடங்களிலிருந்தே கல்வி கற்றுக் கொள்ள இது உதவுகிறது.
- மேலும் அம்மாநிலத்தில் பின்வரும் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் படும் என்றும், புதிய நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்கான குழுக்கள் அமைக்கப் படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
    - புளூடூத் அடிப்படையிலான திட்டம் 'புல்டு கே போல்',
    - 'முக்கிய மந்திரி குடிசை ஸ்வஸ்திய யோஜனா',
    - 'ராதாபாய் நோயறிதல் மையத் திட்டம்.

## மஞ்சள் சங்கிலி இ - வணிகத் தளம்

- நாகாலாந்தின் முதல்வரான நீபியு ரியோ அவர்கள், 'மஞ்சள் சங்கிலி' என்ற ஒரு மின் - வணிகத் தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இது உள்ளூர் வணிகம் மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதே பெயரில் அலைபேசிச் சேவைகளுக்கான ஒரு செயலியும் வெளியிடப் பட்டு உள்ளது.
- இந்தத் தளத்தைப் பயன்படுத்தி எந்தவொரு விற்பனையாளர் அல்லது சேவை வழங்குநர் அல்லது தனிநபர் அல்லது குழு ஆகியோர் இதில் பதிவு செய்து, வாடிக்கையாளர்கள் வாங்குவதற்காக வேண்டி தங்கள் தயாரிப்புகள், திறன்கள் அல்லது சேவைகளை இதில் பதிவேற்றலாம்.

## மறுதொடக்கம் மேகாலயா திட்டம்

- கோவிட்-19 தொற்றுநோயால் முடங்கியிருந்த வளர்ச்சி நடவடிக்கைகளைப் புதுப்பிக்க மேகாலயா முதல்வர் 'மறுதொடக்கம் மேகாலயா' எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
- இந்த நோக்கம் மாநிலத்தின் பொருளாதாரத்தைப் புதுப்பிக்க குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.

## மேகாலயாவில் ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல்

- ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சலானது, மேகாலயாவிற்குப் பரவியுள்ளது. இங்கு அஸ்ஸாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் தொற்று நோய் பரவியதன் காரணமாக ஏறத்தாழ 17,000 பன்றிகள் இறந்துள்ளன.
- இது வளர்ப்பு மற்றும் வனப் பன்றிகளைத் தாக்கும் ஒரு கொடிய மற்றும் தொற்றும் தன்மையுள்ள ஹெமொர்ஹஜிக் வைரஸ் நோயாகும்.
- இந்த நோயானது முதன்முதலில் 1909 ஆம் ஆண்டில் கென்யாவில் கண்டறியப் பட்டது. அதன் பின்னர் ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் இது கண்டறிய ப்பட்டது.
- உலக விலங்குச் சுகாதார அமைப்பின் படி, இந்நோயானது ஆஸ்பாவிரிடே எனும் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வகை டிஎன்ஏ வைரஸினால் அதிக அளவில் ஏற்படுகின்றது.
- இந்த வைரசானது உண்ணிகளின் மூலம் பரவுகின்றது. இது தொற்றுள்ள பன்றிகள், மலம் மற்றும் உடல் திரவங்கள் ஆகியவற்றுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் தொடர்பின் மூலம் பரவுகின்றது.

## இருப்பிடத்தை (வாழும் இடம்) அடிப்படையாகக் கொண்டு பணி இட ஒதுக்கீடு

- ❖ சமீபத்தில் மத்தியப் பிரதேச மாநில முதல்வரான சிவராஜ் சிங் சௌகான் அவர்கள் அந்த மாநிலத்தின் அரசுப் பணிகள் அனைத்தும் "அம்மாநிலத்தின் மைந்தர்களுக்கு" மட்டுமே வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.
- ❖ ஆனால் இந்திய அரசியலமைப்பின் பின்வரும் சரத்துகள் பிறப்பிடத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கின்றது.
- ❖ சரத்து 16 : இந்த சரத்தானது பிறப்பிடம் அல்லது இருப்பிடத்தின் அடிப்படையில் மாநிலங்கள் அரசு வேலைவாய்ப்பு விவகாரங்களில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கின்றது.
- ❖ சரத்து 16(2) : இது ஒரு மாநிலத்தில் அரசு வேலைவாய்ப்பு (அ) பதவியைப் பொறுத்த வரையில் எந்தவொரு குடிமகன்களும் மதம், இனம், சாதி, பாலினம், வம்சாவளி, பிறப்பிடம், இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப் படக் கூடாது என்று கூறுகின்றது.
- ❖ சரத்து 16(3)-ல் உள்ள விதிவிலக்கு : இந்தப் பிரிவானது எந்தவொரு மாநிலத்திலும் அரசுப் பணிகளுக்காக வேண்டி "இருப்பிடம்" குறித்து குறிப்பிடப் பட்டுள்ள ஒரு சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றலாம் என்ற விலக்கு அளித்துள்ளது.
- ❖ எனினும், இது நாடாளுமன்றத்தால் மட்டுமே மேற்கொள்ள முடியும். இதனை மாநிலச் சட்டமன்றங்கள் மேற்கொள்ள முடியாது.

## தும்பி மகா உட்சவம் 2020

- ❖ இது கேரளாவில் கொண்டாடப்படும் முதலாவது மாநில தும்பித் திருவிழாவாகும்.
- ❖ இயற்கைக்கான உலகளாவிய நிதியம் - இந்தியா (World Wide Fund for Nature-India) அரசு அலகானது இந்தத் திருவிழாவிற்காக ஒடோனேட் ஆய்வுகளுக்கான சமூகம் (Society for Odonate Studies) மற்றும் தும்பி புராணம் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.
- ❖ தும்பித் திருவிழாவானது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.




## ஜார்க்கண்ட் அரசின் புதிய சின்னம்

- ❖ ஜார்க்கண்ட் ஆனது தனது மாநிலத்திற்கான புதிய சின்னத்தை வெளியிட்டுள்ளது.
- ❖ அசோகத் தூண் ஆனது அதன் மையத்தில் இடம் பெற்றுள்ளது.
- ❖ இது இந்தியாவின் சிறந்த ஒத்துழைப்பு கூட்டாட்சித் தன்மையையும் அதில் ஜார்க்கண்ட் மாநிலத்தின் பங்களிப்பையும் எடுத்துக் காட்டுகின்றது.




## தன்வந்திரி ரதம்

- இந்த முன்னெடுப்பின் கீழ் தில்லி காவல் துறைக் குடும்பங்களுக்குச் சுகாதாரச் சேவைகள், அவர்களது வீடுகளுக்கேச் சென்று வழங்கப்பட உள்ளது.
- இந்தச் சேவைகளை அளிக்கும் நடமாடும் வாகனமானது "தன்வந்திரி ரதம்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- தொடங்கப்பட்டு உள்ள இந்த தன்வந்திரி ரதம் ஆனது "ஆயுரக்சா" என்பதின் தொடர்ச்சியாகும்.
- ஆயுரக்சா என்பது அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் மற்றும் தில்லி காவல் துறையின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இது கோவிட் – 19 தொற்றுக்கான முன்களப் பணியாளர்களின் சுகாதார நலத்தைப் பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## லிங்கராஜா ஆலயத்தைப் புதுப்பித்தல்

- ஒடிசா மாநில அரசானது 350 ஆண்டு கால பழமையான கட்டமைப்பு கொண்ட, 11வது நூற்றாண்டைச் சேர்ந்த லிங்கராஜா ஆலயத்தைப் புதுப்பிக்க முடிவு செய்து உள்ளது.
- மேலும், அம்மாநில அரசானது அந்த ஆலயம் மற்றும் பிந்துசாகர் ஏரி ஆகியவற்றிற்கிடையே ஒரு தடையற்ற வகையிலான போக்குவரத்தை ஏற்படுத்தவும் முடிவு செய்து உள்ளது.
- 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ள இந்த லிங்கராஜா ஆலயமானது சிவன் தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ளது. இது புவனேஸ்வர் நகரின் மிகப்பெரிய ஆலயமாகக் கருதப் படுகின்றது.



### இந்தியாவின் நீளமான நதி இழுவை வண்டி

- பிரம்மபுத்திரா நதியின் வடக்கு மற்றும் தெற்குக் கரைகளை இணைக்கக் கூடிய குவஹாத்தி பயணிகள் இழுவை வண்டித் திட்டமானது தொடங்கி வைக்கப் பட்டு உள்ளது.
- இந்த இழுவை வண்டிச் சேவையானது 1.8 கிலோ மீட்டர் நீளமுடையது ஆகும். இது இந்தியாவில் நதியின் மீது அமைந்த மிக நீளமான இழுவை வண்டித் தொலைவாகும்.



### முதல் கடற்சார் மருத்துவ ஊர்தி

- கேரள அரசானது மிகவும் திறமையான மீட்புப் பணியை வழங்குவதற்காக பிரதீக்சா என்ற கடற்சார் மருத்துவ ஊர்தி சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஒரே நேரத்தில் ஐந்து பேருக்குத் தீவிரக் கவனிப்பை வழங்கும் திறன் கொண்டது.
- பிரத்யாஷா மற்றும் காருண்யா ஆகியவை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட இருக்கும் பிற கடற்சார் மருத்துவ ஊர்திகளாகும்.
- இவை பின்வருமாறு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட உள்ளது,
    - திருவனந்தபுரத்தில் பிரதீக்சா,
    - எர்ணாகுளத்தில் பிரத்யாஷா,
    - கோழிக்கோட்டில் காருண்யா.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### பர்ன்ட் சுகர் - புத்தகம்

- அவ்னி தோஷி எழுதிய முதல் புதினமான 'பர்ன்ட் சுகர்' (எரிக்கப்பட்ட சர்க்கரை) ஐக்கிய இராச்சியத்தில் (இங்கிலாந்து) வெளியிடப் பட்டுள்ளது.
- அதே புதினத்தின் பதிப்பு இந்தியாவில் 'கேர்ள் இன் ஒயிட் காட்டன்' (Girl in White Cotton) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- மதிப்பு மிக்க 2020 ஆம் ஆண்டிற்கான புக்கர் பரிசின் காத்திருப்புப் பட்டியலில் உள்ள 13 ஆசிரியர்களின் பதிப்புகளில் இதுவும் ஒன்றாகும்.
- இங்கிலாந்து அல்லது அயர்லாந்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வெளியிடப்படும் அந்தந்த ஆண்டுகளின் சிறந்த புத்தகத்திற்கு இந்த விருதானது வழங்கப் படுகிறது.




## பாடி பவஜலாலு - புத்தகம்

- இந்தியாவின் துணைத் தலைவரான எம்.வெங்கையா நாயுடு, “பாடி பவஜலலு” புத்தகத்தை இணைய நிகழ்ச்சியின் வழியில் வெளியிட்டார்.
- இது மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.ஜெய்ப்பால் ரெட்டி எழுதிய 'பத்து கருத்தியல்கள்' (Ten Ideologies) என்ற புத்தகத்தின் தெலுங்குப் பதிப்பாகும்.




## புவி அமைப்பு அறிவியலில் சிறந்து விளங்குவதற்கான தேசிய விருதுகள்

- இந்த விருதுகளை புவி அறிவியல் அமைச்சகமானது அறிவித்துள்ளது.
- இந்த அமைச்சகமானது பேராசிரியர் அசோக் சாஹ்னிக்கு உயிர்ப் பாறைப்படிவியல் (பயோஸ்டிராடிகிராபி), புவியியல் (Geology) மற்றும் முதுகெலும்பு தொல்லுயிரியல் (Vertebrate Palaeontology) ஆகிய துறைகளில் பெரும் பங்களிப்பு செய்ததற்காக 2020 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனை விருதை வழங்கியுள்ளது.
- பெருங்கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருதானது டாக்டர் வி.வி.எஸ்.எஸ். சர்மா அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- அவர் விசாகப்பட்டினத்தில் உள்ள தேசியக் கடல்சார் நிறுவனத்தின் ஒரு மூத்தக் கொள்கை விஞ்ஞானி ஆவார்.
- கோவாவின் துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் இயக்குநர் எம்.ரவிச்சந்திரன் அவர்களுக்குக் கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

## திருவாளர் மக்களாட்சி

- ❖ தைவானின் முன்னாள் அதிபரான திரு. லீ டெங்-குய் அவர்கள் தைவானின் தைபய் நகரில் காலமானார்.
- ❖ இவர் தைவானில் சர்வாதிகார ஆட்சியை ஒழித்ததற்காக "திருவாளர் மக்களாட்சி" என்று வெகு சிறப்பாக அறியப்படுகின்றார்.

## உணவு சார்ந்த தொலைநோக்குப் பார்வை 2050

- ❖ அமெரிக்காவைச் சேர்ந்த ராக்பெல்லர் அமைப்பானது உணவு சார்ந்த தொலைநோக்குப் பார்வை 2050 என்ற ஒன்றிற்காக உலகின் முதல் 10 தொலைநோக்குப் பார்வை கொண்ட நிறுவனங்களில் ஒன்றாக ஹைதராபாத்தைச் சேர்ந்த ஓர் இலாப நோக்கற்ற நிறுவனமான நந்தி அமைப்பை (Naandi Foundation) தேர்ந்தெடுத்துள்ளது.
- ❖ இந்த மாதிரியானது "ABCDEFGH" எனும் கட்டமைப்பான விவசாயம், உயிரியல், உரம், பரவலாக்கப்பட்ட முடிவு எடுக்கும் திறன், தொழில்முனைவோர்கள், குடும்பங்கள், உலகச் சந்தைகள், தலைமைத்துவம் மற்றும் தங்களது தலைமை குறித்த தற்போதைய அணுகுமுறைகள் ஆகியவற்றைப் பின்பற்றும் உணவு சார்ந்த தொலைநோக்குப் பார்வை – 2050 என்பதற்கு இட்டுச் செல்லும்.

## நிகழ்நேர நாட்டுப்பற்று கொண்ட திரைப்படத் திருவிழா

- ❖ தேசியத் திரைப்பட மேம்பாட்டுக் கழகமானது, தன்னளவில் முதலாவது இதே வகையைச் சேர்ந்த ஒரு திரைப்படத் திருவிழாவை நடத்துகின்றது.
- ❖ காணொலி முறையிலான இந்தத் திரைப்படத் திருவிழாவானது மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்தினால் 2020 ஆம் ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக கொண்டாடப்பட உள்ளது.
- ❖ இந்தத் திருவிழாவானது இந்தியாவின் விடுதலைப் போராட்ட வீரர்களின் வீரத்தைக் குறிக்கும் இந்திய வரலாற்றை எடுத்துக்காட்டும். இது உலகம் முழுவம் வாழும் இந்தியர்களிடையே தற்போதைய நிலையில் திருவிழா மற்றும் நாட்டுப் பற்று குறித்த மனநிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அஜய் தியாகி

- ❖ செபி தலைவரான அஜய் தியாகி அவர்களுக்கு பிப்ரவரி 2022 வரையிலான 18 மாதப் பணி நீட்டிப்பானது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த முடிவுக்கு பிரதமர் தலைமையிலான நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது.

- மார்ச் 1, 2020 அன்று அவரது மூன்று ஆண்டு பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னரே அரசாங்கமானது அவருக்குப் பணியில் மேலும் 6 மாத கால நீட்டிப்பை வழங்கியது.

## ஜான் ஹியூம்

- அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரும், வடக்கு அயர்லாந்தின் முக்கிய அரசியல்வாதியுமான ஜான் ஹியூம் சமீபத்தில் காலமானார்.
- 1998 ஆம் ஆண்டில் புனித வெள்ளி ஒப்பந்தத்தில் திரு.ஹியூம் அவர்களின் சமாதானப் பேச்சுவார்த்தையானது மிகவும் முக்கிய பங்கு வகித்தது.
- புனித வெள்ளி ஒப்பந்தம் அல்லது பெல்ஃபாஸ்ட் ஒப்பந்தம் என்பது ஏப்ரல் 10, 1998 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட ஓர் இரட்டை ஒப்பந்தமாகும்.
- இது வடக்கு அயர்லாந்தில் 1960 ஆம் ஆண்டுகளில் இருந்து அரசியல் மோதலாக வடிவம் கொண்டிருந்த பெரும்பாலான வன்முறைத் தொல்லைகளின் முடிவுக்கு வழி வகுத்தது.
- வடக்கு அயர்லாந்தில் தற்போது உள்ள அரசாங்க முறையானது இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது.

## பிரேம் பாட்டியா விருது 2020

- இந்த ஆண்டிற்கான பிரேம் பாட்டியா விருதானது,
  - 'இந்த ஆண்டின் சிறந்த அரசியல் அறிக்கை'க்காக இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் தீபங்கர் கோஸ் அவர்களுக்கும்
  - 'ஆண்டின் சிறந்த சுற்றுச்சூழல் அறிக்கை'க்காக இந்தியக் கிராமப்புற மக்கள் காப்பகம் (PARI - People's Archive of Rural India) எனும் ஓர் இலாப நோக்கற்ற பத்திரிகை வலைதளத்திற்கும் வழங்கப்படுகிறது.
- பிரபலப் பத்திரிகையாளர் பிரேம் பாட்டியாவின் நினைவாக பிரேம் பாட்டியா விருதுகள் 1995 ஆம் ஆண்டில் பிரேம் பாட்டியா நினைவு அறக்கட்டளையால் நிறுவப் பட்டது.

## GYTI விருதுகள் 2020

- 2020 ஆம் ஆண்டின் காந்திய இளம் தொழில்நுட்ப புத்தாக்க விருதுகளானது ஐஐடி-கரக்பூரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவிற்கு வழங்கப் பட்டுள்ளது.
- இது சூரிய ஒளியின் கீழ் உலர்வதற்காக வைக்கப்பட்டுள்ள ஈரமான ஆடையிலிருந்து மின்சாரத்தைத் தயாரித்தலுக்கான ஒரு நடைமுறையை உருவாக்கியதற்காக அவர்களுக்கு வழங்கப் படுகின்றது.
- இதே விருதானது ஐஐடி-கரக்பூரைக் சேர்ந்த மற்றொரு குழுவிற்கும் தனித் தனியாக வழங்கப் பட்டுள்ளது. இது அணியக் கூடிய மற்றும் நெகிழ்வான மின்னணு சாதனங்கள், ஆற்றல் பாதுகாப்பு மற்றும் வெப்ப மேலாண்மை குறித்த பிரச்சினைகளைக் களைந்ததற்காக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## அபநிந்திரநாத் தாகூரின் 150வது பிறந்த தினம்

- தேசிய நவீனக் கலைக் கூடமானது அபநிந்திரநாத் தாகூரின் 150வது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக "புகழ்பெற்ற பாடல் இயற்றுபவரான

அபநிந்திரநாத் தாகூர்" என்ற தலைப்பு கொண்ட ஒரு காணொலி வாயிலான சுற்றுலாவை நடத்துகின்றது.

- இந்தியாவில் உள்ள வங்காளக் கலைப் பள்ளியின் மிகச் சிறந்த கலைஞர்களில் இவரும் ஒருவராவார்.
- இவர் இந்தியக் கலையில் சுதேசி விழுமியங்களின் மீதான முதலாவது மிகப்பெரிய ஆதரவாளர் ஆவார்.
- இவர் முதலாவதாக இந்தியக் கிழக்கிந்திய கலைச் சமூகம் என்ற ஒன்றை உருவாக்கினார். பின்னர் இவர் வங்காளக் கலைப் பள்ளியை ஏற்படுத்தினார்.
- இவருடைய சிறந்த ஓவியங்கள் பின்வருமாறு : பாரத மாதா, தி பாசிங் ஆப் ஷாஜகான் (1900), என்னுடைய தாய் (1912-13), பேரிலேண்ட் விளக்கம் (1913), பயணத்தின் முடிவு (1913).




## எம் எஸ் சுவாமிநாதன் விருது

- தெலுங்கானா மாநில வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான V. பிரவீன் ராவ் என்பவர் 2017-19 காலக் கட்டத்திற்கான 7வது டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் விருதை வென்றுள்ளார்.
- இந்த விருதானது வேளாண் ஆராய்ச்சி, கற்பித்தல், மற்றும் நிர்வாகத்தில் அவரின் பங்களிப்புகளை அங்கீகரிக்கின்றது.
- பிரவீன் ராவ் அவர்கள் இந்தியா, இஸ்ரேல், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் நுண் நீர்ப்பாசனம் குறித்த 13 ஆராய்ச்சிகள் மற்றும் 6 ஆலோசகத் திட்டங்களைக் கையாண்டுள்ளார்.

## பத்திரிக்கைத் துறையில் ஆசியக் கல்லூரி விருது 2019

- பத்திரிக்கைத் துறையின் ஆசியக் கல்லூரி விருது – 2019 என்பதின் கீழ்
  - புலன் விசாரணை பத்திரிக்கைத் துறைக்கான விருது நிதின் சேதிக்கும்
  - 2019 ஆம் ஆண்டின் சமூக தாக்க பத்திரிக்கைத் துறைக்கான K.P நாராயண குமார் நினைவு விருது சிவ் சகாய் சிங்கிற்கும் வழங்கப் பட்டுள்ளது.

## வீரதீர செயல் மற்றும் காவல் துறை விருதுகள்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ஆயுதப் படை வீரர்கள் மற்றும் துணை இராணுவப் படை வீரர்கள் ஆகியோருக்கு 84 விருதுகள் மற்றும் பதக்கங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- இந்த விருதுகள் 1 கீர்த்தி சக்ரா, 9 சௌரிய சக்ரா, 5 சேனா ஆணைப் பதக்கங்கள் (வீரதீர செயல்), 60 சேனா பதக்கங்கள் (வீரதீர செயல்), 4 நவோ சேனா விருதுகள் (வீரதீர செயல்), மற்றும் 5 வாயு சேனா விருதுகள் (வீரதீரச் செயல்), ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.
- நாட்டின் இரண்டாவது உயரிய அமைதி வழி வீரதீரச் செயல் விருதான கீர்த்தி சக்ரா விருதானது ஜம்மு காஷ்மீர் காவல்துறையின் தலைமைக் காவலரான அப்துல் ரஷித் கலாஸ் (இறப்பிற்குப் பின்பு) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சௌரிய சக்ரா என்பது மூன்றாவது உயரிய அமைதிவழி வீரதீரச் செயல் விருதாகும். அசோக் சக்ரா என்பது உயரிய அமைதிவழி வீரதீரச் செயல் விருதாகும்.
- மொத்தமாக 926 காவல் துறையினருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- வீரதீரச் செயலுக்கான காவல்துறை விருதுகள் 215 காவல் துறையினருக்கு, அவர்களின் வீரதீரச் செயலைப் பாராட்டி வழங்கப்பட்டுள்ளது.
- தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவரின் காவல் துறை விருதானது 80 காவல் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சிறப்பான (மெச்சத்தக்க) பணிக்கான காவல்துறை விருதானது 631 காவல் துறையினருக்கு வழங்கப் பட்டுள்ளது.

## தேசிய விளையாட்டு விருதுகள் 2020

- 2020 ஆம் ஆண்டின் தேசிய விளையாட்டு விருதுகளானது மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தினால் அறிவிக்கப் பட்டு உள்ளது.
- 7 பிரிவுகளில் 73 வெற்றியாளர்கள் தங்களுக்கான விருதுகளை குடியரசுத் தலைவரிடமிருந்துப் பெற உள்ளனர்.
- தற்பொழுது தேசிய விளையாட்டு விருதுகள் வரலாற்றில் முதன்முறையாக ராஜிவ் காந்தி கேல் ரத்னா விருதுக்காக 5 விளையாட்டு வீரர்களும் அர்ஜுனா விருதுக்காக 27 தடகள வீரர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- மேலும், 8 பாரா (மாற்றுத் திறனாளிகள்) விளையாட்டு ஆளுமைகள் 2020 ஆம் ஆண்டின் தேசிய விளையாட்டு விருதுகளில் இடம் பிடித்துள்ளனர்.
- சச்சின் டெண்டுல்கர் (முதலாவது), மகேந்திர சிங் டோனி மற்றும் விராத் கோலி ஆகியோருக்குப் பிறகு ராஜிவ் காந்தி கேல் ரத்னா விருதைப் பெறும் 4வது கிரிக்கெட் வீரர் ரோகித் சர்மா ஆவார்.
- வினேஷ் போகாட் 2018 ஆம் ஆண்டு ஆசியப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முதலாவது பெண் மல்யுத்த வீரர் ஆவார்.
- இந்த விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மூன்றாவது ஹாக்கி வீரர் மற்றும் முதலாவது பெண் ஹாக்கி வீரர் ராணி ஆவார்.

| ராஜிவ் காந்தி கேல் ரத்னா விருது | |
|---|---|
| **ரோகித் சர்மா** | கிரிக்கெட் |
| **மாரியப்பன் தங்கவேலு** | பாரா தடகளம் |
| **மாணிக்க பத்ரா** | மேசைப் பந்து |
| **வினேஷ் போகாட்** | மல்யுத்தம் |
| **ராணி ராம்பால்** | ஹாக்கி |

## மில்லேனியம் (பழமையான) கூட்டிணைவு சுற்று 6 & கோவிட் – 19 புத்தாக்க சவால் – விருது

- இது இந்தியாவின் 5 முக்கியமான துறைகளில் 49 புத்தாக்கத் தீர்வுகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- மேலும், 16 புதுமைப் படைப்பாளர்களுக்கு கோவிட் – 19 புத்தாக்க சவால் பிரிவுகளில் விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.
- இந்தியாவில் உள்ள 5 முக்கியமான துறைகள் கல்வி, சுகாதாரம், தூய்மையான ஆற்றல், நீர் & துப்புரவு, வேளாண்மை ஆகியவையாகும்.
- இந்த விருதளிக்கப்பட்ட புத்தாக்கப் படைப்புகள், திட்டப் பங்காளர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் ஆகியோரின் உதவியுடன் எப்ஜசிசிஜயினால் மேற்கொள்ளப் பட்டு கடுமையான மதிப்பீட்டுச் செயல்முறைகளுக்குப் பின்பே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.




## சுவச்சதா ஹை சேவா 2019 விருது

- நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகமானது (NLC - Neyveli Lignite Corporation) சுவச்சதா ஹை சேவா திட்டத்தின் செயல்பாடுகளில் தனது சிறப்பான பங்களிப்பை அளித்ததற்காக இந்த விருதை வென்றுள்ளது.
- இந்த விருதானது NLC நிறுவனத்தின் 3 அலகுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - நகர நிர்வாக அலுவலகம் – முதலாவது தரம்
    - முதலாவது வெப்ப ஆற்றல் நிலையம் : இரண்டாவது தரம்
    - சுரங்கத் துணை அலகுகள் – மூன்றாவது தரம்

## உலகின் அதிவேக மனித கால்குலேட்டர் பட்டம்

- நீலகந்த பானு பிரகாஷ் ஜோனல்லாகாடா (ஹைதராபாத்) என்பவர் மனநலக் கணக்கீடுகள் மீதான உலகக் கோப்பையில் இந்தியாவிற்கான முதலாவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இவர் உலகின் அதிவேக மனித கால்குலேட்டர் என்ற அடிப்படையில் 4 உலகச் சாதனைகள் மற்றும் 50 லிம்கா சாதனைகளை கையில் வைத்துள்ளார்.
- இந்தப் போட்டியில் லெபனான் நாட்டைச் சேர்ந்த முகமது எல் மிர் என்பவர் வெள்ளிப் பதக்கத்தையும் ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த அஸ்மிதா பால் என்பவர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.
- இந்தியாவைச் சேர்ந்த ஆரியன் சுக்லா என்பவர் இதில் 4வது இடத்தைப் பிடித்து உள்ளார்.




# விளையாட்டுச் செய்திகள்

## லீவிஸ் ஹாமில்டன்

- பார்முலா ஒன் சாம்பியனான மெர்சிடஸ் அணியின் லீவிஸ் ஹாமில்டன் என்பவர் ஐக்கிய இராஜ்ஜியத்தின் சில்வர் ஸ்டோனில் உள்ள சில்வர் ஸ்டோன் சுற்றில் நடைபெற்ற பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ் (GP - Grand Prix) 2020 (பார்முலா ஒன் பிர்ரெலி பிரிட்டீஷ் கிராண்ட் பிரிக்ஸ் – 2020 என்ற அதிகாரப் பூர்வமாக அழைக்கப்படும்) என்பதை வென்றுள்ளார்.
- இவர் இந்தப் பட்டத்தைப் பெறுவது தற்பொழுது 7வது முறையாகும்.
- பிரிட்டீஷ் GPயில் அதிக அளவில் வெற்றி பெறும் ஒரே கார் பந்தய வீரர் இவராவார்.

## எம் எஸ் தோனி மற்றும் சுரேஷ் ரெய்னா ஓய்வு

- இந்தியக் கிரிக்கெட் வீரர்களான எம் எஸ் தோனி மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகியோர் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியிலிருந்து தங்களது ஓய்வை அறிவித்து உள்ளனர்.




- தோனிக்கு 2018 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருதும் 2009 ஆம் ஆண்டில் பத்ம ஸ்ரீ விருதும் 2007-08ல் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதும் வழங்கப்பட்டுள்ளன.
- இவரது தலைமையின் கீழ் இந்தியா 2011 ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்றுள்ளது.
- இந்திய இராணுவமானது இவருக்கு 2011 ஆம் ஆண்டில் லெப்டினன்ட் படைத் தலைவர் என்ற கௌரவ அந்தஸ்தை வழங்கியுள்ளது.
- இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியில் சதத்தை எட்டிய முதல் இந்திய வீரர் ரெய்னா ஆவார்.
- கிறிஸ் கெயிலுக்குப் பிறகு ஐபிஎல் போட்டியில் 100 சிக்சர்களை அடித்த உலகின் இரண்டாவது மற்றும் முதலாவது இந்திய வீரர் இவராவார்.

## 600 டெஸ்ட் விக்கெட்டுகளை எடுத்த முதலாவது வேகப் பந்து வீச்சாளர்

- பாகிஸ்தானுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 600வது டெஸ்ட் விக்கெட்டினை எடுத்து சாதனை படைத்த முதலாவது வேகப் பந்து வீச்சாளர் இங்கிலாந்து அணியைச் சேர்ந்த ஜேம்ஸ் ஆண்டர்சன் ஆவார்.
- 600றகும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்திய குழுவான இலங்கையைச் சேர்ந்த முத்தையா முரளீதரன் (800), ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷேன் வார்ன் (708) மற்றும் இந்தியாவைச் சேர்ந்த அனில் கும்பளே (619) ஆகிய 3 புகழ்பெற்ற சுழல் பந்து வீச்சாளர்களைக் கொண்ட குழுவில் இணைந்த நான்காவது வீரர் இவராவார்.



# முக்கிய தினங்கள்

## முஸ்லீம் பெண் உரிமைகள் தினம் – ஜூலை 31

- இது உடனடி முத்தலாக்கிற்கு எதிரான சட்டத்தின் முதலாவது நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமைகளின் பாதுகாப்பு) சட்டம், 2019 என்று முறையாக அழைக்கப்படும் இந்த சட்டம் கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.
- இது முஸ்லீம் ஆண்களினால் வழங்கப்படும் உடனடி விவாகரத்து நடைமுறையைத் தடுக்கின்றது.
- இந்தச் சட்டத்தை மீறுவோர்க்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப் படும்.




## உலகத் தாய்ப்பால் ஊட்டல் வாரம்

- இது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தின் முதலாவது வாரத்தில் (ஆகஸ்ட் 01 முதல் 07 வரை) அனுசரிக்கப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்த வாரத்திற்கான கருத்துரு, "ஆரோக்கியமான புவி கிரகத்திற்காக வேண்டி தாய்ப்பால் ஊட்டலை ஆதரித்தல்" என்பதாகும்.




- இத்தினமானது 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இன்னோசென்ட்டி பிரகடனம் (Innocenti Declaration) கையெழுத்திடப் பட்டதைத் தொடர்ந்து, அன்று முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இது உலகத் தாய்ப்பால் ஊட்டல் செயல் கூட்டிணைவு (WABA - World Alliance for Breastfeeding Action), உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.
- WABA என்பது தாய்ப்பால் ஊட்டலுக்கான தடைகளை ஒழிப்பதற்காக உலக அளவில் பணியாற்றும் மக்கள் குழுவைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

## உலக சமஸ்கிருத தினம் – ஆகஸ்ட் 03

- இந்திய அரசானது 1969 ஆம் ஆண்டில் ஷர்வண பூர்ணிமா தினத்தன்று உலக சமஸ்கிருத தினத்தை அனுசரிக்க முடிவு செய்தது.
- அகில இந்திய வானொலியானது இந்தத் தினத்தன்று தனது முதலாவது சிறப்பு நிகழ்ச்சியான "பகுஜன் பாஷா-சமஸ்கிருத பாஷா" என்ற ஒரு நிகழ்ச்சியை ஒலிபரப்பியது.
- 2020 ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கையானது பள்ளி மற்றும் உயர் நிலைக் கல்வி அளவில் சமஸ்கிருத மொழியை ஊக்கப்படுத்தும் பன்மொழித்துவத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஹிரோஷிமா தினம் – ஆகஸ்ட் 06




- ஹிரோஷிமா தினமானது 1945 ஆம் ஆண்டில் அமெரிக்காவினால் ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா மற்றும் நாகசாகியின் மீது அணு குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டதைக் குறிப்பதற்காக அனுசரிக்கப்படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் ஹிரோஷிமா தினமானது அணுகுண்டு வீசப்பட்டதின் 75வது ஆண்டைக் குறிக்கின்றது.
- இந்தத் தினமானது போரிற்கு எதிராக அமைதிவழி அரசியலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக நுரையீரல் புற்றுநோய் தினம் – ஆகஸ்ட் 01

- இது நுரையீரல் புற்று நோய்க்கான காரணங்கள் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்தும் அதன் தாக்கம் குறித்தும் நுரையீரல் புற்றுநோயின் அபாயங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான கல்வி இயக்கம் உருவாக்குவது குறித்தும் உலகம் முழுவதும் அதற்கான ஆரம்ப கால சிகிச்சை குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- உலக நுரையீரல் புற்றுநோய் தினப் பிரச்சாரமானது பின்வரும் சர்வதேச நுரையீரல் சுகாதாரத்திற்கான சமூக உறுப்பினர்களுடன் இணைந்து சர்வதேச சுவாச சமூக மன்றத்தினால் 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

- நுரையீரல் புற்றுநோய் ஆய்விற்கான சர்வதேச மன்றம் (IASLC - International Association for the Study of Lung Cancer).
- அமெரிக்காவில் உள்ள அமெரிக்க மார்பக மருத்துவர்கள் கல்லூரி.

❖ நுரையீரல் புற்றுநோயைக் கையாளும் தன்னளவில் உலகின் இதே வகையைச் சேர்ந்த மற்றும் ஒரு மிகப்பெரிய நிறுவனம் நுரையீரல் புற்றுநோய் குறித்த IASLC உலகக் கருத்தரங்கு ஆகும்.




## தேசிய எலும்பு மற்றும் கூட்டு தினம் – ஆகஸ்ட் 04

❖ இது சமூகத்தைப் பாதிக்கக் கூடிய ஒரு பொதுவான எலும்பியல் பிரச்சினைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, “சிதைகின்ற நோயின் குறைபாட்டைத் தடுத்தல்” என்பதாகும்.

❖ தேசிய எலும்பு மற்றும் கூட்டு தினமானது இந்திய எலும்பியல் மன்றத்தின் அப்போதைய தலைவரினால் 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.




## வெள்ளையனே வெளியேறு தினம் – ஆகஸ்ட் 09

❖ பாரத் சோடோ அந்தோலன் அல்லது ஆகஸ்ட் கிராந்தி இயக்கமானது 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 அன்று அகில இந்திய காங்கிரஸ் குழுவின் (AICC - All India Congress Committee) பம்பாய் அமர்வில் தொடங்கப்பட்டது.

- இந்த இயக்கமானது 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 அன்று குவாலியன் நீர்த்தொட்டி மைதானப் பகுதியில் தொடங்கப்பட்டது.
- இது ஆகஸ்ட் கிராந்தி மைதானம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- இத்தினத்தில் ஆங்கிலேயர்கள் வெளியேறுவதற்கான ஒரு இறுதிக் கட்டப் போராட்டத்திற்கு வேண்டி மகாத்மா காந்தி இந்திய மக்களுக்கு "செய் அல்லது செத்து மடி" என்ற முழக்கத்தை வழங்கினார்.
- இந்த இயக்கத்தின் முதல் பாதியானது ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களுடன் அமைதியான முறையில் நடைபெற்றது.
- ஆனால் இந்த இயக்கத்தின் 2வது பாதியானது வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அரசுக் கட்டிடங்கள் & இரயில் நிலையங்கள் ஆகியவற்றிற்குத் தீ வைத்தல் போன்ற வன்முறைச் சம்பவங்களுடன் நடத்தப் பட்டது.
- முக்கியத் தலைவர்களின் கைதுக்குப் பின்னர், இளம் வயது தலைவர் அருணா ஆசப் அலி அவர்கள் AICC அமர்விற்குத் தலைமை தாங்கினார்.




## தேசிய கைத்தறி நாள் - ஆகஸ்ட் 7

- 1905 ஆம் ஆண்டில் இதே தேதியில் தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தின் நினைவாக இது கொண்டாடப் படுகிறது.
- பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வங்காளத்தைப் பிரிப்பதை எதிர்த்து கல்கத்தா நகர மன்றத்தில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டது.




- இது முதன்முதலில் 2015 ஆம் ஆண்டில் தேசிய கைத்தறி தினமாக அறிவிக்கப் பட்டது.
- இது ஜவுளி அமைச்சகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் கொண்டாடப்படுகிறது.

## உலகின் பழங்குடி மக்களுக்கான சர்வதேச நாள் - ஆகஸ்ட் 9

- விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் இத்தினத்தின் நோக்கங்களாகும்.
- இந்த நாளை முதன்முதலில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அறிவித்தது.
- 1995-2004 ஆண்டு உலகின் பழங்குடி மக்களின் சர்வதேச தசாப்தமாக அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டின் கருப்பொருளானது "கோவிட்-19 மற்றும் பழங்குடி மக்களின் மீள்திறன்" என்பதாகும்.




## உலக உயிரி எரிபொருள் தினம் – ஆகஸ்ட் 10

- இந்தத் தினமானது வழக்கமான படிம எரிபொருட்களுக்கு மாற்றாக படிமமற்ற எரிபொருட்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உயிரி எரிபொருட்கள் பொதுவாக சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான பசுமை எரிபொருட்களாகும். இவற்றின் பயன்பாடு உலகளாவியப் பிரச்சினையான கார்பன் உமிழ்வு கட்டுப்படுத்துதலை மேற்கொள்கின்றது.
- 1893 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 அன்று, சர் ரூடல்ப் டீசல் (டீசல் என்ஜினைக் கண்டுபிடித்தவர்) என்பவர் முதன்முறையாக நிலக்கடலை எண்ணெய்யின் உதவியுடன் இயந்திர என்ஜினை வெற்றிகரமாக இயக்கினார்.
- எனவே இச்சாதனையைக் குறிப்பதற்காக, உலக உயிரி எரிபொருள் தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 10 அன்று அனுசரிக்கப்படுகின்றது.



- இந்தியாவில், மத்திய அரசானது 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் தேசிய உயிரி எரிபொருட்கள் கொள்கை – 2018 என்பதற்கு ஒப்புதல் அளித்தது.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் 20% எத்தனால் கலப்பு மற்றும் 5% உயிரி எரிபொருள் கலப்பு ஆகிய இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசியக் குடற்புழு நீக்க தினம் – ஆகஸ்ட் 10

- ஒவ்வொரு ஆண்டும் தேசியக் குடற்புழு நீக்க தினமானது பிப்ரவரி 10 மற்றும் ஆகஸ்ட் 10 ஆகிய 2 தினங்களில் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினங்கள் 1-19 வயதுடைய குழந்தைகளிடையே மண்ணிலிருந்துப் பரவும் குடற்புழு வகை என்று அழைக்கப்படும் குடற்புழுவை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இது 2015 ஆம் ஆண்டில் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் தினமானது மத்தியப் பெண்கள் & குழந்தை மேம்பாட்டுத் துறை அமைச்சகம் மற்றும் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப் படுகின்றது.

## உலக சிங்கங்கள் தினம் – ஆகஸ்ட் 10

- இத்தினமானது சிங்கங்கள் குறித்தும் சிங்கங்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் மக்களுக்குக் கல்வியறிவு ஏற்படுத்துவதையும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆசியச் சிங்கங்களின் ஒரே இயற்கை வாழிடம் கிர் காடுகளாகும்.
- இது 1965 ஆம் ஆண்டில் வனவிலங்குச் சரணாலயமாகவும் 1975 ஆம் ஆண்டில் தேசியப் பூங்காவாகவும் அறிவிக்கப் பட்டது.
- இந்தியாவில் காணப்படும் ஆசியச் சிங்கமானது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்புப் பட்டியலில் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- ஆசியச் சிங்கங்கள் பாதுகாப்புத் திட்டமானது 2018 ஆம் ஆண்டில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.

## உலக யானைகள் தினம் – ஆகஸ்ட் 12

- முதலாவது சர்வதேச யானைகள் தினமானது 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இது யானைகள் மற்றும் அவற்றின் வாழிடங்களின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப் படுகின்றது.
- நிகழ்நேர அடிப்படையில் மோதல்களின் மேலாண்மைக்கு ஆதரவளிப்பதற்காக "சுரக்சியா" எனப்படும் ஒரு தளத்தின் பீட்டா எனப்படும் சோதனைப் பதிப்பானது (Beta Version) இந்தியாவில் தொடங்கப்பட்டுள்ளது.

## தேசிய நூலகர்கள் தினம் – ஆகஸ்ட் 12

- S.R. ரங்கநாதன் என்பவரின் பிறந்த தின நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12

அன்று இந்தியாவில் தேசிய நூலக தினமானது அனுசரிக்கப் படுகின்றது.

❖ இது இந்தியாவில் நூலக அறிவியலின் வளர்ச்சிக்கு வித்திட்டது.




## சர்வதேச இளைஞர்கள் தினம் – ஆகஸ்ட் 12

❖ சர்வதேச இளைஞர்கள் தினமானது இளைஞர்கள் தொடர்பான கலாச்சார மற்றும் சட்டப்பூர்வ விவகாரங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 1999 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

❖ முதலாவது சர்வதேச இளைஞர்கள் தினமானது 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 அன்று அனுசரிக்கப் பட்டது.

❖ 2020 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "உலகளாவிய நடவடிக்கைக்கு இளைஞர்களின் பங்களிப்பு" என்பதாகும்.




## சர்வதேச இடது கைப் பழக்கம் உடையவர்கள் தினம்- ஆகஸ்ட் 13

❖ ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 13 ஆம் தேதி அன்று இடது கைப் பழக்கம் கொண்டவர்களின் தனித்துவத்தையும் வேறுபாடுகளையும் கொண்டாட இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.

❖ இது முதன்முதலில் 1976 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

❖ இடது கைப் பழக்கம் கொண்டவர்கள் எதிர்கொள்ளும் அன்றாடச் சிக்கல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ உலக மக்கள் தொகையில் சுமார் 10 சதவீதம் பேர் இடது கைப் பழக்கம் கொண்டவர்கள் ஆவர் மற்றும் இதில் ஆண்கள் அதிகமாக அடங்குவர்.

## உலக உடல் உறுப்பு தான நாள் - ஆகஸ்ட் 13

- உறுப்பு தானத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வைப் பரப்புவதையும், இறந்த பிறகு உறுப்புகளைத் தானம் செய்ய மக்களை ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது 2010 ஆம் ஆண்டில் 6வது உலக மற்றும் முதலாவது இந்திய உறுப்பு தான நாள் மற்றும் உறுப்பு தான காங்கிரஸை அறிமுகப்படுத்தியது.
- மகாராஷ்டிரா மாநிலமானது 2020 ஆண்டின் ஆகஸ்ட் 13 முதல் ஆகஸ்ட் 20 வரை உறுப்பு தான வாரத்தை அனுசரிக்கிறது.
- உறுப்பு நன்கொடைக்கு இரண்டு வகைகள் உள்ளன: அவை வாழும் போது தானம் செய்தல் மற்றும் இறந்த பின் தானம் செய்தல் ஆகியனவாகும்.

## வங்க தேசத்தில் தேசிய துக்க தினம் – ஆகஸ்ட் 15

- இது 1975 ஆம் ஆண்டு இத்தினத்தில் "தேசத் தந்தை" என்று வெகுவாக அறியப் படும் பங்காபந்து ஷேக் முஜிபூர் ரகுமான் கொல்லப்பட்டதை அனுசரிக்கின்றது.
- "முஜிப்" அல்லது "ஷேக் முஜிப்" என்று அறியப்படும் இவர் சுதந்திர நாடான "வங்க தேசத்தின்" முதன்மைச் சிற்பியாகக் கருதப் படுகின்றார்.
- முஜிப் தனது அரசியல் வாழ்நாளை 1949 ஆம் ஆண்டில் அவாமி லீக்கின் இணை நிறுவனராகத் தொடங்கினார்.
- 1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முஜிப் அந்நாட்டின் முதலாவது பிரதமராக உருவெடுத்தார்.
- முஜிப் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று ஒரு இராணுவப் புரட்சியின் போது கொல்லப் பட்டனர்.
- அவரது மகள்களில் ஒருவரான ஷேக் ஹசினா வாஸீத் (தற்பொழுது உயிருடன் இருக்கும்) வங்க தேசத்தின் தற்பொதைய பிரதமராக உள்ளார்.




## உலக புகைப்பட தினம் – ஆகஸ்ட் 19

- இந்தத் தினமானது புகைப்படத்தின் கலை, கைவினை மற்றும் வரலாறு ஆகியவற்றைக் கொண்டாடுகின்றது.
- இந்தத் தினமானது புகைப்படத் துறை குறித்த கருத்தாக்கங்களைப் பகிர்ந்து, அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் புகைப்படத் துறைக்குப் பங்களித்த கலைஞர்களை ஒன்று திரட்டுவதைக் குறிக்கின்றது.

- முதலாவது நீடித்த வண்ணப் புகைப்படமானது 1861 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது.
- முதலாவது டிஜிட்டல் புகைப்படமானது 1957 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

## உலக மனிதநேய தினம் – ஆகஸ்ட் 19

- இது பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் மனிதநேய சேவையைத் தேர்ந்தெடுத்த உண்மையான தலைவர்களை நினைவு கூர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2009 ஆம் ஆண்டில் இத்தினத்தை உலக மனிதநேய தினமாக அறிவித்தது.
- இந்த ஆண்டு உலக சுகாதார நிறுவனமானது பிறருக்கு உதவுவதற்கு தங்களது வாழ்நாளை அர்ப்பணித்தவர்களைக் கொண்டாடுவதற்காக வேண்டி "#Reallifeheros, Who have" ஒரு உலகப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.




## சத்பவனம் திவாஸ் – ஆகஸ்ட் 20

- இந்தத் தினமானது அனைத்து மதங்களைச் சேர்ந்த இந்திய மக்களிடையே தேசிய ஒருங்கிணைப்பு, அமைதி, பாசம் மற்றும் மத நல்லிணக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- ஆங்கில மொழியில் சத்பவனம் என்பது நல்லெண்ணம் மற்றும் உண்மை என்பதைக் குறிக்கும்.
- இது முன்னாள் பிரதமரான ராஜிவ் காந்தியின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றது.



## உலக கொசுக்கள் தினம் – ஆகஸ்ட் 20

- உலக கொசுக்கள் தினமானது 1897 ஆம் ஆண்டில் சர் ரொனால்டு ரோஸ் என்பவர் கொசுக்கள் மற்றும் மலேரியா பரவலுக்கு இடையில் உள்ள தொடர்பைக் கண்டுபிடித்த தினத்தை அனுசரிக்கின்றது.
- இந்தத் தினமானது உலகின் மிகவும் கொடிய விலங்கினால் பரவும் நோயான மலேரியா மற்றும் இதர நோய்களின் பரவல் பற்றிய அச்சுறுத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.




## இந்திய அக்சய உர்ஜா தினம் – ஆகஸ்ட் 20

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தினம் அல்லது இந்திய அக்சய உர்ஜா தினமானது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக 2004 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இந்திய அக்சய உர்ஜா ஆனது இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளத்தின் முக்கியத்துவத்தை அனுசரிக்கின்றது.
- குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்ந்து போகக் கூடிய வளங்களிலிருந்துப் பெறப்படும் ஆற்றல் “புதுப்பிக்க இயலாத ஆற்றல்” எனப்படும்.




## உலக மூத்த குடிமக்கள் தினம் – ஆகஸ்ட் 21

- இது 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் முதன்முதலில் பிரகடனப் படுத்தப்பட்டது.
- இது மூத்த குடிமக்களின் நிலை குறித்தும் வயதான நிலையில் அவர்களுக்கு ஆதரவளிப்பது குறித்தும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி தினம் – ஆகஸ்ட் 21

- இந்தத் தினமானது தீவிரவாதத் தாக்குதலினால் உயிரிழந்த, தாக்குதலுக்கு உள்ளான, பாதிக்கப்பட்ட, அதிர்ச்சிக்கு உள்ளான உலகம் முழுவதும் வாழும் தனிநபர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- ஒரு இணையதள உயர்நிலை நிகழ்வான, "மறக்கப்படாதது : தீவிரவாதத்தினால் பாதிக்கப் பட்டவர்களை நினைவு கூர்தலுக்கான கதைகள்" என்ற ஒரு நிகழ்வு நடத்தப் பட்டது.
- இத்தினமானது 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் தேர்தெடுக்கப் பட்டது. இத்தினமானது 2018 ஆம் ஆண்டில் முதன்முறையாக அனுசரிக்கப் பட்டது.




## மதம் அல்லது மத நம்பிக்கைகளின் அடிப்படையில் ஏற்பட்ட வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 22

- இது மறக்கப் பட்டு வந்த மக்களான கொடியச் செயல்களினால் பாதிக்கப் பட்டவர்கள் அல்லது உயிரிழந்தவர்களைக் கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இத்தினத்தை உலகமானது முதன்முறையாக 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 அன்று அனுசரித்தது.




## மதராஸ் தினம் – ஆகஸ்ட் 22

- இந்த ஆண்டானது மதராஸ் நகரின் (தற்பொழுது சென்னை) 381வது நிறுவன தினத்தை அனுசரிக்கின்றது.
- ஆங்கிலக் கிழக்கியக் கம்பெனியானது மதராசப் பட்டின கிராமத்தில் ஒரு நிலப் பத்திரத்தில் கையெழுத்திட்ட போது 1679 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 அன்று மதராஸ் நடைமுறைக்கு வந்தது.

- இது 1687 ஆம் ஆண்டில் முகலாயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.
- 1748 ஆம் ஆண்டில் மதராஸ் ஆங்கிலேயரிடம் திரும்ப ஒப்படைக்கப் பட்டது.
- விடுதலைக்குப் பின்பு, மதராஸ் தமிழ்நாட்டின் தலைநகரமாக மாறியது.
- 1998 ஆம் ஆண்டில் இந்நகரமானது சென்னை என்று பெயர் மாற்றப்பட்டது.

## அடிமை வர்த்தகம் மற்றும் அதன் ஒழித்தலை நினைவு கூறுவதற்கான அனுசரிப்பு தினம் – ஆகஸ்ட் 23

- இது விடுதலைக்காக போராடியவர்களையும், அவர்களின் பெயரில் அவர்களின் கதை மற்றும் விழுமியங்கள் ஆகியன தொடர்ந்து கற்பிக்கப் பட்டு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அட்லாண்டிக் பெருங்கடல் அடிமை வர்த்தகத்தை நினைவு கூறுவதற்காக யுனெஸ்கோவினால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- 1791 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், சாண்ட்டோ டோமிங்கோவில் (தற்பொழுது ஹய்தி மற்றும் டொமினிக் குடியரசு) ஒரு புரட்சியானது தொடங்கியது. இது அட்லாண்டிக் பெருங்கடல் அடிமை வர்த்தகத்தை ஒழிப்பதில் ஒரு முக்கியத் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இது அடிமை வர்த்தகம் மற்றும் காலனியவாதம் என்ற அடிமை முறையின் ஒழித்தலின் தொடக்கத்தைக் குறிக்கின்றது.

## ஸ்டாலினியவாதம் மற்றும் நாசிசம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறுவதற்கான ஐரோப்பிய தினம் – ஆகஸ்ட் 23

- இது சர்வாதிகார ஆட்சியினால் குறிப்பாக ஸ்டாலினிசம், வகுப்புவாதம், நாசிசம் மற்றும் பாசிசம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறுவதற்காக கறுப்புப் பட்டை தினம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது தீவிரவாதம், சகிப்புத் தன்மையின்மை மற்றும் ஒடுக்குமுறை ஆகியவற்றின் நிராகரிப்பைக் குறிக்கின்றது.
- இது 2008/2009 ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இது 2009 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனைத்து அமைப்புகளாலும் அனுசரிக்கப் படுகின்றது.

## தேசிய விளையாட்டுகள் தினம் – ஆகஸ்ட் 29

- தேசிய விளையாட்டுகள் தினமானது இந்திய ஹாக்கி வீரரான தயான் சந்தின் பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காகக் கொண்டாடப்படுகின்றது.
- ஹாக்கி வீரரான தயான் சந்த் 1936 ஆம் ஆண்டில் பெர்லின் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியின் தலைவராக விளையாடினார்.
- தயான் சந்த் அவர்கள் 1922 ஆம் ஆண்டில் தரைப் படை வீரராக இந்திய இராணுவத்தில் சேர்ந்தார்.
- இந்திய அரசு 2012 ஆம் ஆண்டு முதல் இவரது பிறந்த நாளை தேசிய விளையாட்டுகள் தினமாக அனுசரிக்க முடிவு செய்துள்ளது.




## தெலுங்கு மொழி தினம் – ஆகஸ்ட் 29

- இந்தத் தினமானது (ஆகஸ்ட் 29) புகழ்பெற்ற தெலுங்கு எழுத்தாளரான கிடுகு வெங்கட ராமமூர்த்தி அவர்கள் இத்தினத்தில் பிறந்ததன் காரணமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- பேசப்படும் தெலுங்கு மொழியானது எழுதப்படும் தெலுங்கு மொழியிலிருந்து வேறுபட்டதாக உள்ளதால் எழுதப்படும் தெலுங்கானது புரிந்து கொள்ளவோ அல்லது தொடர்பு கொள்ளவோ உதவுவதில்லை.
- ராமமூர்த்தியினால் பேசப்பட்ட தெலுங்கு மொழியானது உயர் தரநிலை கொண்டதாகவும் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

## சர்வதேச அணு ஆயுதச் சோதனைகளுக்கு எதிரான தினம் – ஆகஸ்ட் 29

- இது அணு ஆயுத வெடிப்புச் சோதனைகள் அல்லது எந்தவொரு இதர அணு ஆயுத வெடிப்புகளின் தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- இது முதன்முறையாக 2010 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது. அன்று முதல் இது ஒவ்வொரு ஆண்டும் அணு ஆயுத சோதனையைத் தடை செய்வதற்கான தேவையை வலியுறுத்தி அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இது 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதியன்று கஜகஸ்தான் நாட்டில் செமிபாலடின்ஸ்க் என்ற அணு ஆயுத சோதனைத் தளம் (பாலிகோன் எனப்படும் தளம்) மூடப்பட்டதை அனுசரிக்கின்றது.

## சிறு தொழிற்துறை தினம் – ஆகஸ்ட் 30

- சிறு தொழிற்துறைகளுக்கு ஆதரவளிப்பதற்காகவும் ஊக்கமளிப்பதற்காகவும் வேண்டி தற்பொழுதுள்ள சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்துறைகளுக்கு வேண்டிய சமமான வளர்ச்சியை அளிப்பதற்கான தனது முயற்சியின் ஒரு பகுதியாக ஒவ்வொரு ஆண்டும் தேசிய சிறு தொழிற்துறை தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் துறைக்காக ஒரு விரிவான கொள்கைத் தொகுப்பானது 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 அன்று அறிவிக்கப் பட்டது. இது இந்தியாவில் சிறு வணிக நிறுவனங்களுக்கு கணிசமான ஆதரவை அளிக்கின்றது.
- அப்பொழுதிலிருந்து அந்த அமைச்சகமானது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 30 ஆம் தேதியை சிறு தொழிற்துறை தினமாக அனுசரிக்க முடிவு செய்யப் பட்டது.




## ஆள்கடத்தலுக்கு உள்ளானவர்கள் மீதான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 30

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்தத் தினத்தை 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 21 அன்று அறிவித்தது.
- கடத்தல், தடுத்து நிறுத்தி வைத்தல், சிறை பிடித்தல் மற்றும் இதர காரணங்களினால் விருப்பமின்றி அல்லது கட்டாயமாக காணாமல் போனவர்கள் இந்தச் செயலுக்கு உள்ளாகியுள்ளனர்.
- இந்த ஆண்டானது ஆள்கடத்தலுக்கு உள்ளான அனைத்து நபர்களுக்கும் பாதுகாப்பு அளித்தல் என்பது தொடர்பான பிரகடனத்தின் 40வது ஆண்டு நினைவு தினத்தையும் ஆள்கடத்தலுக்கு உள்ளானவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தலுக்கான ஒப்பந்தத்தின் 10வது ஆண்டு நினைவு தினத்தையும் குறிக்கின்றது.



# இதரச் செய்திகள்

## மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் மரபணு வளங்கள்

- தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியம் மற்றும் ஐசிஏஆர் (The Indian Council of Agricultural Research) – தேசியத் தாவர மரபணு வளங்கள் அமைப்பு ஆகியவை மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் மரபணு வளங்களைப் பாதுகாப்பதற்காக வேண்டி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்தப் பாதுகாப்பானது தேசிய மரபணு வங்கியில் நீண்ட கால சேமிப்புத் தொகுதியாகவும் குறுகிய காலச் சேமிப்பிற்காக வேண்டி பிராந்திய நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட உள்ளது.

## டேனர்-ஒயிட்ஹவுஸ் 3 (TW3) சோதனை

- அகில இந்திய டென்னிஸ் மன்றமானது (AITA - All India Tennis Association) தேசிய அளவில் போட்டியிடும் அனைத்து இளையோர் விளையாட்டு வீரர்களுக்கும் வயது சரிபார்ப்புச் சோதனையை கட்டாயமாக்கியுள்ளது.
- மிகவும் புகழ்பெற்ற இந்த வயது சரிபார்ப்புச் சோதனையானது டேனர்-ஒயிட்ஹவுஸ் 3 (TW 3 - Tanner-Whitehouse 3) என்று அழைக்கப் படுகின்றது. இது AITAயினால் பரிந்துரைக்கப் பட்டுள்ளது மற்றும் பிசிசிஐயினால் பயன்படுத்தப் படுகின்றது.
- TW 3 ஆனது ஒரு குழந்தை எந்த நிலையிலான எலும்பு வளர்ச்சி இணைப்பை அடைந்துள்ளது என்பதைக் கண்டறிவதற்காக இடது கையில் X-கதிர் செலுத்தி சோதனை செய்யப் படும் ஒரு முன்னெடுப்பாகும்.




## 2 கடலோரக் கிராமங்களுக்கான யுனெஸ்கோ அங்கீகாரம்

- யுனெஸ்கோவானது ஒடிசாவின் 2 கடலோரக் கிராமங்களை "சுனாமி தயார் நிலை கொண்ட கிராமங்கள்" என்று அங்கீகரித்துள்ளது. இது சுனாமியை எதிர்கொள்வதற்கு வேண்டி அந்தக் கிராமங்கள் உருவாக்கியுள்ள ஒட்டுமொத்த தயார் நிலைக்காக வழங்கப் பட்டுள்ளது.
- வெங்கடராய்ப்பூர் மற்றும் நோலிஆசாகி ஆகியவை இந்த 2 கிராமங்களாகும்.

- ❖ இந்த அங்கீகாரத்தைப் பெறும் இந்தியாவின் முதலாவது மாநிலம் ஒடிசா ஆகும். இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்த அங்கீகாரத்தைப் பெறும் முதலாவது நாடு இந்தியா ஆகும்.




## தூய்மை வாரம் - ஆகஸ்ட் 10 முதல் 15 வரை

- ❖ இந்திய இரயில்வேயானது ஆகஸ்ட் 10 முதல் ஆகஸ்ட் 15 வரை "தூய்மை வாரத்தை" அனுசரிக்க முடிவு செய்துள்ளது.
- ❖ இது தேசியப் போக்குவரத்து அமைப்பிற்கான தூய்மையின் முக்கியத்துவம் மற்றும் சிறப்புகள் குறித்த ஒரு செய்தியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு

- ❖ ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீட்டின் படி, உலகின் நான்காவது பணக்கார நபர் முகேஷ் அம்பானி ஆவார்.
- ❖ அமேசான் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான ஜெம் பெசோஸ், மைக்ரோசாப்டின் இணை நிறுவனரான பில் கேமன் மற்றும் பேஸ்புக்கின் இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான மார்க் சுகர்பெர்க் ஆகியோர் இதில் முன்னிலையில் உள்ளனர்.
- ❖ இந்தப் பட்டியலில் உலகில் முதல் 10 செல்வந்தர்களில் இடம்பிடித்த ஒரே இந்தியர் முகேஷ் அம்பானி ஆவார்.
- ❖ ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு என்பது உலகின் பணக்கார நபர்களுக்கான ஒரு தினசரி தரவரிசையாகும்.

## அடல் பிகாரி வாஜ்பாயின் நினைவு (இறப்பு) தினம்

- ❖ 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 அன்று, இந்தியாவானது அடல் பிகாரி வாஜ்பாயின் நினைவு தினத்தை அனுசரித்தது.
- ❖ மத்தியப் பிரதேச மாநில முதல்வரான சிவராஜ் சிங் சௌகான் அவர்கள், குவாலியர்-சம்பல் விரைவழிப் பாதையானது ஸ்ரீ அடல் பிகாரி வாஜ்பாய் சம்பல் வளர்ச்சிப் பாதை என்று பெயரிடப் படும் என அறிவித்துள்ளார்.
- ❖ அடல் பிகாரி வாஜ்பாய் மருத்துவப் பல்கலைக்கழகமானது லக்னோவில் உள்ள ஒரு மாநிலக் கல்லூரி அளவிலான மருத்துவப் பல்கலைக்கழகமாகும். இது இந்த ஆண்டில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

## "யானைகள், பொருட்கள் அல்ல" அறிக்கை

- ❖ சர்வதேச விலங்கு நல அமைப்பான உலக விலங்குப் பாதுகாப்பு அமைப்பானது உலக யானைகள் தினத்தன்று (ஆகஸ்ட் 12) "யானைகள், பொருட்கள் அல்ல" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையின்படி, இந்தியாவானது ஆசியாவில் சுற்றுலாவிற்குப் பயன்படுத்தப் படும் யானைகளை அதிக எண்ணிக்கையில் இரண்டாவதாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த அமைப்பானது உலகில் விலங்குகளின் கொடுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இதன் தலைமையகம் இலண்டனில் அமைந்துள்ளது.

## 5 நினைவு அஞ்சல் தலைகள்

- ❖ இந்திய அஞ்சல் துறையானது பின்வரும் 5 நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது.
  - ○ வரலாற்றுச் சிறப்புமிக்க அகமதாபாத் நகரம் - சர்கேஜ் ரோசா
  - ○ கோவாவின் தேவாலயங்கள் மற்றும் கன்னி மாடம், போம் ஜீஸஸ் தேவாலயம்.
  - ○ பட்டாடக்கல் நினைவுச் சின்னங்கள் – கர்நாடகா
  - ○ கஜீராஹோ நினைவுச் சின்னங்கள் ஜவேரி ஆலயம் – மத்தியப் பிரதேசம்
  - ○ குதுப் மினார் மற்றும் அதன் நினைவுச் சின்னங்கள், தில்லி.
- ❖ இது இந்தியா-III என்ற பிரிவில் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியச் சின்னங்கள் குறித்து மேற்குறிப்பிட்ட அனைத்து அஞ்சல் தலைகளின் மிகச் சிறிய அளவிலான அட்டையையும் வெளியிட்டுள்ளது.
- ❖ சர்கேஜ் ரோசா என்பது 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்தியாவின் முதலாவது யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தலைநகரக் குறியீட்டைப் பெற்று உள்ளது.




## ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களில் கோவிட் – 19 காரணமாக ஏற்படும் இளைஞர் வேலைவாய்ப்புப் பிரச்சினைகளைக் கையாளுதல்

- ❖ இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில், அதாவது இந்த ஆண்டின் ஆறு மாதக் காலத்தில், 15 - 24 வயதிற்குட்பட்ட 6.1 மில்லியன் இளைஞர்கள் வேலையிழப்பார்கள்.

- இது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் ஏற்பட இருக்கும் மொத்த வேலையிழப்பில் 40% வேலையிழப்பாகக் கணிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவிற்கு அடுத்து பாகிஸ்தானில் ஏறத்தாழ 2.3 மில்லியன் இளைஞர்கள் தங்களது வேலையை இழக்க நேரிடுவர். இந்தோனேசியாவில் ஏறத்தாழ 1.9 மில்லியன் இளைஞர்கள் வேலையிழக்க நேரிடுவர்.
- இந்தியாவில் இளைஞர் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 32.5% என்ற அளவை நெருங்க உள்ளது. இப்பிராந்தியத்தில் உள்ள 13 நாடுகளிடையே இது மூன்றாவது மிகப்பெரிய வேலைவாய்ப்பின்மை விகிதம் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இலங்கை (37.8%) மற்றும் பிஜி (38.85) ஆகியவை மட்டுமே இந்தியாவை விட மிக அதிகமான அளவில் இளைஞர் வேலைவாய்ப்பின்மை விகிதத்தைக் கொண்டு உள்ளன.
- இந்த அறிக்கையானது ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றினால் கூட்டாக வெளியிடப் பட்டுள்ளது.

## உலக நீர் வாரம் 2020 : ஆகஸ்ட் 24 – 28




- 2020 ஆம் ஆண்டிற்கான உலக நீர் வாரமானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 முதல் 28 வரை இல்லங்களில் உலக நீர் வாரமாக (இல்லங்களில் உலக நீர் வாரம் - World Water Week at Home) அனுசரிக்கப் பட்டது.
- இது 1991 ஆம் ஆண்டு முதல் ஸ்டாக்ஹோம் சர்வதேச நீர்வளப் பயிற்சி மையத்தினால் ஒரு வருடாந்திர உலக நிகழ்வாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இல்லங்களில் உலக நீர் வாரத்தின் கருத்துரு, “நீர் மற்றும் காலநிலை மாற்றம் : செயல்திட்ட நடவடிக்கையைத் துரிதப்படுத்துதல்” என்பது ஆகும்.
- இது பூமியின் நீர்ப் பிரச்சினைகள் மற்றும் சர்வதேச வளர்ச்சி தொடர்பான பிரச்சினைகளைக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நுவாகாய் ஜுஹார்

- நுவாகாய் ஜுஹார் என்பது ஒரு விவசாயத் திருவிழாவாகும், இது நுவாகாய் பராப் அல்லது நுவாகாய் பெத்காட் என்றும் அழைக்கப் படுகிறது, இது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதி அன்று கொண்டாடப்பட்டது.
- இது மேற்கு ஒடிசா, தெற்கு சத்தீஸ்கர் மற்றும் சிம்டேகாவின் (ஜார்க்கண்ட்) அருகிலுள்ள பகுதி அகிய்வற்றுக்கான ஒரு திருவிழாவாகும்.

- ஒரு பருவத்தின் புதிய பயிர்க் காலத்தை வரவேற்பதற்காக வேண்டி இது கொண்டாடப் படுகிறது.
- நுவாகாய் என்பது இரண்டு சொற்களின் ஒரு கலவையாகும். இது புதிய அரிசி சாப்பிடுவதைக் குறிக்கிறது. 'நுவா' என்றால் புதியது என்பதையும் மற்றும் 'காய்' என்றால் சாப்பிடு என்பதையும் குறிக்கிறது.

## அன்னை தெரசாவின் 110வது பிறந்த நாள்




- அன்னை தெரசாவின் 110வது பிறந்த நாள் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26, அன்று அனுசரிக்கப் பட்டது.
- இவர் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் தேதி மாசிடோனியாவில் பிறந்தார், இவர் 1920களின் பிற்பகுதியில் இந்தியாவிற்கு வருகைத் தந்து, கல்கத்தாவின் செயின்ட் மேரி உயர்நிலைப் பள்ளியில் 15 ஆண்டுகள் வரலாறு மற்றும் புவியியல் பாடங்களைக் கற்பித்தார்.
- இவர் 1950 ஆம் ஆண்டில், ரோமன் கத்தோலிக்க மத திருச் சபையின் அடித்தளத்தை அமைத்தார், இது இப்போது பிறரன்பிற்கான பணியாளர்கள் சபை (மிஷனரிஸ் ஆஃப் சேரிட்டி) என்று பிரபலமாக அறியப்படுகிறது.
- 1979 ஆம் ஆண்டில் அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது, ஆனால் அவர் அதை ஏற்க மறுத்து, அந்தப் பரிசிற்கான 192,000 டாலர் பரிசுத் தொகையை இந்தியாவில் ஏழைகளுக்கு உதவுவதற்காக வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.
- மேலும் இவர்
  - 1962 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது
  - 1969 ஆம் ஆண்டில் சர்வதேச புரிதலுக்கான ஜவஹர்லால் நேரு விருது மற்றும்
  - 1980 ஆம் ஆண்டில் பாரத ரத்னா ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★